கோகுலம்


GOKULAM
நவம்பர் 2000 ரூ. 6/-




“ஆஸ்கார் வாங்க ஆசை!”

பிருந்தாவனம்

வரைந்து பழகுங்கள்






''தேன் ஒரு திரவப் பொருள்ன்னு ஏன் சொல்றே?''

''அதுதான் கொட்டுமே!''


— பாளை. பசும்பொன்

எந்தப் பட்டத்திற்கு எந்த நூல் சொந்தம்?



ஹா, ஹா!





புற்றை அடைய எறும்புக்கு வழி காட்டுங்கள்!



கோகுலம்

2000

நவம்பர்

மலர் : 18

இதழ் : 10

அன்புள்ள சிறுவர் சிறுமியரே,

தீபாவளி பட்டாசு வெடித்து, வாணங்கள் கொளுத்தி மகிழ்ந்திருப்பீர்கள். அதைவிட அதிகமாக யுவராஜ் சிங் கிரிக்கெட் மைதானத்தில் நடத்திய வாண வேடிக்கைகள் உங்களை சந்தோஷத்தில் ஆழ்த்தியிருக்கும்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக அடைந்த இருபது ரன் வெற்றி கிரிக்கெட்டில் ஒரு புதிய சுவாரஸ்யத்தை எல்லாருக்கும் ஏற்படுத்தியிருக்கிறது. 'மாட்ச் ஃபிக்ஸிங்' ஊழல் காரணமாக சோர்ந்திருந்த ரசிகர்கள் நிமிர்ந்து உட்கார்ந்திருக்கிறார்கள்.

யுவராஜ் சிங்கின் பேட்டிங் சாகஸம் மட்டுமல்ல; ஒரு அற்புதமான காட்சும், ஒரு அசாதாரண ரன் அவுட்டும் நமது அணியின் வெற்றிக்குப் பேருதவி புரிந்திருக்கின்றன. 'மேன் ஆஃப் தி மாட்ச்' பட்டத்தையும் யுவராஜுக்கு பெற்றுத் தந்துள்ளன. அவருடைய ஆற்றல் தொடர்ந்து மேன்மேலும் பிரகாசிக்க வாழ்த்துகிறோம். தொடரில் வெற்றி யாருக்கு என்பதை ஊகிக்க முடியாவிட்டாலும் இந்த அக்டோபர் 7ம் தேதி ஒரு நாள் ஆட்டம் வெகு காலத்துக்கு நினைவில் இருக்கும்.

இதில் ஒரு வேடிக்கை பாருங்கள்: மாட்ச் முடிந்ததும் யுவராஜ் தமது தகப்பனாருடன் (இவர் வேகப் பந்து வீச்சாளர்) ஃபோனில் பேசினார். அப்போது அவர் செஞ்சுரி போடும் வாய்ப்பை நழுவ விட்டதற்காக யுவ்ராஜை கோபித்துக் கொண்டாராம்!



• யுவராஜ் சிங்

எல்லா அப்பாக்களுமே இப்படித்தான் போலிருக்கிறது! கணக்கில் நூற்றுக்குத் தொண்ணூறு மார்க் வாங்கி வீடு திரும்புகையில், 'சே, ஒரே ஒரு கணக்கைத் தப்பாப் போட்டு, கனையாக நூற்றுக்கு நூறு மார்க் வாங்குகிற வாய்ப்பைத் தவற விட்டு விட்டாயே' என்றுதான் பல அப்பாக்கள் குறை பட்டுக் கொள்கிறார்கள்!

ஆனால் பரீட்சையில் நூற்றுக்கு நூறு மார்க் வாங்குகிற ஒரு மாணவன்கூட வேறு ஏதாவது ஒரு விஷயத்தில் (விளை யாட்டு, பொது அறிவு போன்ற ஏதேனும் ஒரு அம்சத்தில்) குறைபாடு உள்ளவனாகத்தான் இருப்பான். குறை இல்லாத மனிதனே கிடையாது.

ஏன், மாயக்கண்ணன் கூட, பாரதப் போரில் பாண்டவர் வெற்றி பெற சில தந்திரங்களைத்தான் கையாண்டான். அதனால் தருமர் பக்கம்கூட குறை ஏற்பட்டது. வாலியைக் கொன்ற விதத்தில் ராமபிரான் குறை உள்ளவராகவே சித்திரிக்கப்படுகிறார்.

எனவே, நமது குறைகளை நாம் உணர்ந்து கொள்வது முதல் அவசியம். அதனால் கர்வம் நீங்கி அடக்கம் உண்டாகும். குறைகளை நீக்கிக் கொள்ளவும் முதல் தேவை குறைகளை உணர்வதுதான். அடுத்ததாக நமது திறமைகளைப் புரிந்துகொண்டு அவற்றை மேன்மேலும் வளர்த்துக் கொள்ள முயற்சிப்பது.

இந்த இரண்டு விதங்களிலும் செயல்பட்டால் நீங்களும் ஒரு யுவராஜ் சிங் போல நாளைக்கு நீங்கள் தேர்ந்தெடுக்கும் துறையில் பிரகாசிப்பீர்கள்.

அன்புடன்,

கி. ராஜேந்திரன்
ஆசிரியர்.

...மிர்களிடத்தில் அன்பு
வேணும் - தெய்வம்
உண்மையென்று
தானறிதல் வேணும்.
- பாரதியார்.



• ஸ்வேதா

• விருது அளித்த ஜனாதிபதி தமது அன்பையும் வெளிப்படுத்துகிறார்...

"ஆஸ்கார் வாங்க

சின்னஞ் சிறு வயதிலேயே தேசிய விருது மற்றும் சர்வதேச விருதுகளைப் பெற்றிருக்கும் குட்டி நட்சத்திரம் ஸ்வேதா.

இரண்டு வருடங்களுக்கு முன்பு 'மல்லி' என்ற திரைப் படத்தில் நடித்ததற்காக தேசிய விருது பெற்றவர். இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் குடியரசுத் தலைவர் கே.ஆர்.நாராயணனிடமிருந்து அந்த விருதை வாங்கினார்.

'மல்லி' திரைப் படத்தைப் பற்றி ஸ்வேதா கூறுகிறார்:

''ஆதிவாசி குழந்தையின் எண்ணங்கள், ஆசைகள்தான் படத்தின் கதை. ஆதிவாசிகளைப் பற்றி நான் கேள்விப்பட்டதுகூட கிடையாது. படப்பிடிப்பிற்கு முன் டைரக்டர் சந்தோஷ் சிவன் அங்கிள்தான் முதுமலைக் காட்டிற்கு அழைத்துச் சென்று ஆதிவாசிகளைச் சந்திக்க வைத்தார். படப்பிடிப்பும் அங்குதான் நடந்தது. பதிமூன்றே நாட்களில் மல்லி படம் எடுக்கப்பட்டது. படப்பிடிப்பு நடக்கும்போதே நான் நல்லா பண்ணுவதாகவும்; விருது வாங்குவேனென்றும் எல்லோரும் சொன்னார்கள். நான் நல்லா நடிக்கிறேன். விருது வாங்குவேன்னு எல்லாம் எனக்குத் தோணலை.

''மல்லி படத்துக்காக எனக்கு தேசிய விருது மட்டுமின்றி சர்வதேச திரைப்பட விருது மற்றும் போலந்து திரைப்பட விருதும் கிடைத்திருக்கிறது. எல்லோரும் பாராட்டறாங்க. சந்தோஷமா இருக்கு.''

ஆரம்பத்தில் டி.வி சீரியல்களில் நடித்த ஸ்வேதா, மல்லி படத்திற்குப் பின் அதை நிறுத்தி விட்டார். அது மட்டுமின்றி கமர்சியல் படங்களிலும் நடிக்க மாட்டாராம்! நடிப்பிற்குத் தீனி போடுகிற, கலைப்படங்களில் மட்டும்தான் நடிக்கப் போவதாகச் சொன்னார்.

நடிப்பு மட்டுமின்றி பாட்டும் வீணையும் கற்று வருகிறார். நடனமும் தெரியும். இது தவிர பெயிண்டிங் பண்ணுவது,

கைவினைப் பொருட்கள் செய்வது இவரது ஹாபி. புத்தகங்கள் வாசிப்பதிலும் ஆர்வம் அதிகம். பீர்பால், தெனாலிராமன் கதைகள் மற்றும் காமிக்ஸ் ரொம்ப இஷ்டம்.

நடிப்பு, மாடலிங், பாட்டு, வீணை என செய்து வரும் ஸ்வேதா படிப்பில் எப்படி? படிப்பிலும் முதல்தான். "வகுப்பில் நடத்தும் பாடங்களை உன்னிப்பாகக் கவனித்து விடுவேன். அதனால் வீட்டில் அதிக நேரம் படிப்பிற்கு ஒதுக்க மாட்டேன். எனவே நிறைய நேரம் கிடைக்கிறது. இது போட்டி நிறைந்த உலகம். ஒவ்வொருத்தரும் படிப்புடன் ஏதாவது கற்றுக் கொண்டால் எதிர்காலத்தில் உதவும்" என்கிறார். சென்னை பாண்டிபஜாரில் உள்ள ஹோலி ஏஞ்சல்ஸ் பள்ளியில் ஆறாம் வகுப்பு படிக்கிறார்.

மூன்றாம் வகுப்பு படிக்கும்போதே நடிக்க ஆரம்பித்த ஸ்வேதா எதிர்காலத்தில் எந்தத் துறையில் பிரகாசிப்பார்? "நிச்சயமாக படிப்பில்தான். எனக்கு டாக்டர் ஆக வேண்டும் என்பது லட்சியம். அதற்காக நடிக்க மாட்டேன் என்பதில்லை. மல்லி மாதிரி நல்ல படங்களில் எப்போது வேண்டுமானாலும் நடிப்பேன்."

சின்ன வயதிலேயே நிறைய விருதுகளைக் குவித்தவரின் எதிர்கால ஆசை 'ஆஸ்கார் அவார்ட்' வாங்குவதுதானாம்.

படங்களில் வாயாடிப் பெண்ணாகக் காட்சி தரும் ஸ்வேதா நிஜத்தில் சாது! இரவில் படப்பிடிப்பு நடக்கும்போது கூட சுறுசுறுப்பாகவும் உற்சாகமாகவும் நடிப்பாராம்.

விளையாட்டில் ஆர்வம் இல்லை என்றாலும் ஷட்டில்காக் விளையாடுவதுண்டாம்! ஐஸ்கிரீம், சாக்லேட், கரடி பொம்மைகள் ரொம்பவும் பிடிக்குமாம்.

டிசம்பர் மாத விடுமுறையில் மலையாளப் படம் ஒன்றில் நடிக்க விருக்கிறார். தமிழ், ஆங்கிலம், ஹிந்தி ஆகிய மொழிகள் நன்றாகத் தெரியும். மலையாளம், தெலுங்கு ஓரளவு தெரியும் என்கிறார்.

டாக்டர் ஆக வேண்டும் என்ற லட்சியத்துக்கும் ஆஸ்கார் ஆசைக்கும் வாழ்த்தி விடை பெற்றவுடன் கரடி பொம்மைகளை நோக்கி விரைந்தார்!

ஆசை!”

அட்டையில் : **ஸ்வேதா**

வண்ணப்படம்: **ஸ்ரீஹரி**

கோகுலம்

நவம்பர் 2000 இந்த இதழில்...

"மருத்துவப் படிப்பு வேண்டாம்!"



1922ம் ஆண்டு சீர்காழியில் (இப்போது நாகை மாவட்டம்) நான் பிறந்தேன். என் தந்தை டி.எஸ். பாலசுப்பிரமணியம் அங்கே அரசு மருத்துவராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். நான் பிறந்த சிறிது நாட்களில் என் தந்தைக்கு ராமநாதபுரத்துக்கு மாற்றல் வந்துவிட்டது. பிரிட்டிஷ் அரசின் கீழ் அடிமைத்தனமாக வேலை செய்வது பிடிக்காமல் ராஜினாமா செய்து விட்டுத் திருச்சியில் வந்து குடியேறி விட்டார் தந்தை. ராமநாதபுரத்தில், ராமமூர்த்தி என்று ஒரு உதவி கலெக்டர் இருந்தார். தந்தைக்கு நெருங்கிய நண்பர். அவரது ஞாபகமாகத்தான் எனக்கு ராமமூர்த்தி என்று பெயர் சூட்டப்பட்டது.





என்னோடு பிறந்தவர்கள் மூன்று சகோதரர்கள், ஒரு சகோதரி. இதில் என் இளைய சகோதரர்கள் இருவர் குழந்தையிலேயே இறந்து போனார்கள். தந்தைக்கு இரக்க குணம் அதிகம். வைத்தியம் பார்த்துக்கொண்டு "ஐயா... காசு இல்லை" என்று சொன்னாலும் வருத்தப்பட மாட்டார். மாட்டு வண்டியில் சுற்று வட்டார கிராமங்களுக்குச் சென்று இலவசமாக கிராம மக்களுக்கு வைத்தியம் பார்ப்பார். இப்படி தர்ம சிந்தனையோடு செயல்பட்டதால் விரைவில் திருச்சி நகர முக்கியப் பிரமுகர்களில் ஒருவராக உருவாகி விட்டார் தந்தை.

என் சிறு வயது நிகழ்ச்சிகளை அசைபோடும் போது என் தந்தை வழி தாத்தா காளஹஸ்தி அய்யரைப் பற்றி சொல்லாமல் இருக்க முடியாது. அரசாங்கத்தில் தாசில்தார் பொறுப்பை வகித்தவர். நேர்மையின் சின்னம்.

அந்தக் காலத்தில் தாசில்தார் என்றால், மளிகை சாமான், காய்கறிகள் எல்லாம் இலவசமாகக் கிடைக்கும். ஆனால் எதையும் வாங்க மாட்டார் அவர். அவரது வாழ்க்கை முறை வித்தியாசமானது. காலையில் மூன்றரை மணிக்கு எழுந்து கத்தாழை சாப்பிடுவார். பின்பு ஐந்தரை மணிக்கு இரண்டு தோசையும் தொட்டுக்க சுண்டைக் காயும் வைத்துக் கொள்வார். அவருக்கு உடலில் சர்க்கரை நோயிருந்ததால்தான் இந்த உணவுப் பழக்கம். இரவு என்னையும் என் தம்பி கிருஷ்ணமூர்த்தியையும் இரு பக்கமும் படுக்க வைத்துக்கொண்டு, வீர தீர செயல்களை விளக்கும் கதைகளைச் சொல்லுவார். பாதி கேட்கும்போதே தூங்கி விடுவோம். தாத்தாவுடன் பிறந்த சகோதரர்தான் ஜி. சுப்பிரமணிய அய்யர். இவர்தான் 'இந்து' நாளிதழைத் துவக்கியவர்.

திருச்சியில் நாங்கள் ஆண்டாள் தெருவில் குடியிருந்தோம். எனக்கு அப்போது மூன்று வயது இருக்கும். காவிரி கரையை உடைத்துக்கொண்டு நகரில் புகுந்துவிட்டது. பக்கத்துத் தெருவில் முழங்காலளவு வெள்ளம். அப்பா என்னையும் தம்பியையும் கூட்டிக்கொண்டு போய் வெள்ளத்தைக் காட்டினார். எனக்கு ஐந்து வயதாக இருக்கும்போது என் தாய் இறந்து விட்டார். அதன்பிறகு புதுக்கோட்டையைச் சேர்ந்த சாவித்திரி என்பவரை என் தந்தை இரண்டாவது திருமணம் செய்துகொண்டார். அவரை 'சின்னம்மா' என்றுதான் கூப்பிடுவோம். பெற்ற தாய்க்கும் மேலாக பாசத்துடன் எங்களை வளர்த்தவர் அவர்தான். அந்தக் காலகட்டத்தில்தான் எங்கள் வீட்டிற்கு மின்சாரம் வந்தது. அதனால் ஏற்பட்ட பிரமிப்பு அடங்க நீண்ட காலம் ஆயிற்று. வைதீஸ்வரன் கோயில் வைத்தியநாத சுவாமி தான் எங்கள் குல தெய்வம்.

திருச்சியிலேயே மிகவும் சிறந்த பள்ளியென்று பெயர் பெற்ற இ.ஆர். பள்ளியில்தான் படித்தேன். பள்ளி நினைவுகளைச் சொல்லிக் கொண்டே இருக்கலாம்.

மேற்கத்திய பாணியில் உடை, உடுத்திக்கொண்டு வருவார் இளைஞரான விஞ்ஞான ஆசிரியர் அனந்த சுப்பிரமணியன். அவருடைய உறவுக்காரப் பையன் சிவன் என் நெருங்கிய நண்பன். வகுப்பில் நானும் அவனும் சேர்ந்து அடிக்கும் லூட்டிக்கு அளவே இல்லை. 'உறவுக்காரன்' என்று பார்க்காமல் சிவனுக்கும் தண்டனை கொடுப்பார் ஆசிரியர். முதலில் பெஞ்ச் மேல் எங்களை ஏறி நிற்கச் சொல்லுவார். அப்போதும் நாங்கள் சள, சளவென்று பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்து 'டெஸ்க் மேலே ஏறி நில்லுங்க' என்பார். விஞ்ஞான வகுப்புகளில் பலமுறை டெஸ்க் மேல் நின்றே படிப்பதும், எழுதுவதுமாக இருந்திருக்கிறோம். வரலாறு, புவியியல் எடுத்த நரஸிம்ம அய்யங்கார், ஆங்கிலம் எடுத்த ராமானுஜ அய்யங்கார் ஆகியோர்கள் போட்ட அடித்தளத்தில்தான் வாழ்க்கையில் உயர்ந்தோம் என்று சொல்வதில் நான் பெருமை அடைகிறேன்.

தலைமையாசிரியர் நடராஜ அய்யர் அப்பாவின் நண்பர். கசப்பான கணக்குப் பாடத்தைக்கூட அட்டகாசமாக





எடுப்பார். அவருக்குப் 'பிரம்படி' ஹெட் மாஸ்டர் என்று செல்லமாகப் பெயர் உண்டு. பிரம்பும் கையுமாக சுற்றிக் கொண்டிருப்பார். டிரில் மாஸ்டர் அருணாசல அய்யர் பயங்கர ஸ்டிரிக்ட். அவர் மாணவர்களுக்குத் தண்டனை கொடுப்பதே வித்தியாசமாக இருக்கும். தவறு செய்யும் மாணவனை அவனது இரு கைகளாலேயே அவனது இரு கன்னங்களிலும் 'பளார்' என்று சத்தம் வருமாறு அடித்துக் கொள்ளச் செய்வார். அவர் சொல்லும்போதுதான் அடித்துக் கொள்வதை நிறுத்த வேண்டும்.

நான், என் நண்பர்கள் சிவன்,



என் குழந்தைப் பருவம்


நரம்பியல் நிபுணர்

டாக்டர் **பி. ராமமூர்த்தி**


கந்தசாமி ஆகிய மூவரும் ஒன்றாகவே சுற்றிக் கொண்டிருப்போம். வீட்டு வேலை ஒன்றும் நான் செய்ய மாட்டேன். கடைக்குப் போவது போன்ற சின்னச் சின்ன வேலைகளை என் தம்பிதான் செய்வான். எங்கள் 'மூவர்' கூட்டணியை 'ரவுடி கூட்டம் என்று அன்பாகச் சொல்லுவார்கள் ஆண்டாள் தெருவாசிகள். ஊமை திரைப்படங்கள் அப்போதுதான் திருச்சிக்கு வந்திருந்தன. அப்பாவிடம் ஒரு அணா வாங்கிக் கொண்டு தியேட்டரில். தரையில் உட்கார்ந்து படம் பார்ப்போம். பெரும்பாலும் ஆங்கிலப் படங்கள்தான். அந்தப் படங்களைப் பார்த்துவிட்டு வகுப்பில் மற்ற நண்பர்களிடம் பல நாட்கள் அது பற்றியே பேசிக் கொண்டிருப்போம். திரையில் வரும் கதாபாத்திரங்கள் இந்த வசனத்தைத்தான் பேச வேண்டும் என்று நாங்களே எங்கள் கற்பனையிலிருந்து வசனங்களை எடுத்து விடுவோம். அப்போது என் கூடப் படித்த நண்பர் பழனியாண்டி. ஏழைக் குடும்பத்திலிருந்து வந்தவர். பின்னாட்களில் படிப்பைத் தொடர முடியாமல் பஸ் கண்டக்டராக வேலையில் சேர்ந்தார். அப்புறம் காங்கிரஸில் சேர்ந்து சுதந்தரப் போராட்டத்தில் கலந்துகொண்டு சிறை சென்றார். தமிழக காங்கிரஸ் தலைவராகவும் பொறுப்பிலிருந்திருக்கிறார்.

நாங்கள் 'வால்' தனம் செய்துகொண்டு அலைந்து கொண்டிருந்தாலும் ப்ரவசனம், கதாகாலட்சேபம் என்றும் செல்லுவோம். குறிப்பாக மாயவரம் சிவராம சாஸ்த்திரிகளின் கதா காலட்சேபம், மாங்குடி சிதம்பர பாகவதரின் ஹரிகதா காலட்சேபம் ஆகியவற்றிற்கு ஆர்வத்துடன் செல்லுவோம். அப்பாவுக்குத் தமிழ் ஆர்வம் அதிகம். கம்பராமாயண பாடல்கள் அவருக்கு அத்துப்படி. நான் ஆறாம் வகுப்பு படிக்கும்போது என்னை சமஸ்கிருதம் கற்றுக் கொள்ள மாலை வகுப்பில் சேர்த்து விட்டார்கள். ஆனால் தமிழின் மீது இருந்த ஆர்வம் எனக்குக் குறையவில்லை. 'ஆழி சூழ் உலகமெல்லாம் பரதனே ஆள' என்று துவங்கும் கம்பராமாயணப் பாடலை பொழிப்புரையுடன் சொல்லிப் பேச்சுப் போட்டியில் பரிசும் வாங்கியிருக்கிறேன்.

அப்போது திருச்சியில் இரண்டு பஸ் கம்பெனிகள் இருந்தன. திருச்சி – ஸ்ரீரங்கம் டிரான்ஸ்போர்ட் என்று ஒன்று. TST என்று சொல்வார்கள். இந்த பஸ்கள் அடிக்கடி மக்கர் ஆகி நடுவழியில் நின்றுவிடும். எனவே இந்தக் கம்பெனி பஸ்களைத் "தள்ளுங்க(T) ஸார்(S) தள்ளுங்க(T) (TST) வர்றாண்டா" என்று கிண்டலடிப்போம். மற்றொரு பஸ் கம்பெனி TVS. இந்தக் கம்பெனிக்காரர்கள் "தள்ள (T) வேண்டாம்(V) ஸார்(S) (TVS)" என்று சொல்லி பயணிகளை நிறுத்தங்களில் அழைப்பார்கள். இந்தப் போட்டி வேடிக்கையாக இருக்கும்.



என் மூத்த சகோதரி லீலாவதிக்குப் பதினைந்து வயதிலேயே திருமணம் நடந்து விட்டது. கிட்டத்தட்ட ஒரு மாதம் எங்கள் தெருவே களைகட்டி



இருந்தது. நகரின் முக்கியப் பிரமுகராக அப்பா இருந்ததால், கலெக்டர் துரை (ஆங்கிலேயர்) மற்றும் மாவட்ட அதிகாரிகள் தவிர சுற்றுவட்டார கிராமங்களிலிருந்து அப்பாவிடம் வைத்தியம் பார்த்துக் கொள்பவர்களும் வந்திருந்தார்கள்.

பள்ளி இறுதி வகுப்பு படிக்கும்போதே டைப்ரைட்டிங் பாஸ் செய்துவிட்டேன். இறுதித் தேர்வில் மாநிலத்திலேயே இரண்டாவதாக வந்தேன். செயிண்ட் ஜோஸப் கல்லூரியில் இடம் கிடைப்பதில் பிரச்னையில்லை. கணிதம், பௌதீகம், ரசாயனம் பாடங்களை எடுத்து இண்டரில் சேர்ந்தேன். என் லட்சியம் இண்டர் முடித்தவுடன் பி.எஸ்.ஸி ஹானர்ஸ் பௌதீகம் படித்து ஐ.சி.எஸ் (கலெக்டர்) பரீட்சை எழுதுவது. ஐ.சி.எஸ். பதவியின் மீது எனக்கு ஆசை வந்தததற்குக் காரணம், அந்தப் படிப்பு முடித்த கலெக்டர்கள் செய்யும் அதிகாரங்கள். அப்போது திருச்சியில் கலெக்டராக இருந்த ஆங்கிலேய துரை குதிரைகள் பூட்டிய சாரட்டில் அமர்ந்து நகரை வலம் வர, பின்னால் அவரது பரிவாரங்கள் பவ்யமாக நடைபோட்டு வரும் காட்சியை அடிக்கடி பார்த்து பார்த்து, ஐ.சி.எஸ் படித்து கலெக்டர் ஆவது என்ற வெறியோடு இருந்தேன் என்று கூடச் சொல்லலாம். மற்றொரு காரணம் ஒரு கலெக்டர் என்பவர்தான் நினைத்தால் மக்களுக்கு எல்லாவிதமான நன்மைகளையும் செய்ய முடியும்.

இண்டர் முடித்தவுடன்தான் பிரச்னை துவங்கியது. அப்பா மிகவும் பிடிவாதமாக நான் மருத்துவம் படித்தே ஆக வேண்டுமென்று சொல்லி விட்டார். எனக்கும் அவருக்கும் வாக்குவாதம். "டேய்... கலெக்டரானாக் கூட மேலே இருக்கும் மற்றொருவன் முன் கை கட்டி நிற்க வேண்டும்; ஆனால் மருத்துவர் தொழில் அப்படியல்ல; மக்கள் உன்னைத் தேடிக் கொண்டு வருவார்கள். அடிமை புத்தியைக் காட்ட வேண்டிய அவசியமில்லாத சுய தொழில் மட்டுமல்ல; சேவையும்கூட" என்று என்னை சம்மதிக்க வைத்தார். அப்பாவின் நண்பரும், பிரபல காங்கிரஸ் பிரமுகருமான டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜனும் மருத்துவராக வா.. என்று ஊக்கம் கொடுத்தார். 'சரி இவர்கள் நமது நன்மைக்காகத்தானே சொல்வார்கள்' என்று மருத்துவம் சேர முடிவு செய்தேன்.

அப்போதுதான் சென்னையில் ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி துவங்கியிருந்தார்கள். அதில் போட்டு விட்டார்கள். எனக்கு அப்பா படித்த சென்னை மருத்துவக் கல்லூரியில் படிக்க வேண்டுமென்று ஆசை. அதற்குள் டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன் சுகாதார அமைச்சராக பொறுப்புக்கு வந்திருந்தார். அவரது சிபாரிசில் சென்னை மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தேன். என் வாழ்வின் மற்றொரு அத்தியாயம் அங்கே துவங்கியது.

தொகுப்பு: **ப்ரியன்**

கொலம்பஸ் கண்டுபிடித்த அன்னாசி!

அன்னாசிப் பழத்தைப் பார்த்து இருப்பீர்கள். சாப்பிட்டு இருப்பீர்கள்.

அமெரிக்காவைக் கண்டுபிடித்த கொலம்பஸ்தான் அன்னாசிப் பழத்தையும் கண்டுபிடித்தார். ஆச்சரியமாக இருக்கிறதா? மேற்கு இந்தியத் தீவுகளில் ஏராளமாகக் கவனிப்பாரற்றுக் காட்டுச் செடியாக வளர்ந்து கிடந்த அன்னாசிதான் இவருக்கும் இவரது சக பிரயாணிகளுக்கும் அவர்களின் பயணக் காலத்தில் உணவாகவும், தாகம் தீர்க்கவும் பயன்பட்டது. அவர் தாயகம் திரும்பும்போது அன்னாசிப் பழத்தையும் தன் உடன் கொண்டு வந்தார். பிரபு வர்க்கத்தினர் அந்நாளில் தங்கள் அரண்மனைகளில் வளர்த்தனர். முதன் முதலாக அன்னாசிப் பழத்தைப் பார்த்த சார்லஸ் மன்னர் மிக்க மகிழ்ச்சியடைந்து இந்தப் பழத்தின் உருவத்தை அரண்மனை மாடியிலே சிற்பமாகச் செதுக்கி வைத்தார். அதை இன்றும் காணலாம்! இங்கிலாந்தில் முதல் தடவையாகப் பயிர் செய்த அன்னாசிப் பழத்தை மண்டியிட்டுக் கொண்டு மிகுந்த மரியாதையுடன் அரண்மனைத் தோட்டக்காரன் ஜான் ரோஸ் என்பவன் அரசனுக்குக் கொடுக்கும் ஓவியம் ஒன்று விண்ட்ஸர் மாளிகையில் இன்றும் உள்ளது.




ஐரோப்பிய நாடுகளில் பெருமை பெற்ற அன்னாசி அடுத்து ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா, இந்தியா, பசிபிக் சமுத்திரத் தீவுகள் ஆகிய இடங்களுக்குப் பரவத் தொடங்கியது. அன்னாசி இன்று ஹவாய்த் தீவுகளில்தான் அமோகமாக விளைகிறது. இந்தியாவில் அன்னாசி அஸ்ஸாமில் உள்ள ஷில்லாங்கில்தான் பெருமளவில் விளைகின்றது. கியூன் அன்னாசி வகைகள்தான் நம் நாட்டில் பிரசித்தி பெற்றவை. அன்னாசிப் பழத்தைத் தெலுங்கில் ஆனாஸா, கன்னடத்தில் அன்னாஸ், மலையாளத்தில் கயித சக்கா, வங்காளத்தில் அனராஸ், இந்தியில் அனனாஸ், ஆங்கிலத்தில் பைன் ஆப்பிள் என்கிறார்கள். பைன் ஆப்பிள் - ஆப்பிள் பழத்திற்கு நிகரான சத்துள்ள பழம்.

அன்னாசியில் வைட்டமின் சி நிறைய உள்ளது. உடலைக் குளிர்ச்சியாக வைத்துக் கொள்ள இப் பழம் உதவும். இருதய நோய், தொண்டை புண், உடல் வலி போன்றவற்றைக் குணப்படுத்தும். சிறுநீரகத்தில் உருவாகும் கல்லைக் கரைக்கவும், வயிற்றுப் பூச்சிகளை ஒழிக்கவும் அன்னாசிப் பழச் சாறு அரு மருந்து ஆகும். அன்னாசிப் பழத்தை நம் தமிழ்நாட்டில் வெவ்வேறு விதமாகச் சாப்பிடுகின்றனர்.

— எம். காமாட்சி பிரியதரிசினி,
பதினோராம் வகுப்பு,
எடப்பாடி, சேலம் மாவட்டம்.

குறுக்கெழுத்துப் புதிர்



இடமிருந்து வலம்


1. சிந்திக்கும் ஆற்றல் உடைய உயிரினம் (4)
3. சுவைகளில் ஒன்று. இதை யாரும் விரும்ப மாட்டார்கள் (4)
6. உண்மை (5)
7. வெற்றிலையுடன் சேர்த்துச் சாப்பிடப்படும் உவர்ப்புச் சுவையுடைய பொருள் (3)
9. இறக்கை முளைத்த கறையான் (3)
13. கர்ணனின் தாய் (3)
14. நெற்றியில் இட்டுக் கொள்ளும் சிவப்புப் பொடி (5)

வலமிருந்து இடம்

11. வேகமாக ஓடக் கூடியதும், சவாரி செய்வதற்குப் பழக்கப்பட்டதுமான விலங்கு (3)
16. மனத்திற்கு மகிழ்வைத் தராத உணர்வு (4)
18. இந்தியா நமது ________ (4)

மேலிருந்து கீழ்

1. மங்கலகரமானது. மருத்துவக் குணமுடையது (4)
2. இசைக் கருவிகளில் நாதத்தை எழுப்புவதற்காகக் குறுக்கே கட்டப்பட்டிருக்கும் மெல்லிய கம்பி (3)
4. கோதுமை, மைதா மாவுகளில் தயாரிக்கப்படும் ஒருவகை உணவு (5)
5. வில்லின் நாணில் வைத்து எய்யப்படுவது (3)
10. அல்லி ________ பார்த்து மலரும் (5)
12. பால கிருஷ்ணர் வளர்ந்த இடம் (4)



கீழிருந்து மேல்

8. ரயில் முதலியவற்றில் கட்டணம், வசதி அடிப்படையில் பகுக்கப்பட்டிருக்கும் பிரிவு (4)
15. பாம்பாட்டிகளிடம் இது இருக்கும் (3)
17. சுவை உணரும் உறுப்பு (3)
18. பூக்களில் ஒன்று. இதன் வாசனைக்குப் பாம்பு வரும் என்று சொல்வார்கள் (4)

— ஏ. தில்லைகோவிந்தன்,
பெரியதச்சூர்,
திண்டிவனம் வட்டம்.

விடை: 61 ம் பக்கம்

அந்த வேப்பங்கன்று இன்றுதான் தலையை நிமிர்த்தி நின்றது. நேற்று வைத்த கன்றுதான். பண்ணையிலிருந்து வரும்போது சற்று மயங்கிய நிலையில் இருந்தது. ஊன்றியபின் தண்ணீர் தெளித்ததும் மயக்கம் தெளிந்து எழுந்து நின்றது.

தென்றல் காற்று மெல்ல அதன் தலையைக் கோதிவிட்டது.

குளிர்ந்த காற்று மேலே பட்டதும் அது மகிழ்ச்சியால் ஆடியிருக்க வேண்டும். ஏனோ தெரியவில்லை. சோகமாக இருந்தது.

காற்று மீண்டும் வேப்பங்கன்றைச் சீண்டியது. கன்று வேறு வழியில்லாமல் மெல்ல மெல்ல ஒரு இயந்திரத்தைப் போல இங்கும் அங்கும் ஆடியது.

"ஏன் ஒரு மாதிரியாய் உள்ளாய். முகமெல்லாம் வாடிப் போய் இருக்கிறதே. உனக்கு என்ன ஆனது?" என்று காற்று கேட்டது.

வேப்பங்கன்று ஒன்றும் சொல்லாமல் மௌனமாக இருந்தது.

காற்று அன்புடன் அதன் தலையை வருடி, "நான் உனது நண்பன் என்பது உனக்குத் தெரியாதா? உன் மனதில் உள்ளதைச் சொல்லேன்'' என்று கேட்டது.

"நண்பா, இந்த வீட்டிற்குப் புதிதாக ஒருவர் வாட

சின்னப் பெண்ணும்







னார். நேற்று என்னை அவர் பண்ணையில் வாங்கிவந்து இங்கே நட்டார். அவர் மிகவும் நல்லவர். என்னை நன்கு கவனித்தார். நீர் ஊற்றி னார். ஒரு பிள்ளையைப் போல அன்பு பாராட்டினார்'' என்று பேசிவிட்டு நிறுத்தியது வேப்பங்கன்று.

"ஆஹா அவர் வாழ்க!" என்று பாராட் டியது காற்று.

''நானும் உன்னைப் போலத்தான் மகிழ்ந்தேன். நான் நேற்று மாலையே உன் னுடன் சேர்ந்து நடனம் ஆடிக் களித்தேன். ஆனால்...'' இழுத்தது வேப்பங்கன்று.

"என்ன ஆனால் என்று இழுக்கிறாய். உனக்கு என்ன நேர்ந்தது" என்று பரிவோடு கேட்டது காற்று.

"அதை ஏன் கேட்கிறாய்" என்று சற்று வேதனையோடு சொல்லத் துவங்கியது கன்று.

"இன்று காலைதான் அவரின் மனை வியும் மகளும் ஊரிலிருந்து வந்தார்கள். அவர்கள் இருவரும்

மரக்கன்றும்!

என்னைப் பார்த்து முகம் சுழித்தார்கள். அப்பாவைப் பார்த்துக் கோபமாகப் பேசினார்கள்."

"அப்பா இந்த இடத்தில் ஒரு ரோஜாச் செடி வைக்க வேண்டும் என்று கேட்டேன். என்ன ஆச்சு? என்றாள் சிறுமி. அவள் அப்பாவுக்குச் செல்லப் பெண் போலிருக்கிறது. மிகுந்த கோபத்துடன் பேசினாள்."

"இந்த இடத்தில் ஒரு வாழை மரம் வைக்க வேண்டும் என்று சொன்னேனே. உங்கள் புத்தி ஏன் இப்படிக் கெட்டுப் போய்விட்டது'' என்று அந்த அம்மா பொரிந்து தள்ளினார்.

''இந்தப் பகுதியில் நிழல் தரும் மரங்கள் எதுவும் இல்லை. எதிர் வீட்டில் உள்ள அந்த வேப்ப



மரம் மட்டும்தான் உள்ளது. இந்த இடம் ஒரு பெரிய மரம் வளரப் பொருத்தமான இடமாகத் தோன்றியது. எனவேதான் இந்தக் கன்றை வாங்கி வைத்தேன்'' என் றார் அவர்.

"தனது மனைவிக் கும் அந்தத் துடுக்கான சிறுமிக்கும் அவர் ஏன் இப்படி பயப்படு கிறார்?''

வேப்பங்கன்று இப்படி சொல்லி விட்டு சற்று நிறுத் தியது.

காற்று மெள்ளச் சிரித் தது.

''நீ சிறுபிள்ளை. முட் டாள்தனமாகப் பேசுகிறாய். வாழையும் ரோஜாவும் இங்கு வளர் வதில் என்ன தவறு இருக்கிறது? இதற் காகவா நீ சிணுங்குகிறாய்? உனக்கு அவற்றின்மீது பொறாமையா?'' என்று கேட் டது காற்று.

வேப்பங்கன்று தலையை இங்கும் அங்கும் ஆட்டி மறுப்பைத் தெரிவித்து.

''நினைத்தேன். ரோஜா என்றவுடன் உன் மனம் மாறிவிடும் என்று. ரோஜாப்பூ என்றால் உனக்குக் கொள்ளை ஆசை என் பது ஊர் அறிந்த செய்தி தானே. சொல் லப்போனால் உனக்கு நான்தான் அதிகம் நெருக்கமானவன். உன்னை நாங்கள்

முகம்மது ஹில்மி

தூய்மை செய்கிறோம். உனக்குக் குளிர்ச்சியைத் தந்து ஊரார் விரும்பும் இளம் தென்றலாய் வலம் வரச் செய்கிறோம். நீ மறந்திருக்கமாட்டாய் என்று எண்ணுகிறேன். நான் ஏன் பொறாமைப்பட வேண்டும்? பொறாமை எங்கள் மரபு இல்லை. என் வருத்தத்திற்கு அது காரணமல்ல. நேற்று நடந்தது வேறு.

"அந்தச் சிறுமியும் அவள் தாயும் என்ன சொன்னார்கள் தெரியுமா?" என்று கூறி நிறுத்தியது வேப்பங்கன்று. அதன் முகத்தில் சொல்லமுடியாத வருத்தம், வேதனை.

"அவர்கள் அப்படி என்னதான் சொன்னார்கள்?" காற்று சற்றுப் பொறுமை இழந்து கேட்டது. தவறான கேள்விகேட்டு வேப்பங்கன்றின் குழந்தை மனதைப் புண்படுத்தி விட்டோமோ என்ற வேதனை காற்றுக்கு. எனவே பரிவோடு கன்றின் தலையை வருடிக் கொடுத்தது.

"அவர்கள் இந்த வீட்டில் தற்காலிகமாகத்தான் இருக்கப் போகிறார்களாம். புதிய வீடு கட்டுமான வேலை முடிந்ததும் அங்கே குடியேறிவிடுவார்களாம். வாழையும் ரோஜாவும் உடனே கைமேல் பலன் தருமாம். நான் அப்படி இல்லையாம். நான் முழுமரமாக வளர்வதற்குப் பல ஆண்டுகள் ஆகுமாம். அப்பொழுது வேறு யாரோ தான் பயன்களை அனுபவிப்பார்களாம். அதனால் எனக்கு ஊற்றும் நீர் வீணாம். என்னை வளர்க்கும் முயற்சி பலனற்றதாம். எப்படி இருக்கிறது அவர்களின் பேச்சு?" என்றவாறு கன்று தன் கண்களைக் கசக்கிக் கொண்டது.

காற்று சிரித்தது.

"ஓஹோ அப்படியா செய்தி" என்றவாறு அந்த வீட்டை வலம் வந்தது. அந்தச் சிறுமி வாசலில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தாள். காற்று சற்று நேரத்திற்கு முன்புதான் பக்கத்து வீட்டு வேப்ப மரத்தின் அடர்த்தியான கிளைகளில் நன்கு விளையாடி விட்டு குளிரக் குளிர வந்துள்ளது.

அந்தச் சிறுமியின் மீது சிலீரென்று மோதியது.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த வேப்பங்கன்று கத்தியது.

"அந்தச் சிறுமியின் அருகே செல்லாதே அவள் நன்கு புழுங்கட்டும்"

கன்றின் இந்த மெல்லிய குரல் பக்கத்து வீட்டுப் பெரிய வேப்ப மரத்தின் காதில் எப்படியோ விழுந்து விட்டது.

"வேண்டாம் வேண்டாம். அவ்விதம் சொல்லாதே" என்று சரசரத்துச் சொன்னது. கன்றும் காற்றும் திரும்பிப் பார்த்தன.

"அறியாத கன்றே! நாம் அவ்விதம் நடந்தால் நமது பரம்பரைக்கே அது இழுக்காகும். நாம் ஆள்பார்த்து நிழல் தருவதில்லை. ஆள் பார்த்து குளிர் காற்றை வீசுவதில்லை. எல்லோருக்கும் சமமாகவே பயனளிக்கிறோம். அந்தச் சிறுமியின் மீது காற்றே நீ வழக்கம்போல் தவழ்ந்து விளையாடு," என்றவாறு சற்று வேகமாக மரம் சரசரத்தது.

காற்றின் குளுமையை அனுபவித்தவாறே சிறுமி படித்துக் கொண்டிருந்தாள்.

அம்மா ஒரு தட்டில் பப்பாளிப் பழத்தை நறுக்கிக் கொண்டுவந்து கொடுத்தாள். சிறுமி பழத் துண்டுகளை ஆவலுடன் எடுத்துச் சுவைத்துக் கொண்டே,


"அம்மா, இது எப்படி?" என்றாள்.

"முன்பு வீட்டில் இருந்தவர்கள் வளர்த்த மரம். நன்கு பழுத்திருந்தது. பறித்தேன். நன்றாக இருக்கிறதா?" என்று கேட்டாள் அம்மா.

"நன்றாக இருக்கிறது" என்றாள் சிறுமி.

"நன்றாக இருக்கும். நன்றாக இருக்கும். ஏன் இருக்காது. அடுத்தவர்களின் உழைப்பில் வந்ததாயிற்றே!" காற்று கன்றைப் பார்த்துச் சொன்னது.

அப்பா உள்ளே இருந்து ஓடி வந்தார்.



"உன் நண்பனை ரவியிடம் சேர்த்து வைக்க நீ என்னமோ தானம் செய்வதாகச் சொன்னியே, என்ன தானம்?"

"சமா'தானம்'தான்!"

— சி.விஜய்குமார்



''அந்தப் பழத்தைச் சாப்பிடாதே'' என்று கத்தினார்.

தாயும் மகளும் திகைத்து நின்றார்கள். காற்றும்கூட ஒரு நொடி வீச மறந்து நின்றது.

''யாரோ ஒருவர் தண்ணீர் ஊற்றி வளர்த்தார். பாதுகாத்தார். அதன் பலனை நீங்கள் எப்படி அனுபவிக்கலாம்?'' என்றார் அப்பா.

தாயும் சிறுமியும் வெட்கித் தலை குனிந்தனர்.

காற்றும் கன்றும் அவரை அன்பு பொங்கப் பார்த்தன.

''உங்களைப் போல ஒவ்வொருவரும் நினைத்திருந்தால் மரங்களை யாரும் வளர்த்திருக்க மாட்டார்கள். நெல்லையும் தானியங்களையும் கரும்பையும் வாழையையும் வளர்த்து உணவுக்குப் பயன்படுத்துவதோடு மனநிறைவு கொண்டிருப்பார்கள். ஆனால் மரங்கள்தான் மண் வளத்திற்கும் மழைக்கும் நமது ஆரோக்கியத்திற்கும் முக்கிய காரணம். மரங்கள் வளர்ப்பது ஒரு தொடர் முயற்சி. யாரோ ஒருவர் எப்பொழுதோ ஒரு மரம் நட்டார். அடுத்து வந்தவர் அதனை வளர்த்தார். அதற்கு அடுத்து வந்தவர் அதன் பலனை அனுபவிக்கிறார். நாம் பார்க்கும் பெரிய பெரிய மரங்களை யார் நட்டது? யார் நீர் ஊற்றி வளர்த்தது? நம்மால் கண்டுபிடிக்க முடியாது. அந்தப் பெயர் தெரியாத மனிதர்களுக்கு நாம் எவ்வளவு நன்றிக் கடன் பட்டிருக்கிறோம் தெரியுமா? இதில் நாம் சுய நலம் காட்டுவது என்ன நியாயம்?'' என்று சொல்லிவிட்டுச் சற்று நிறுத்தினார்.

அப்பா உணர்ச்சி வசப்பட்டிருக்க வேண்டும்.

''பக்கத்து வீட்டில் நிற்கும் அந்த வேப்ப மரத்தைப் பார். எவ்வளவு பெரியது. அதன் கிளைகள் வீட்டின் சுற்றுச் சுவரையும் தாண்டி வெளியே நிற்கிறது. அதற்கு எவ்வளவு பெரிய மனது. அதன் ஆரோக்கியமான இளம் காற்று, நீர் ஊற்றி வளர்க்கும் அந்த வீட்டுக்காரருக்கு மட்டும் பயன்படுவதில்லை. இப்பொழுது நம்மைத் தழுவும் காற்று அந்த வேப்ப மரம் அனுப்பியதுதான்'' என்றார்.

காற்றுக்கோ பெருமை தாங்க முடியவில்லை. அவரைப் பாராட்ட விரைந்து சென்ற வேகத்தில் அவரது தோளில் கிடந்த துண்டைத் தள்ளிவிட்டது.

''அந்த மரத்தைச் சற்றுப்பார். அதன்



''உன்கிட்ட 51 ரூபாய் கடனாக கொடுத்தால் 15 ரூபாய்தான் திருப்பித் தர்றீயே?''

''நீங்கதானே கடனைத் திருப்பி கொடுக்கச் சொன்னீங்க!''

– இ. லட்சுமி, விழுப்புரம்.

கிளைகளில் எத்துணை பறவைகள் வந்து இளைப்பாறுகின்றன. விளையாடி மகிழ்கின்றன. அதன் பழங்களைத் தின்று பசியாறுகின்றன. அதோ பார் காகங்களின் இரண்டு கூடுகள். தனது கிளைகளில் கூடு கட்டி வாழ அனுமதித்த அந்த மரத்திற்குத்தான் எவ்வளவு பெருந்தன்மை'' என்று சொல்லி நிறுத்தினார்.

மரக்கன்று அவரது வார்த்தைகளில் அப்படியே உருகிப் போனது.

அப்பா தனது மகளைக் கூர்ந்து பார்த்தார்.

''உனக்குத் தெரியுமா? இந்த மரத்திற்குப் போட்டியாக குளிர்ச்சி தரும் இயந்திரம் ஒன்றை மனிதன் கண்டுபிடித்திருக்கிறான்'' என்றார்.

சிறுமி புரியாமல் விழித்தாள்.

காற்றுக்கு ஆவல் பொங்கியது.

கன்று முடிந்த மட்டும் வளைந்து காது தாழ்த்திக் கேட்க முயன்றது.

''அப்படி ஒன்று உண்டா?''

எல்லோர் மனதிலும் கேள்வி.

அப்பா சற்று தூரத்தில் தெரிந்த பங்களாவின் மாடியைச் சுட்டிக் காட்டினார்.

அவர் காட்டிய திசையில் சிறுமி பார்த்தாள். ஒரு இயந்திரம் பாதி வெளியே தெரிந்தது. மீதி அறையின் உள்ளே இருக்க வேண்டும்.

கன்று எட்டி எட்டிப் பார்த்தது. முடியவில்லை.

அப்பா பேசத் துவங்கினார்:

காற்றும் கன்றும் தங்களது பேச்சை நிறுத்திவிட்டு அவரைக் கூர்ந்து கவனித்தன.

''மகளே, அந்த இயந்திரப் பெட்டி இருக்கும் அறையைப் பார்த்தாயா?'' என்றார்.

''ஆம் அப்பா எனக்குத் தெரிகிறது'' என்றாள்.

''அந்த அறைக்கு ஜன்னல்கள் இருக்கின்றனவா?'' என்று கேட்டார்.

அவரது கேள்விகள் புதிராக இருந்தன.

''ஜன்னல்கள் இருக்கின்றன. ஆனால் மூடியிருக்கின்றன. ஏன் அப்பா?'' என்றாள் சிறுமி.

''ஜன்னல்கள் மட்டுமல்ல. அந்த அறையின் கதவுகளும்கூட மூடியிருக்கும். அந்த வீட்டின் உரிமையாளர் அந்த அறைக்குள் யாரெல்லாம் வரவேண்டும் என்று விரும்புகிறாரோ அவர்கள் மட்டுமே உள்ளே செல்லலாம். குளிர்ச்சியை அனுபவிக்கலாம். குளிர்ச்சி அந்த அறையிலேயே சிறைப்பட்டிருக்கும். அதன் பலனை எல்லோரும் அனுபவிக்க முடியாது. அதுமட்டுமல்ல. இந்த இயந்திரத்தில் உள்ள வேதிப் பொருளால் இயற்கை அமைப்புக்குத் தீங்கு ஏற்படும் என்று அறிவியல் அறிஞர்கள் கூறுகிறார்கள்'' என்றார்.

சிறுமிக்கு வியப்பு, கண் சிமிட்டுவதைக் கூட மறந்துவிட்டு, கேட்டுக்கொண்டிருந்தாள்.

''மகளே, இப்பொழுது புரிகிறதா மரம் எவ்வளவு உயர்ந்தது என்று. அதனை நம் பிள்ளையைப் போல் பேணி வளர்க்க வேண்டியது நமது கடமையல்லவா?'' என்றார்.

காற்று மகிழ்ந்தது.

வேப்பங்கன்று உற்சாகத்தில் நடனமாடியது.

பெரிய வேப்பமரம் சலசலத்துப் பாடியது.


சிறுமி சிந்தித்தாள். தெளிவுபெற்றாள்.

பின்னர் உள்ளே ஓடினாள். ஒரு வாளித் தண்ணீரை மொண்டு வந்தாள். வேப்பங்கன்றைப் பரிவோடு பார்த்தாள். கன்றுக்கு நோகாமல் தண்ணீரை மெள்ளத் தெளித்தாள்.

வேப்பங்கன்றுக்கு ஏகப்பட்ட மகிழ்ச்சி.

காற்று சிறுமியின் தலையைச் செல்லமாக வருடியது.

செப்டெம்பர் இதழில் வெளியான க்விஸ் போட்டி சுலபமாக இருந்திருப்பதை பங்கு பெற்றவர்களின் எண்ணிக்கையிலிருந்து அறிய முடிகிறது. சரியான விடைகளை எழுதிய 20 பேர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.



கோகுலம் க்விஸ் முடிவு

ரூபாய் பத்து பரிசு பெறுவோர்

1. வெ. நடராஜன், திம்மராஜபுரம், திருநெல்வேலி மாவட்டம்.
2. வசந்தகுமாரி, சென்னை.
3. டி.ஜி. சிவப்ரியா, நான்காம் வகுப்பு, மாமல்லன் மெட்ரிக் பள்ளி, காஞ்சிபுரம்
4. ஆர். சம்பத்குமார், கோவை.
5. எஸ். வைத்தியநாதன், திருவாரூர்.
6. கே. கலைச்செல்வி, ஒன்பதாம் வகுப்பு, ஏ.வி. உயர்நிலைப் பள்ளி, பரமக்குடி.
7. மம்தா, வடக்கன்குளம், திருநெல்வேலி மாவட்டம்.
8. என். பாலசுப்ரமணியன், ஒன்பதாம் வகுப்பு, க.அ.மொ.பீ. மீரானியா உயர் நிலைப்பள்ளி, களக்காடு.
9. இந்திராணி, சோழபுரம்.
10. ஜி. கோபி, அரும்பாக்கம், சென்னை.
11. ரெ. சிவ அமிர்த நிவேதிதா, திருச்சி.
12. சு. ஜெயவிக்னேஷ் குமார், கோவிலூற்று அஞ்சல், நெல்லை மாவட்டம்.
13. இரா. சு. தேவநாராயணன், வத்திராயிருப்பு, விருதுநகர் மாவட்டம்.
14. மு. விஜயராகவன், கிருஷ்ணகிரி.
15. எ. சுஜாதா, தாம்பரம், சென்னை.
16. எம். முத்துசாமி, திருத்துறைப் பூண்டி, திருவாரூர் மாவட்டம்.
17. அ. கல்யாணசுந்தரம், ஒன்பதாம் வகுப்பு, க.அ.மொ. பீ. மீரானியா உயர்நிலைப்பள்ளி, களக்காடு.
18. ஜி. தமிழன்பன், ஐந்தாம் வகுப்பு, ஊ.ஒ.தொ.பள்ளி, வாழைப்பந்தல், வேலூர் மாவட்டம்.
19. எம்.கே. பாலசுந்தர், விக்கிரம சிங்கபுரம்.
20. பி. சுரேந்திரன், பாபநாசம், தஞ்சை மாவட்டம்.


சரியான விடை

1. முன்பு கிழக்கு ஜெர்மனியையும் மேற்கு ஜெர்மனியையும் பெர்லின் சுவர் பிரித்துக்கொண்டிருந்தது.
2. உமிழ்நீர் உணவை ஜீரணம் செய்ய உதவுகிறது.
3. அந்தக் காலத்தில் செய்திகளை அனுப்ப புறா பயன்பட்டது.
4. சாக்ரட்டீஸின் மாணவர். அரிஸ்டாட்டிலின் ஆசிரியர் கிரேக்க தத்துவஞானி பிளாட்டோ.
5. போரில் காயம் அடையும் வீரர்களுக்கு உதவி செய்யும் நிறுவனம் செஞ்சிலுவை சங்கம்.
6. மீன் இனங்களில் மிகப் பெரியது சுறா.
7. திருவள்ளுவரின் மனைவி வாசுகி.
8. மலைகளின் அரசி என அழைக்கப்படும் தமிழ்நாட்டு கோடைவாசஸ்தலம் ஊட்டி.
9. பாகிஸ்தானின் தலைநகரம் இஸ்லாமாபாத்.
10. பென்சிலின் எழுதும் பகுதி கிராஃபைட்டிலிருந்து தயாரிக்கப்படுகிறது.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்.
கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.


கரடிகள்


ஆழி



காட்டில் வாழும் விலங்கு கரடி. அது தாவர உணவையும் சில சமயம் மாமிச உணவையும் உண்ணும். சுமார் 50 ஆண்டுகள் உயிர் வாழும்.


கரடிகளில் பல இனங்கள் உண்டு. அவை கறுப்பு, வெள்ளை, பழுப்பு, சாம்பல் நிறங்களிலும் இருக்கின்றன!






கரடிகளுக்குப் பார்வைச் சக்தியும் மோப்பச் சக்தியும் அதிகம். 1 கி.மீ. தூரத்திற்கு அப்பால் உள்ள தம் இரையை அவற்றால் பார்க்கவும் முடியும், மோப்பத்தினால் அறிந்து கொள்ளவும் முடியும்!

கரடிகளுக்குத் தேன் மிகவும் பிடித்தமான உணவு. தேன்கூட்டை எடுக்கும்போது தேனீக்கள் கொட்டும். ஆனால் தேனீக்களின் விஷம் கரடிகளைப் பாதிப்பதில்லை!






தேனைப் போலவே கரடிகளுக்குக் கறையான்களும் பிடித்தமான உணவு. அவை கறையான் புற்று களைச் சிதைத்து, மூக்குத் துவாரங்களை மூடிக் கொண்டு கறையான் புற்றுக்குள் வாயை வைத்து உறிஞ்சி கறையான்களைத் தின்னுகின்றன.




கரடிக்குக் கூர்மையான வளைந்த நகங்களும் அழுத்தமான பாதங்களும் உண்டு. அதனால் சுலபமாக அது மரம் ஏறும். நீரில் நன்றாக நீந்தும்.



கறையான்களை உறிஞ்சி உட்கொள்வதற்கு வசதியாகக் கரடிக்கு மேல் தாடையில் முன் வரிசைப் பற்கள் இல்லை!





கரடி தாகம் ஏற்படும்போது நீர் கிடைக்கா விட்டால், வறண்ட ஆற்றின் மணலைத் தோண்டி, நீர் ஊறியதும் குடிக்கும்!




பனிக் காலத்தில் கரடி குகையில் படுத்து இரை ஏதும் இல்லாமல் 4 அல்லது 5 மாதங்கள் ஒரேயடியாகத் தூங்கும். அதற்கு முன், கோடைக் காலத் தில், நிறையச் சாப்பிட்டு விடும்! கொழு கொழு என்று இருக்கும்!

அலாஸ்காவில் உள்ள பழுப்புக் கரடிதான் கரடி இனங்களில் மிகவும் பருமனானது. அது சுமார் 2·5 மீட்டர் நீளமும் 600 கிலோ எடையும் இருக்கும்.







கோடியாக் தீவில் உள்ள கோடியாக் கரடிதான் மிகவும் பெரியது. நீளம் சுமார் 3 மீட்டர்!




கரடியின் குட்டி, பிறந்தவுடனே நம்ப முடியாத அளவுக்கு மிகவும் சிறியதாக இருக்கும். சாதாரணமாக ஒரு பசுவின் அளவுள்ள ஒரு கரடியின் குட்டி, ஓர் எலியின் அளவுதான் இருக்கும்!








வேறு எந்தப் பிராணிக்கும் இல்லாத பழக்கம் இமாலயக் கருங்கரடிகளுக்கு உண்டு. அவை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்லும் போது, முதலில் ஆண் கரடி செல்லும்; அதைத்தொடர்ந்து பெண் கரடி செல்லும். அவற்றுக்குப் பின்னால், அவற்றின் குட்டிகளில் மூத்ததும், அதற்குப் பின்னால் படிப்படியாக வயதுக் கேற்றபடி மற்ற குட்டிகளும் போகும். கடைசியாகப் போவது கடைக்குட்டிதான்!




துருவக் கரடி சுமார் 2·5 மீட்டர் உயரமும் 400 கிலோ எடையும் இருக்கும். அதன் பாதங்களின் அடியில் உரோமங்கள் வளர்ந்திருப்பதால், பனிக்கட்டித் தரையில்கூட அது வழுக்கி விழாமல் நடக்கும். நடக்கும் வேகம் மணிக்கு 40 கி.மீ. அதன் இரைப் பழக்கம் விநோதமானது. கோடைக் காலத்தில் அது தாவர உணவை மட்டுமே உண்ணும். மழைக் காலத்தில் மீன்கள், சீல்கள் போன்ற மாமிச உணவை மட்டுமே உண்ணும்!




துருவக் கரடி தனக்கு எந்த இரை கிடைத்தாலும் முதலில் குட்டிகளுக் குத் தான் கொடுக்கும். குட்டிகள் தின்றது போக மீதி இருந்தால்தான் அது தின்னும். மீதி இல்லாவிட்டால் பட்டினிதான்.



உலகில் எல்லா கரடிகளும் தாக்குவதற்கு அல்லது எதையும் பிடிப்பதற்குத் தம் முன் பக்கத்து வலது காலைப் பயன்படுத்து கின்றன. ஆனால் வட துருவத்தில் உள்ள துருவக் கரடிகள் அனைத்துமே தம் இடது காலைப் பயன்படுத்துகின்றன!




ஆஸ்திரேலிய கோலாக் கரடி தண்ணீரே குடிக்காது. யூகலிப்டஸ் மர இலைகளை மட்டுமே தின்னும். எனவே அதன் மாமிசத்தில் யூகலிப்டஸ் எண்ணெய் வாடை இருக்கும். அதை வேறு எந்தப் பிராணியும் தின்பதில்லை!



ஸ்லோத் என்னும் கரடி வாழ்நாள் முழுவதும் மரங்களில்தான் வசிக்கும்! ஒரு மரத்திலிருந்து அடுத்த மரத்திற்குப் போகும்போது மட்டுமே கீழே இறங்கும்!


உலகில் தினமும் அதிக நேரம்— 18 மணி நேரம்— தூங்கும் பிராணி ஸ்லோத் என்னும் கரடிதான்! அது தலைகீழாகவே தூங்கும்!



காதுக்குள் சென்ற எறும்பை எப்படி எடுப்பது?

டாக்டர் கு. கணேசன்

நிற்கக் கூடிய நேரத்[redacted]ரும்புப் பொருளைக் கையில் கொடுத்துவிட்டு, 'இரும்புப் பொருளைக் கையில் கொடுத்ததால்தான் வலிப்பு நின்றது' என்று கூறுவது இந்த அறிவியல் யுகத்திற்கு ஏற்புடையதல்ல!



● பிரேமலதா,
கோவை – 43.

? காக்கா வலிப்பு வந்தவர்களின் கையில் இரும்புத்துண்டோ, சாவிக் கொத்தோ கொடுத்தவுடன் சரியாகி விடுகிறதே. அது ஏன்? வலிப்புக்கும் இரும்புக்கும் என்ன தொடர்பு?

! காக்கை வலிப்பு என்பது மூளை தொடர்பான ஒரு குறைபாடு. மருத்துவத் துறையில் இதனை 'எபிலெப்சி' (Epilepsy) என்று அழைக்கிறார்கள். நம் மூளையில் உள்ள நரம்பு அணுக்களின் செயல்பாட்டில் தற்காலிகமாக இடையூறு ஏற்படும்போது, நரம்பு அணுக்களில் அதிர்வுகள் உண்டாகின்றன. அந்த அதிர்வுகள் மூளையிலிருந்து உடல் உறுப்புகளுக்குச் செல்லும் நரம்புகள் வழியாகக் கடத்தப்படுகின்றன. இதனால் உடலெங்கும் அதிர்வுகள் பரவுகின்றன. அப்போது கால்களும் கைகளும் வெட்டி வெட்டி இழுக்கின்றன. இந்தக் 'கால் கை இழுப்பு' காலப்போக்கில் 'காக்கை வலிப்பு' என்று மருவி விட்டது. வலிப்பு வந்தவருக்கு இரும்புப் பொருளைக் கையில் கொடுத்தால் வலிப்பு நின்று விடும் என்பது ஒரு மூட நம்பிக்கை. இரும்பினால் வலிப்பு நிற்கும் என்று கூறுவதற்கு அறிவியல் ஆதாரம் எதுவும் இல்லை. காக்கை உட்காரப் பனம் பழம் விழுந்த கதைதான் இது. பொதுவாக ஒருவருக்கு வலிப்பு வந்ததும் அடுத்த மூன்று நிமிடங்களில் தானாகவே அது நின்று விடும். நாம் வலிப்பு வந்தவரைக் கண்டதும் இரும்புப் பொருளைத் தேடி எடுத்து அவர் கையில் கொடுப்பதற்கு எப்படியும் சில நிமிடங்கள் ஆகிவிடும். ஆக, வலிப்பு தானாகவே

● கவிமணி
செந்தில், ஒசூர்.

? எனக்கு அடிக்கடி கண்கட்டி வருகிறது. இதைத் தடுக்க என்ன வழி?

! கண்ணில் சுத்தம் குறைந்து தொற்றுக்கிருமிகள் சேரும்போது கண் இமைகளில் கட்டிகள் வருவது இயல்பு. இமைகளில் உள்ள 'மெய்போமியன் கிளாண்ட்' (Meibomian gland) என்ற சுரப்பி தொற்றுக்கிருமிகளால் பாதிக்கப்படுவதால் உண்டாகும் வீக்கம்தான் இந்தக்கட்டி! கண் இமைகளில் 'பாப்பிலோமா' (Papilloma) என்று ஒரு வகைக் கட்டிகளும் வரும். பொதுவாக கண்ணுக்கு வெளியே இமை மற்றும் விழிவெண்படலம் போன்ற பகுதிகளில் கட்டிகள் வந்தால் பெரிய பாதிப்புகள் ஏற்படுவதில்லை. இமையில் வீக்கம், வலி, கண் சிவப்பது போன்ற தொல்லைகளோடு நின்று கொள்ளும். கண்ணின் உள்ளேயோ, கண் நரம்பிலோ கட்டி வந்தால் ஆபத்து அதிகம். சாதாரணக் கண்கட்டிகளுக்கு தகுந்த நுண்ணுயிர்க் கொல்லி மருந்தைச் சாப்பிட்டால்

சரியாகிவிடும். அடிக்கடி கண்கட்டி வராமலிருக்கக் கண்களைத் தண்ணீரால் கழுவி சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டியது முக்கியம். கண்களுக்குப் போதிய ஓய்வும் அவசியம்.

● பாரதி செல்வம், சென்னை – 93.

? காதுக்குள் எறும்பு சென்றுவிட்டால் அதை எப்படி எடுப்பது?

! முதலில் காதினுள் சிறிதளவு எண்ணெயை ஊற்றி எறும்பைக் கொன்றுவிட வேண்டும். அப்போதுதான் அது உள்ளே கடித்துக் கொண்டிருக்காது. எறும்பை இறக்க வைக்கக் காதினுள் தண்ணீர் ஊற்றக் கூடாது. எண்ணெயை ஊற்றுவதே நல்லது. இறந்த எறும்பைக் காதினுள் தண்ணீர் அடித்து எளிதில் எடுத்து விடலாம். எப்படி? பாதிக்கப்பட்ட நபரைச் சாய்வு இருக்கையில் அமரச் சொல்ல வேண்டும். ஒரு சிரிஞ்சில் பத்து மில்லி அளவுக்கு இளஞ்சூடான தண்ணீரை எடுத்துக் கொண்டு, சிரிஞ்சின் முன் பகுதியை செவித் துளையை ஒட்டி வைத்துக் கொண்டு, தண்ணீரை மெதுவாகக் காதின் மேல் சுவரில் அடிக்க வேண்டும். அப்போதுதான் தண்ணீர் உள்ளே சென்று எறும்பை வெளியே தள்ளும். காதில் புண் அல்லது செவிப்பறையில் துளை இருந்தால் இந்த முதலுதவியைச் செய்யக்கூடாது. இவர்கள் மருத்துவர் உதவியை நாட வேண்டும்.

● ப. காளிதாசன், நீர்விளங்குளம்.


? காய்ச்சல் வந்தால் வாயெல்லாம் கசப்பது ஏன்?

! காய்ச்சல் வரும்போது ரத்தத்தில் உண்டாகின்ற சில நச்சுப் பொருட்களால் நாக்கில் உள்ள சுவை மொட்டுகள் தற்காலிகமாக செயலிழக்கின்றன. இதனால் கசப்பு தவிர மற்ற சுவைகளை நம்மால் உணரமுடிவதில்லை.

● டி. சந்திரசேகர், தொளம்பூர்.

? எனக்கு வயது 16. எனது பற்கள் அனைத்தும் ஆடுகின்றன. இதற்கு என்ன காரணம்? எப்படி குணப்படுத்துவது?

! பற்களின் மேல் காரை படிந்து, பல்லின் பிடிமானம் தாடையில் குறைந்து போனால் பல் ஆடும். பல்லைச்சுற்றி இருக்கின்ற ஈறுகளும் எலும்பும் தேய்ந்து போனால் பல் ஆடும். பற்கள் விழ வேண்டிய பருவத்தில் பால் பற்களின் வேர்கள் அரிக்கப்பட்டு அவையும் ஆடலாம். இவை தவிர பல்லின் வேரிலோ, தாடை எலும்பிலோ முறிவு ஏற்பட்டாலும் பல் ஆடலாம். உனக்கு ஏன் பற்கள் ஆடுகின்றன என்பதைப் பல் மருத்துவரின் மூலம் தெரிந்து கொண்டு அதற்கேற்ப சிகிச்சையைப் பெற்றுக் கொண்டால் உன் ஆடும் பற்கள் குணப்படும்.




ஆப்பிரிக்க இயற்கைச் சுரங்கங்களில் தான் 95 சதவீதம் அளவிற்கு வைரம் கிடைக்கிறது. இங்கு கார்பன் படிகம் படிந்திருப்பது இருபதாம் நூற்றாண்டில்தான் கண்டுபிடிக்கப் பட்டது. இந்தக்



கார்பன் படிகத்திலிருந்துதான் கிராபைட்டும் பிரிந்தெடுக்கப்படுகிறது. கார்பன் படிகத்தைக் கடினமான சூழலில் 900 டிகிரி சென்டிகிரேட் வெப்ப நிலையில் ஆக்ஸிஜன் முன்னிலையில் எரியூட்ட, கார்பன்டை ஆக்ஸைடு வெளியாகிறது. இதை 1000 டிகிரி சென்டிகிரேடில் எரியூட்ட கிராஃபைட் கிடைக்கிறது. இதற்குச் செம்பைவிட ஐந்து மடங்கு மின் கடத்தும் திறன் அதிகம்.

– ராமகிருஷ்ணன், காயக்காடு, ஆவணத்தாங்கோட்டை.




1905 ஆம் வருடம் பிப்ரவரி 23 ஆம் நாள் சிகாகோ நகரில் பால்ஹாரிஸ் என்ற வழக்கறிஞர் வீட்டில் நான்கு பேரைக் கொண்ட ஒரு சங்கம் தொடங்கப்பட்டது. அவர்கள் சுற்றாக ஒவ்வொருவர் வீட்டிலும் ஒவ்வொரு கூட்டத்தை நடத்தியதால் ரோட்டரி சங்கம் எனப்பட்டது. அதுதான் உலக முழுவதும் இன்று பரவியுள்ளது.

ஆதாரம்: பொது அறிவுக் கதம்பம்

– மலர் சூர்யா, வில்லியனூர்.

• குரங்குகள் மற்ற பிராணிகளைவிட அதிகமான மூளை வளர்ச்சி பெற்றவை. எனவே, அவை பருவம் அடைய பத்து வருட காலம் தேவைப் படுகிறது. இந்தக் கால கட்டத்தை வாழ்க்கை கல்வி கற்பதில் செலவிடுகின்றன.



• கங்காரு குட்டி பிறக்கும் போது பத்து அவுன்ஸ் எடையோடு முழு

ஸ்கூட்டரை மடக்கி


வளர்ச்சிப் பெறாமல் இருக்கும். அதன் வளர்ச்சி, தாயின் வயிற்றில் இருக்கும் பையில்தான் முழுமை அடைகிறது.

• நீர் யானைக் குரல் அதன் உடல் தோற்றத்திற்கு மாறுபட்டதாக இருக்கும். மெலிதான உறுமல், முனகல் போன்ற ஒலிகளை உண்டாக்கும். ஆனால் சண்டை போடும்போது குரல் உரத்து ஒலிக்கும்.




– அண்ணா அன்பழகன், அந்தணப்பேட்டை.

கேரள மாநிலம் வண்டிப் பெரியார் என்னும் பகுதியைச் சேர்ந்த ரீகன் ஜோன்ஸ் என்பவர் 'வாடிகன் சிட்டி'யில் உள்ள போப் ஆண்டவர் இரண்டாம் ஜான்பாலுக்கு எழுதி அனுப்பிய கடிதம்தான் உலகிலேயே மிகவும் நீளமானது. போப்பின் பிறந்த நாளையொட்டி உலக அமைதியைப் பற்றி ஆங்கிலத்தில் அந்தக் கடிதம்




எழுதப் பட்டு இருந்தது. 10 கோடிக்கும் மேற்பட்ட வார்த்தைகளை உபயோகப் படுத்தி ரீகன் எழுதிய அந்தக் கடிதத் தின் நீளம் எவ்வளவு தெரியுமா? 2.4 கிலோ மீட்டர் நீளம், 61 சென்டி மீட்டர் அகலம் கொண்டது அந்தக் கடிதம்.




கையில் எடுத்துச் செல்லலாம்!

உலகிலேயே மிக உயர்ந்த விலை மதிப்புள்ள



புத்தகம் கல்கத்தா தேசிய நூலகத்தில் உள்ளது. குரான் பதிப்பான அந்தப் புத்தகத்தின் அத்தனை பக்கங்களும் தங்கத்தால் ஆனவை. மேலும் 300க்கும் மேற்பட்ட ரத்தினக் கற்கள் பதிக்கப் பட்ட அதன் மதிப்பு பல லட்சம் ரூபாய்க்கு மேல் ஆனது. உலகில் இதுதான் விலை உயர்ந்த புத்தகமாகும்!

– டி. அஹமது இபுராஹிம் ஜின்னா, அபிவிர்த்திஸ்வரம்.



'டன்கன் மாக் இன்னடர்' என்ற புகழ் பெற்ற ஸ்காட்லாந்து கவிஞருக்கு எழுத, படிக்கத் தெரியாது. அவர் சொல்லும் கவிதைகளைச் சீடர்களே அவ்வப் போது எழுதி வந்தனர். அவரது கவிதைகள் அந்த நாட்டு மக்களால் பொக்கிஷம் போல் போற்றிப் பாதுகாக்கப்படுகிறது.


– நிம்மேலி. பால. கண்ணன்.

முதன் முதலில் தபால் துறை வேலை செய்யத் தொடங்கியவுடன் தபால்களைக் குதிரை வீரர்கள்தான் எடுத்துச் சென்றனர். பயணத்தின்போது, ஆங்காங்கே இளைப்பாறி குதிரைகளை மாற்றிக்கொண்டு செல்வார்கள். அவ்வாறு இளைப்பாறும் இடங்களில் கம்பங்கள் நடப்பட்டிருக்கும். கம்பங்களுக்கு ஆங்கிலத்தில் 'போஸ்ட்' என்று வழங்கப்படுவது தபால்களுக்கும் நிலைத்து விட்டது.



– மா. மணி, பன்னிரெண்டாம் வகுப்பு, அரசு மேல்நிலைப்பள்ளி, செந்துறை, திண்டுக்கல் மாவட்டம்.

சோவியத் யூனியனில், கிரிமியாவைச் சேர்ந்த ஒரு மெக்கானிக் புதுமையான ஒரு ஸ்கூட்டரைத் தயாரித்திருக்கிறார். இந்த ஸ்கூட்




டரை மடக்கிவிட்டு மாடத்தில் வைத்து விடலாம். தேவையானபோது ஓட்டுவதற்கு வசதியாக, நீட்டிக் கொள்ளலாம். ஒரே நிமிடத்தில் மடக்கவும், அல்லது நீட்டவும் செய்யலாம். இந்த ஸ்கூட்டரின் மொத்த எடை 26 கிலோ. வண்டியை ஓட்டிச் செல்பவரோடு கூட இருவர் ஏறிச் செல்லலாம். மணிக்கு நாற்பது கிலோமீட்டர் வேகம் செல்லக்கூடியது. மடக்கிய ஸ்கூட்டரை உறுதியான பைக்குள் போட்டு, ரயிலிலோ, பஸ்ஸிலோ எடுத்துச் செல்லலாம். இதைத் தயாரித்தவர் பெயர்,

பிருந்தாவனம்

விளாடிமிர் அப்ரமோவ்.


ஆதாரம்: அறிவூட்டும் அறிவியல் செய்திகள்.

– ஏ.எல்.
பாத்திமா,
காரைக்கால்.



அமெரிக்காவில் கதை சொல்லிகள் இயக்கம் என்றே ஒரு இயக்கம் இருக்கிறது. பெரிய தொழிற்சாலைகளில் வேலை முடிந்ததும் ஆற, அமர, உட்கார்ந்து ஒருவர் கதை சொல்ல, விரும்புகிறவர்கள் கேட்கிற வழக்கம் இப்போதும் இருக்கிறது.

இவ்வாறு கதைகளைக் கேட்பதால் மனிதனின் பரபரப்பு உடலில் இருந்தும், உள்ளத்தில் இருந்தும் நீங்கிப் போவதோடு, இல்லத்திலும் அமைதி உண்டாகிறது. தொழிற்சாலையில் வேலைத் திறனும் அதிகரித்திருக்




கிறது எனக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

ஆதாரம்: 'இந்த நாள் இனிய நாள்'

–பாளை பசும்பொன்,
சிவகங்கை மாவட்டம்.

இயல்பூக்கம் என்ற சக்தி மனிதனுக்குக் கிடையாது. மிருகங்கள், பறவைகள், இதர உயிரினங்கள் இச் சக்தியைப் பெற்றிருக்கின்றன. இன்னொன்றைப் பார்த்தோ அல்லது கற்றுக்கொண்டோதான் ஆறறிவுள்ள மனிதன் எதையும் செய்ய முடியும். பறவைகளுக்குக் கூடு கட்ட யாரும் கற்றுக் கொடுப்பது இல்லை. இயல்பாகவே அவை இவற்றையெல்லாம் தெரிந்துகொள்கின்றன.

– எஸ். மோகன்ராஜ், சீர்காழி.



● சவூதி அரேபியாவில் நதிகள் இல்லை. ● ஆப்கானிஸ்தான் நாட்டில் ரயில்கள் இல்லை. ● ஆப்பிரிக்காவில் புலிகள் இல்லை. ● சந்திரனில் வாயு மண்டலம் இல்லை. ● அல்பேனியா நாட்டில் மதங்கள் இல்லை. ● யமுனை நதி கடலில் கலப்பதில்லை. ● யானையின் துதிக்கையில் எலும்பு இல்லை. ● மண்ணுளிப் பாம்புக்குக் கண்கள் இல்லை. ● கண்டெலிக்கு வியர்ப்பதில்லை. ● ஈக்களுக்குப் பற்கள் இல்லை. ● வண்ணத்துப் பூச்சிகளுக்கு வாய் இல்லை.

– ஆர். சுமதி, நாமகிரிப்பேட்டை.

ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த எலக்ட்ரானிக் என்ஜினியர் கட்டை விரல் அளவே உள்ள ரேடியோ ஒன்றைக் கண்டுபிடித்துள்ளார். இதை உலகின் மிகச் சிறிய ரேடியோ என கின்னஸ் புத்தக நிறுவனத்தினர் அறிவித்து உள்ளனர். இதிலுள்ள மிகச் சிறிய ஆன்டெனா போன்ற கருவியைக் காதில் வைத்துக் கொண்டு பாட்டுக் கேட்கலாம். இந்த ரேடியோவிற்கு வாட்சில் பயன்படுத்தும் பட்டன் அளவே உள்ள செல் போதும். இந்த ரேடியோ மிகக் குறைந்த அலைவரிசையில் உள்ள ஒலிபரப்பை கிரகிக்கும் சக்தி கொண்டது. இதன் விலை 60 ரூபாய்தான்!

– க. இலக்கிய அரசு, பத்தாம் வகுப்பு,
ஜவகர் நவோதா வித்யாலயா,
இராயன்பாளையம், காரைக்கால்.

கடலில் மட்டுமே வாழும் நட்சத்திர மீன் தன் உணவை எப்படி தேடிக் கொள்கிறது தெரியுமா...? நத்தை போன்ற உயிரினங்களைத் தன் கால்களைப் பயன்படுத்தி வயிற்றோடு அணைத்துக்கொள்கிறது. சிறிது நேரத்தில் தன் உடலிலிருந்து ஒருவித நொதியை இரைமீது செலுத்தி கூழ்மமாக்குகிறது. பிறகு தன் இரைப்பையை வெளியில் நீட்டி இரையை சுபளீகரம் செய்து விடுகிறது.

– ராமகிருஷ்ணன், காயக்காடு.



முட்டாள் சுப்பு
கனகசபையின் வீட்டு வேலைக்காரன் சுப்பு. ஒருநாள் திருட்டுக் குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டான்.
உன் முதலாளியை நீ ஏமாற்றினாயா?
இல்லை ஐயா!
அவர்தான் என்னை ஏமாற்றினார்.
எப்படி?
முதலாளி ஊருக்குப் போயிட்டு மூன்று நாட்கள் கழித்து வருவதாகச் சொன்னார்.
email:saifeatures@yahoo.com
ஆனால் அன்று இரவே திரும்பி விட்டார்.
அதனால்?
அதனாலே என்னாலே திருடிட்டு தப்பித்துப் போக முடியவில்லை.
!?
www.kuttu.com

சீப்பு உருவானது

காலையில் எழுந்ததும் கண்ணாடி பார்த்து தலை வாரிக் கொள்கிறோம். எதற்காக? நம் தலைமுடியைப் பார்த்து மற்றவர்கள் பயந்து போய் அலறி விடக் கூடாதே என்பதற்காகத்தான். தற்போது கையில் 'சீப்பு, இல்லாத மாணவர்களைக் காண்பதே அரிது. தலைமுடியைச் சரி செய்து கொள்வதும் நாகரிகத்தின் ஓர் அங்கம்தான். அதுசரி! தலைவாரிக் கொள்ளும் 'சீப்'பை யார் கண்டுபிடித்திருப்பார்கள்?


'சீப்பு' என்ற உபகரணம், சின்னச் சின்ன பற்கள் உள்ளதாய், நம் தலைமுடியினூடே சென்று, அவற்றை ஒழுங்குபடுத்தும் ஒரு சிறு கருவிதான். இது நம்மை அழகு படுத்தப் பயன்படுவதால் அழகு சாதனப் பொருட்களில் ஒன்றாகிவிட்டது.

'சீப்பு' மனிதனின் மிகப் பழங்கால கண்டுபிடிப்புகளில் ஒன்று! பழங்கால மனிதன் பயன்படுத்திய, மரம், எலும்பு மற்றும்



• எகிப்திய சீப்புகள்


கொம்புகளிலான சீப்புகள், ஆதி கால மனிதர்கள் வாழ்ந்ததாகக் கருதப்படும் ஸ்விட்சர்லாந்தின் ஏரிகளிலிருந்து







சீப்பு?



கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. நியூகினியாவில் வாழ்ந்த 'பாப்புயன்கள்' எனப்படும் இனத்தவர் களுக்கு மிக அழுத்தமாகவும், சுருட்டை சுருட்டையானதாகவும் முடி இருந்தது. எனவே இச் சுருட்டை முடியை நீவி நீள வாரி விட்டு, தலையின் உச்சியில் பெரிய கொண்டை போடுவதற்காகவே, 'பாப்புயன்கள்' 'சீப்பை'க் கண்டுபிடித்திருக்க வேண்டும் என்ற கருத்தும் நிலவுகிறது.

பழங்கால நாகரிகத்தில் சிறந்தவர்களான எகிப்தியர்கள், அழகுக் கலையிலும் சிறந்தவர்களாக இருந்தனர். அவர்கள் தந்தத்திலான சீப்புகளைச் செய்திருந்தனர். 4000 ஆண்டுகளுக்கு முன் எகிப்தியர்கள் செய்த தந்தச் சீப்புகள் இன்றும் நியூயார்க்கிலுள்ள கலை அருங்காட்சியகத்தில் உள்ளன. ஆனால் அவை செய்யப்பட்டு 4,000 ஆண்டுகள் ஆனாலும்கூட, இப்போது நாம் பயன்படுத்தும் சீப்பைப் போலவே அமைப்பில் உள்ளன. பழங்காலத்தில் சீப்புகள் கைக்கடக்கமாக மக்கள் பயன்படுத்தும் எல்லாப் பொருட்களாலும் செய்யப் பட்டன.

ஆசியாவின் சில பகுதிகளில் மூங்கில்களாலும் (இப்போதும்கூட நம் ஊரில் உள்ள மரச் சீப்பு மூங்கிலால் செய்யப்பட்டதுதான்) பாலினீசியன் தீவிலுள்ள மக்கள் தேங்காய் ஓடு (கொட்டாங்குச்சி) மற்றும் கடின நார்ப் பொருளாலான சீப்புகளைப் பயன்படுத்தினராம். நம்மூர் குறவர் இன மக்களும்கூட - மாட்டுக் கொம்புகளால் ஆன சீப்புகளைப் பயன்படுத்துகின்றனர். துவக்கக் காலத்தில் தலை அழகாகவும், கவர்ச்சிகரமாகவும், காண்பிப்பதற்காக பெண்கள்தான் சீப்புகளைப் பயன்படுத்தின்ர். இடைக்காலத்தில் கலைஞர்கள் அதனைப் பயன்படுத்தினர். வண்ண வண்ணக் கண்ணாடி மற்றும் தங்கத்திலான சீப்புகள்கூட உள்ளன. அவற்றின் சிலவற்றில் ராஜாக்களின் படமும், லத்தின் எழுத்துக்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

— ஸ்வாதி






சோம்பேறி ராஜா!

வலிமையான சிங்கத்தைப் புத்திசாலி முயல் ஏமாற்றிய கதை நாம் அனைவரும் அறிந்ததே! இன்னொரு புறம் சிங்கத்தைக் 'காட்டு ராஜா' என்றும் 'விலங்குகளின் அரசன்' என்றும் கூறி பெருமைப்படுத்துகிறோம். நம் நாட்டில் மட்டுமல்ல; உலக இலக்கியங்களில்கூட சிங்கத்தைப் பற்றி மிகவும் உயர்வாகச் சொல்லியிருக்கிறார்கள்.

புலி, சிறுத்தையைப் போல் சிங்கமும் பூனைக் குடும்பத்தைச் சேர்ந்தது. புலியைத் தவிர பூனைக் குடும்பத்தைச் சேர்ந்த எல்லா விலங்குகளும் வலிமையிலும் கம்பீரத்திலும் சிங்கத்தை விடக் குறைந்தவை. புலி மட்டும் தான் பருமனிலும், வேகமாக ஓடுவதிலும் சிங்கத்தைக் காட்டிலும் திறமை வாய்ந்தது. சிங்கமும் புலியும் சண்டையிட்டால் புலிதான் ஜெயிக்கும். அப்படியென்றால் புலிதானே காட்டு ராஜாவாக ஆகியிருக்க வேண்டும்? ஆனாலும் சிங்கத்தின் பரந்த முகமும் பிடரி முடியும் தரை அதிரும் கர்ஜனையும் தைரியமும்தான் சிங்கத்தைக் காட்டு ராஜாவாக்கியிருக்கிறது. சிங்கம் கர்ஜித்தால் யானை உட்பட எல்லா விலங்குகளும் பறவைகளும் பயந்து நடுங்கும்.



ரத்த வாடை அடித்தால் சிங்கம் விடாது என்று சொல்வார்கள். அது தவறு. இவற்





நிற்கு மோப்ப சக்தி மிகக் குறைவு. பார்க்கும் சக்தி கூட மந்தமானது தான். ஆனால், கேட்கும் சக்தி மிகக் கூர்மையாக இருக்கும்.

இரவிலும் பகலிலும் இரைக் காகச் சுற்றும். பசி எடுத்தால் மட்டுமே இவை வேட்டையாடும். இரையை நேருக்கு நேர் தாக்கி வீழ்த்தும். இரையைப் பத்திரப் படுத்திச் சாப்பிடாது. ஆனால் மற்ற விலங் குகள் கொன்ற இரை, செத்து விழுந்து கிடக் கும் அழுகிய இறைச்சியையும் சாப்பிடும். மான், வரிக்குதிரை, காட்டெருமை, காட்டுப்பன்றி, காட்டுக் கழுதை போன்ற பிராணிகளை வேட்டை யாடும். பெரிய யானை, காண்டா மிருகம், நீர்யானை, ஒட்டகச் சிவிங்கி ஆகிய வற்றை இது சாதாரணமாக நெருங்காது. ஆனால் அவற்றின் குட்டிகளைப் பிடித்துச் சாப்பிடுவதுண்டு!


காட்டில் உணவு கிடைக் காத போது வயதான சிங் கங்கள் ஊருக்குள் புகுந்து ஆடு, மாடு - சில சமயங் களில் மனிதர்களையும் உணவாக்கிக் கொள்வதுண்டு.

வயிறு நிரம்பிய சிங்கம் அருகில் வரும் எந்தப் பிராணியையும் தொந்தரவு செய்யாது.


பொதுவாக சிங்கங்கள் குகைகளில் வசிப்பதில்லை. மணல்வெளிகள், புதர் கள், பாறைகள், புல் வெளிகளில் வசிக் கின்றன. சில வயதான சிங்கங்கள் மட்டுமே குகைகளில் வாழ்கின் றன.

காட்டு ராஜாவாக நாம் கருதும் சிங்கங்கள் சோம்பேறியானவை. அதிலும் ஆண் சிங்கங் கள் படு சோம்பேறிகள். பசிக்கும்போது மட் டும்தான் சுறுசுறுப்பாக இயங்கும். பெண் சிங்கம் தான் வேட்டையாடி இரை கொண்டு வரும். ஆண் சிங்கம் மனமிருந்தால் வேட்டையில் உதவும். கஷ்டப்பட்டு வேட்டையாடிய இரையைப் பெண் சிங்கம் முதலில் சாப்பிடாது. ஆண் சிங்கத்திற்குத்தான் அந்த உரிமை. அது சாப்பிட்டு மீதி இருப்பதை பெண் சிங்கமும் குட்டிகளும் சாப் பிடுகின்றன. இதனால் குட்டிகள் போதிய உணவு கிடைக்காமல் இறந்து விடுகின் றன.

பூனைக் குடும்பத்து பிராணிகளில் சிங்



எஸ். சுஜாதா



கத்திற்கு மட்டும்தான் கோடோ, புள்ளி களோ கிடையாது. குட்டிகள் பிறக்கும் போது புள்ளிகள் இருந்தாலும் வளர, வளர அவை மறைந்து விடுகின்றன.

பெண் சிங்கம் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் குட்டி போடும். கர்ப்ப காலம் 116 நாட் கள். ஒரு தடவைக்கு இரண்டு அல்லது மூன்று குட்டிகள் பிறக்கும். சர்க் கஸ்களில் வளர்க்கப்படும் சிங் கங்கள் நான்கு, ஐந்து குட்டி களைக்கூட போடுவதுண்டு.

வளர்ந்த ஆண் சிங்கங் களுக்குப் பிடரியில் முடி வளரும். வளர்ந்த பின்னே கர்ஜிக்கும். ஆண் சிங்கத்திற்கு நீண்ட வாலில் கறுப்பு நிற முடி அழ காக இருக்கும்.

ஆண் சிங்கம் 230 கிலோ எடை இருக்கும். பெண் ஆணை விடக் குறைவாக இருக்கும். பொதுவாக 20 ஆண்டுகள் வரை வாழக்கூடி யவை. அரிதாக 30 ஆண்டுகள் வாழ்ந்த சிங்கங்களும் உண்டு.

ஒரு காலத்தில் உலகம் முழு வதும் காணப்பட்ட சிங்கங்கள் இன்று இந்தியாவிலும் ஆப்பிரிக் காவிலும் குறைந்த எண்ணிக்கை யில்தான் உள்ளன. இந்தியாவில் கிர் காடுகளில் அரசாங்கம் பாது காத்து வருவதால் ஓரளவுக்கு இதன் எண்ணிக்கை காப்பாற்றப்பட்டு வருகிறது.

சிங்கங்கள் ஊன் உண்ணிகள் வரிசை யில் பேலிடே (Felidae) குடும்பத்தின் உட் குடும்பமான பேந்திரினே (pantherinae) பிரிவைச் சேர்ந்தவை. விலங்கியல் பெயர் Pantherinae perisica.


கூர்மையான பற்களும் வலிமையான கால்கள் மற்றும் கொக்கிப் போன்ற நகங்கள் வேட்டைக்குப் பெரிதும் உதவுகின்றன.

மற்ற பிராணிகளுக்கு அச்சத்தை ஏற்படுத் தவும், 'இது எனது எல்லை' எனத் தெரி விக்கவும் சிங்கங்கள் கர்ஜிக்கின்றன.

பழங்கால கட்டடங்கள், சிற்பங்கள், ஓவி யங்களில் சிங்கத்தின் உருவங்கள் காணப்படுகின்றன. பார்த்ததும் கவரும் விதத்தில் இருக்கும் உருவம், நிறம்தான் இதற்குக் காரணம்.

சிங்கங்கள் மனி தர்களை எதிரி யாக நினைப்ப தில்லை. மனிதர் களுடன் நட் புடன் பழகவே செய்கின்றன. சர்க்கஸ்களில் இருக்கும் சிங்கங் கள் தங்கள் எஜமா னர்களை அடை யாளம் கண்டு பழகு கின்றன.





கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

ராகுல், ஸ்வேதாவைப் போல் நீங்களும் கோகுலத்திற்குக் கதை, ஓவியம் அனுப்ப விரும்புகிறீர்களா? அப்படியென்றால் கோகுலத்திற்கு சந்தா செலுத்துங்கள்... உங்கள் திறமைகளை வெளிக் கொண்டு வர கோகுலத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

பெயர் : ....

முகவரி : ....

....

....

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097.

பனையூரில் பெரியவர் ஒருவர் இருந்தார். அவருக்கு இரண்டு பிள்ளைகளும், இரண்டு மாடுகளும் இருந்தன. அவர் காலத்திற்குப் பின் ஆளுக்கொரு மாடாய் பிரித்துக் கொண்டனர். மூத்தவன் மாடு நோய் கண்டு மடிந்துவிட்டது. கசாப்புக் கடைக்காரனிடம் கொடுத்துத் தோலை உரித்துத் தரச் செய்தான். அந்தத் தோலில் ஒரு டமாரம் செய்துகொண்டான்.

டமாரத்தை அருகிலுள்ள ஊரில் விற்று வரப் புறப்பட்டான். இருட்டி விட்டது. ஒரு மரத்தில் ஏறிப் படுத்துக்கொண்டான்.


நள்ளிரவு. அந்த மரத்தடியில் இரண்டு கள்வர்கள் தாங்கள் கொள்ளையிட்ட பொருளைப் பிரித்துக் கொண்டனர். அவர்கள் வாக்கு வாதத்தில் விழித்துக்கொண்ட அண்ணன் பயந்தான். டமாரத்தை அடித்தால் காவலர்கள் கேட்டு உதவிக்கு வரலாமென நினைத்து டமாரத்தைப் பலமாக அடித்தான்.

ஆனால் கள்வர்கள் திருட்டுப் பொருளைப் போட்டுவிட்டு ஓடி விட்டனர். வெகு நேரம் கழித்து கீழே இறங்கி வந்த தமையன் டமாரத்தைக் கிழித்து அதற்குள் கொள்ளையர் விட்டுச் சென்ற பொருள்களைப் போட்டுக்கொண்டு ஊர் திரும்பினான்.

மளிகைக் கடை வைத்தான். வியாபாரத்தில் நல்ல லாபம் வந்தது. நிலங்களை வாங்கி விவசாயம் செய்தான். பூமித்தாய் வஞ்சனையின்றி வாரி வழங்கினாள். குடியிருக்க வசதியான வீடு கட்டினான். ஏழை எளியவர்களுக்குத் தன்னாலான உதவிகள் செய்து நல்ல பெயரும் வாங்கினான்.

தம்பி ஒரு மாட்டை வைத்துப் பால் வியாபாரம் செய்துகொண்டிருந்தான். தம்பி மனைவி அண்ணன் மனைவியிடம் செல்வம் சேர்ந்த விதத்தை விசாரித்து அறிந்துகொண்டாள். தன் கணவனிடம் ஒரு டமாரத்தை வாங்கிக் கொடுத்து அனுப்பினாள்.

அவனும் அடையாளமாக அந்த மரத்தில் ஏறிப் படுத்துக்



அடி ஓரிடம்; அதிர்ஷ்டம் ஓரிடம்!

கொண்டான். கொள்ளையர்கள் அன்று வர வேண்டுமே என்று கவலைப்பட்டான். அவனது துரதிருஷ்டம் அவர்கள் வந்தார்கள்.


''அன்றுபோல் நிறையப் பொருள் இதுவரை அகப்பட்டதில்லை. நம்மை எவனோ முட்டாளாக்கி விட்டான். 'பொருள் அகப்பட்டது; திருடர்கள்தான் சிக்கவில்லை' என்ற பேச்சே எழவில்லையே'' என்று இருவரும் பேசிக் கொண்டே வந்தனர். 'ருசி கண்ட பூனை உறியைத் தாவும்' என்கிற மாதிரி மறுபடி ஒருநாள் டமாரச் சத்தம் போடுவான்! என்று எதிர்பார்த்தே அதே மரத்தடிக்குக் கொள்ளையடித்த போதெல்லாம் வந்தனர்.

துணியை விரித்துப் பொருட்களைப் பங்கிட்டனர். டமாரத்தை அடித்தான் தம்பி. கள்வர்களில் ஒருவன் மரத்திலேறி அவனைக் கீழே தள்ள, மற்றவன் அவனை நையப் புடைத்தான். தம்பியைப் பேசவே விடாமல் ஓட ஓட விரட்டினர்.

குற்றுயிரும் குலை உயிருமாய் வந்து சேர்ந்தான் தம்பி. 'அனுபவிப்பது அண்ணன்; அடி நமக்கா' என அசூயை கொண்ட தம்பியும் அவன் மனைவியும் ஒரு அமாவாசை இரவில் அண்ணன் வீட்டுக்குத் தீயிட்டனர்.

மாடுகள் வெம்மை தாங்காமல் 'அம்மா, அம்மா' என அலற அண்ணன் குடும்பத்தினர் எழுந்து தீயை அணைத்தனர். ஆயினும் ஒரு பகுதி எரிந்துவிட்டது. உயிர் சேதமில்லை.

உத்திரங்கள், தூண்கள், மரச் சாமான்கள் எரிந்த கரியை மூட்டையாகக் கட்டி விற்று வர புறப்பட்டான் தமையன். வழியில் முத்து வணிகர்கள் கூட்டமாகத் தூத்துக்குடியிலிருந்து முத்து



மாலதி



"விதியை என்னால வெல்ல முடியும்!"
"எப்படி?"
"என் பேர்தான் மதி ஆச்சே! விதியை மதியால் வெல்ல முடியும்னு சொல்வாங்களே!"

— பா. ஜெயக்குமார்

மூட்டைகளைக் குதிரைகளில் ஏற்றிக் கொண்டு வந்தனர்.

அப்போது காட்டானை ஒன்று மதம் கொண்டு பயங்கரமாய் பிளிறியபடி மரங்களைப் பிடுங்கி வீசியபடி வந்தது. முத்து வணிகர்களும், தமையனும் மூட்டைகளைப் போட்டு விட்டு உயிரைக் காப்பாற்றிக் கொள்ள கிடைத்த இடத்தில் பதுங்கினர்.

நெடு நேரம் சென்று திரும்பி வந்து ஆளுக்கொரு மூட்டையை முத்து வணிகர்கள் எடுத்துச் செல்ல எஞ்சியிருந்த மூட்டையுடன் வீடு திரும்பினான் மூத்தவன்.

'கரி மூட்டை விற்பனையாக வில்லையா?' என்று கேட்டாள் மனைவி. நடந்ததைச் சொன்னான் தமையன். ''சரி! நானே எரிபொருளாய் உபயோகிக்கிறேன். இனிமேல் அலைய வேண்டாம்'' என்றபடி, மூட்டையைப் பிரிக்க அதற்குள் ஒரு துணியாலான மூட்டை!

"கரியாகக் கூடாதென்று உள்ளே ஒரு துணி மூட்டை தைத்திருக்கிறீர்களா?'' என்று கேட்டபடி அதையும் அவிழ்த்தாள் அண்ணன் மனைவி.

''ஆமாம்! ஆனால் நான் தைத்தது கறுப்புத் துணி. இதுவோ நீலமாக இருக்கிறதே'' என்று வியந்தான் கணவன்.

நீலத் துணிக் கோணியில் இருந்து வெளி வந்த அத்தனையும் நல் முத்துகள்! வியாபாரிகள் மூட்டை மாறி இருப்பதைத் தெரிந்துகொண்ட தமையன் சுமார் மூன்று மாத காலம் வரை அந்த வியாபாரிகளைத் தேடி அந்த இடத்திற்குப் போய் வந்தான். வியாபாரி உடல் நலக் குறைவால் படுத்த படுக்கையாய் இருந்ததால் கரி மூட்டை பிரிக்கப்படாமலிருப்பதை அவன் எப்படி அறிவான்?

இது இறைவன் கொடுத்த பரிசு என்று மனதைச் சமாதானம் செய்து கொண்டான். அவன் மனைவி அந்த முத்துகளிலிருந்து தனக்கும் தன் குழந்தைகளுக்கும் ஆபரணங்கள் செய்து கொண்டாள். தம்பி குழந்தைகளுக்கும் பரிசளித்தான். முத்து வியாபாரம் செய்தான்.

இதை அறிந்த தம்பி முத்துகள் கிடைத்த விதத்தை அண்ணனிடம் கேட்டுத் தெரிந்து கொண்டான். அவனும் கரி மூட்டையோடு ஒரு குதிரையிலேறி குறிப்பிட்ட இடம் சென்றான்.

உடல் தேறிய வியாபாரி முத்து மூட்டையை வியாபாரத்துக்கு எடுத்துப் போய் அவமானப்பட்டுக் கொதித்தான். இது எப்படி ஆகியிருக்கும் என சக வியாபாரிகளுடன் கலந்தாலோசித்தான்.

''அந்த வியாபாரியின் மேல் வீணாக சந்தேகப்பட முடியாது. முதலில் மூட்டையை எடுத்துச் சென்றவர்கள் நாம்தான்! நாம் முத்து மூட்டைகளோடு வருவோம் என்பதும் புதியவனுக்குத் தெரியாது. நாம் தினமும் அதே நேரத்துக்கு அந்த வழி செல்வோம். அவன் எதிர்பட்டால் சோதிப்போம். திருடன் என்றால் திட்டமிட்டுச் செய்திருக்கிறான் என்று தீர்மானித்துத் தண்டனை கொடுப்போம்'' என முடிவு செய்தனர். இது நடந்த இரண்டாவது நாள் தம்பி எதிர் வந்தான்.

சகோதரர்கள் ஒரே சாயல் ஆனதாலும், பார்த்து நெடுநாள் ஆனதாலும் அன்று வந்தவன் இவனே என நினைத்தனர்.

அவனிடம் ''ஐயா! இந்த மூட்டை

களைச் சற்றே பார்த்துக் கொள்ளுங்கள். நாங்கள் அதோ இருக்கும் குளத்தில் குதிரைகளுக்குத் தண்ணீர் காட்டி விட்டு வருகிறோம்'' என வேண்டினர்.

தம்பிக்குச் சந்தோஷம் தாங்க முடிய வில்லை. பருத்தி உடுப்பாகவே காய்த்தது போலிருந்தது. மகிழ்ச்சியோடு சம்மதித்தான்.

'வியாபாரிகள் வரலாம். மதயானை வருமா' என்று யோசித்துக் கொண்டு தான் புறப்பட்டான். முத்து வணிகர்கள் ஒளிந்து கண்காணிப்பதை அறியாமல் கரி மூட்டையைக் குதிரையிலிருந்து கீழே தள்ளி ஒரு முத்து மூட்டையை மேலே ஏற்றினான். வணிகர்கள் ஓடி வந்து தம்பியை நையப் புடைத்தனர்.

இம்முறை தம்பியின் உடல் தேற ஆறு மாதமாயிற்று. கரி, முத்து என்ற வார்த்தைகளைக் கேட்டாலே அலறுகிறான் இளையவன். முத்து என்ற தன் பிள்ளையின் பெயரை மாணிக்கம் என்று மாற்றி வைத்து விட்டாள் அவன் மனைவி.

100 பேருக்கு ஜாமெட்ரி பாக்ஸ் பரிசு

இந்த மாதம் கோவை, நீலகிரி, ஈரோடு, சேலம் மாவட்ட வாசகர்களுக்கான போட்டி. இந்தப் போட்டியில் கலந்து கொள்ளும் முதல் 100 வாசகர்களுக்கு ஜாமெட்ரி பாக்ஸ் வழங்க இருக்கிறோம். போட்டியில் கலந்து கொள்வதுடன் விரைவில் அனுப்பியும் வைக்க வேண்டும்.

இந்த மாதப் போட்டி:

பொருளாதாரத்துக்கான நோபல் பரிசைப் பெற்ற இந்திய வல்லுனர் யார்?

அடுத்த மாதமும் மேற்கண்ட மாவட்டங்களுக்கான போட்டி தொடரும். மற்ற மாவட்டங்களுக்கும் இந்த அரிய வாய்ப்பு வரும். காத்திருங்கள். பரிசை வெல்லுங்கள்!


3 ஆளப்பிறந்தவன்!

கதை: ராஜி   படம்: லலிதா




அவனிடமிருந்து காப்பாற்றவே உங்களைக் கிராமத்தில் ரகசியமாக வளர விட்டோம்...
இப்போது அவர்களுக்குத் தெரிந்துவிட்டது... ஆனாலும் கவலை இல்லை.
சோமு! நான் இளவரசனா? அரசனா? நம்பவே முடியவில்லையே!
நண்பா! நீ இளவரசனானது குறித்து மகிழ்ச்சி. ஆனால் உன் நட்பை இழக்கப் போவது குறித்து வருத்தமாக உள்ளது.
அங்கு வந்த குப்பன் –
மோகன் இந்நாட்டு அரசனா? அந்தப் பயலுக்கு வந்த அதிர்ஷ்டத்தைப் பாரு! இந்த யோகம் எனக்கு வரக் கூடாதா?


தான் இளவரசன் என்பதை நம்பாத மோகன் தன்னை வளர்த்தவர்களைச் சந்தித்தான்.
அம்மா... நான் உங்கள் மகன் இல்லையா?
இளவரசே! நீங்கள் யார் என்பது எங்களுக்குத் தெரியும். எங்களுக்கு இடப்பட்ட கட்டளைப்படி உங்களை வளர்த்தோம். நீங்கள் நாட்டை ஆளும் தருணம் வந்துவிட்டது. சென்று வாருங்கள்.
மோகன் கிளம்பினான்.
தோழர்களே! கண் கலங்காதீர்கள். உங்களை நான் மறக்க மாட்டேன். என்னை வந்தடையும் ஏற்பாட்டைச் செய்கிறேன்.


வழியில்—
இளவரசே! உங்களைக் கண்டுபிடிக்க வீரசிம்மன் எவ்வளவோ முயற்சி செய்தான். அது சமீபத்தில்தான் பலன் தந்தது. இனி தாங்கள் இங்கிருப்பது ஆபத்து என்பதை அறிந்தோம்.
வீரசிம்மன் ஆட்சியில் மக்கள் கோபம் அடைந்திருந்தனர். எனவே எல்லோரையும் திரட்டிப் புரட்சி செய்தோம். வெற்றி கிடைத்தது.
அவன் எப்படி வெளியேறினான்?
தன் பிடியிலிருந்து நீங்கள் தப்பிவிட்டது அவனுக்குப் பேரதிர்ச்சியாக இருந்தது. ஆகவே ரத்தம் சிந்தாமல் வெளியேறி விட்டனர். இனி நீங்கள் ஆட்சி செலுத்த வேண்டும். அதோ தலைநகர்!
ஆனால் ஜெயசிம்மனை நிம்மதியாக ஆள விடுவானா வீரசிம்மன்!

(தொடரும்)



முதல் பரிசு
இரா. சங்கர்,
எட்டாம் வகுப்பு,
அரசு உயர்நிலைப் பள்ளி,
சித்தரேவு, திண்டுக்கல் மாவட்டம்.

செப்டெம்பர் இதழில் 'காந்தியடிகள்' என்ற தலைப்பில் ஓவியப் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஓவியங்கள்.

ஓவியப் போட்டி



ஆறுதல் பரிசு
சி.ஆர். கருப்பையா,
பன்னிரண்டாம் வகுப்பு,
அரசு மேல்நிலைப் பள்ளி,
திருப்பத்தூர்.

ஆறுதல் பரிசு
எம். ஸ்ரீலதா,
கோவை.




இரண்டாம் பரிசு
கே. ரமேஷ்,
பதினோராம் வகுப்பு,
தந்தை பெரியார்
மேல்நிலைப் பள்ளி,
காரைக்கால்.

மூன்றாம் பரிசு
எம்.அலெக்சாண்டர்
ராஜா,
பன்னிரண்டாம் வகுப்பு,
இராமசாமி செட்டியார் நகர
மேல்நிலைப்பள்ளி,
சிதம்பரம்.

முடிவுகள்







புதிர் உலகம்

I. ஒன்று முதல் ஒன்பது வரையுள்ள எண்களை இரட்டை இரட்டையாகப் பயன்படுத்தி, ஒன்பது எண்களை உருவாக்க வேண்டும். அவற்றில், ஏதாவது ஓர் எண்ணைக் கொண்டு மற்ற எண்களை வகுத்தால் மீதம் வரக் கூடாது. ஒன்பது எண்களின் கூட்டுத் தொகை மூன்றிலக்க எண். அந்த மூன்றிலக்க எண்ணின் ஒரு எண், மற்ற இரு எண்களின் கூட்டுத் தொகை! எங்கே முயன்று பாருங்கள்!

ஆதாரம்: விளையாட்டுக் கணக்குகள்

- ஏ.எல். சாதிக், காரைக்கால்.

II. தோட்டத்திலிருந்து கமலா, "அப்பாடா வேலை முடிந்தது" என்று சொல்லிக்கொண்டே வீட்டுக்குள் வந்தாள். அவளைக் கண்ட கமலாவின் அண்ணன் "என்ன ஏதோ நிறைய வேலை செய்தது போல் பெருமூச்சு விடறே?" என்று கேட்டான்.

"ஒரு செடியைக் குழி தோண்டி நட்டு முடிச்சுட்டு வரேன். சரியா அரைமணி நேரமாச்சு. அலுப்பு இருக்காதா? அதான் பெருமூச்சு விடறேன்" என்றாள் கமலா.

அதே நேரம் கமலாவின் தாயார் கமலாவைப் போலவே பெருமூச்சு விட்டுக் கொண்டே வந்தார். "அம்மா நீ என்னம்மா செஞ்சுட்டு வர்றே?" என்று கேட்டான் கமலாவின் அண்ணன்.

"நானும் ஒரு குழி தோண்டி ஒரு செடியை நட்டு விட்டு வர்றேன். சரியா கால்மணி நேரத்தில் நட்டுட்டேன்" பெருமையாகக் கூறினார் தாயார்.

"அம்மா உனக்கு ஒரு செடி நட கால் மணி நேரமாச்சு. கமலாவுக்கு ஒரு செடி நட அரை மணி நேரமாச்சு. இரண்டு பேரும் சேர்ந்து அதே வேகத்தில் வேலை செய்தால் ஒரு செடி நட எவ்வளவு நேரமாகும்?" என்று கேட்டான். அம்மா, "முக்கால் மணி நேரத்தில் பாதி" என்றார். தங்கை, "சரியா 22½ நிமிடம்" என்றாள். சரியான விடை என்ன?

III. எட்டு எட்டுகளை வைத்துக் கொண்டு 1000 என்னும் எண்ணை வரவழைக்க முடியுமா?

ஆதாரம்: கதை சொல்லும் கணக்குகள்

- ஆறுபாதி புகழேந்தி.

IV. சில பெண்கள் கடைக்குச் சென்றனர். ஒவ்வொருவரும் ஒரே தொகைக்குப் பொருட்கள் வாங்கினர். அவர்கள் செலவழித்த மொத்தத் தொகை 203 ரூபாய். எந்தப் பொருளும் 20 ரூபாய்க்குக் குறைந்தது கிடையாது. அப்படியானால், அந்தப் பெண்கள் மொத்தம் எத்தனை பேர்? பொருட்களின் விலை என்ன?

ஆதாரம்: விளையாட்டுக் கணக்குகள்

–ஏ.எல். பாத்திமா, காரைக்கால்.

V. ராமுவின் வீட்டில் ஒன்பது அழகான முத்துகள் வாங்கினார்கள். முத்துகள் வாங்கப்பட்ட மறுதினம் நகை வியாபாரி தொலைபேசியில் ராமுவின் தந்தையைக் கூப்பிட்டு முத்துகளில் ஒன்று போலி என்றும், அது மற்றவைகளைவிட எடையில் குறைந்திருப்பதால் அதை நிறுத்துப் பார்த்துத் திருப்பி விடும்படியும் சொன்னார். எவ்வளவு முறை நிறுத்துப் பார்த்தும் அவர்களால் போலி முத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவர்கள் நகை வியாபாரியைக் கூப்பிட்டார்கள். அவர் இரண்டே நிறுவைகளில் போலியைக் கண்டுபிடித்து விட்டார். எப்படி?

– பெ. இராமசாமி, பன்னிரண்டாம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, செந்துறை, திண்டுக்கல் மாவட்டம்.

VI. ஒரு பணக்காரர் தன்னிடம் உள்ள கால், அரை, முக்கால் அளவு கொண்ட மொத்தம் எட்டுத் தங்கக் கட்டிகளைத் தன் மகள்கள் மூன்று பேருக்குப் பங்கிட்டுத் தந்தார். எவ்வாறு பங்கிடப்பட்டிருக்கும்?

- மா. மணி, பன்னிரண்டாம் வகுப்பு அரசு மேல்நிலைப் பள்ளி, செந்துறை.

விடைகள்



I. 11, 22, 33, 44, 55, 66, 77,88,99

இவற்றில் எதை 11–ஆல் வகுத்தாலும் மீதம் வராது. இவற்றின் கூட்டுத் தொகை = 495

4 + 5 = 9

II. பத்து நிமிடம் ஆகும். எப்படி என்று கேட்கிறீர்களா? கமலா அரைமணி நேரத்தில் ஒரு செடியை நடுவாள். எனவே அவள் ஒரு மணி நேரத்தில் இரண்டு செடிகளை நடுவாள். கமலாவின் தாயார் கால் மணி நேரத்தில் ஒரு செடியை நடுவார். இருவரும் ஒன்று சேர்ந்து உழைத்தால் ஒரு மணி நேரத்தில் ஆறு செடிகளை நடுவார்கள். அதன்படி ஒரு செடியை இருவரும் சேர்ந்து நடுவதற்குப் பத்து நிமிடம் ஆகும்.

III.

```
   8
   8
   8
  88
 888
----
1000
----
```

IV. 7 பெண்கள், 29 ரூபாய்

V. வியாபாரி 9 முத்துகளையும் மும்மூன்றாகப் பிரித்து வைத்துக்கொண்டார். பிறகு அவற்றில் இரண்டு பிரிவுகளை எதிர் தட்டுகளில் போட்டு நிறுத்தார். இவை இரண்டும் சம அளவாக இருந்தால் போலி முத்து நிறுத்தப்படாத மூன்றில் ஒன்று என்பதில் சந்தேகம் இல்லை. நிறுக்கும்போது ஒரு தட்டு முத்துகள் எடை குறைவாக இருந்தாலும் அதிலே போலி முத்து இருக்கிறது என்று தெரிந்து கொள்ளலாம். ஆக முதல் நிறுவையிலேயே போலி முத்தை மூன்றில் ஒன்றாகக் கண்டுபிடித்து விடலாம். பிறகு இரண்டாவது நிறுவையில் தட்டுக்கொன்றாகப் போட்டு நிறுத்தால், அதிலே போலி முத்திருந்தால் எடை குறைவால் தெரிந்து விடும். இல்லை. அவையிரண்டும் சமமாக இருந்தால் எஞ்சியிருப்பதே போலி முத்து என்று அறியலாம்.

VI.

முதல் மகள்
= ¼+ ¾= 1
2 கட்டிகள்

இரண்டாவது மகள்
= ¼+¼+¼+¼
4 கட்டிகள்

மூன்றாவது மகள்
= ½ + ½ =1
2 கட்டிகள்

மொத்தம்
= 8 கட்டிகள்

அழகன், செந்தில், குமரன்!

அந்தச் சிவப்பு ஃபைல் எப்படி காணாமல் போயிருக்கும் என்றே செந்திலுக்கு விளங்கவில்லை. சட்டென்று மறைவதற்கு அது ஒன்றும் சிறிய பொருள் இல்லை! செந்தில் கிளம்பும்போது அந்த ஃபைல் இருந்திருக்கிறது. அவன் குமரனுடன் 'வாக்' சென்ற அந்த இடைப்பட்ட நேரத்தில்தான் ஃபைல் 'எப்படியோ' தொலைந்து போயிருக்கிறது!

செந்தில் நிதானமாக ஒவ்வொரு அறையாகச் சென்று தேடினான். அலமாரிகளில் புத்தக அடுக்குகளைக் கலைத்துப் பரண்களில் ஏறிப் பார்த்தான். அந்தச் சிவப்பு ஃபைல் கிடைத்

6 வேலை சஸ்பெண்ட்



தியாகராஜனின் முகம் மிகவும் வெளிறிப் போயிருந்தது. தன் அப்பாவை இவ்வளவு டென்ஷனில் என்றுமே செந்தில் பார்த்ததில்லை. அவன் வெளியே சென்ற இந்த ஒரு மணி நேரத்திற்குள் அப்படி என்ன நடந்திருக்கும்?

"அப்பா என்னாச்சு?"

தியாகராஜன் பதில் சொல்லவில்லை. அவர் பதில் சொல்லும் நிலையில் இல்லை. பதட்டத்துடன் இலக்கு இல்லாமல் தேடிக் கொண்டிருந்தார்.

"அப்பா பார்த்துக்கிட்டிருந்த அந்தச் சிவப்பு ஃபைலைக் காணலை செந்தில்!" என்றாள் பூரணி கவலையுடன்.

"அந்த ஃபைல் ரொம்ப முக்கியமா?"

"நல்லாக் கேட்டே! அந்த ஃபைல் கிடைக்கலைன்னா என் வேலை போயிடும்டா!" சப்த நாடியும் ஒடுங்கி இருந்தார்.

அடுத்த அரை மணியில் அந்த வீடு தலைகீழாகப் புரட்டப்பட்டது. நடப்பது எதுவும் புரியாமல் குழந்தை கீதா பொம்மைகளுடன் மகிழ்ச்சியாக விளையாடிக் கொண்டிருக்க, எல்லோரும் எல்லா இடங்களிலும் தேடினார்கள்.

தால்தானே...

வாசல், கொல்லைப்புறம் என்று ஒரு இடம் விடாமல் தேடினான். தெரு குப்பைத் தொட்டியைக் கூடக் கிளறிப் பார்த்தான். அப்படி எங்கேதான் மாயமாகி இருக்கும்?

மறுநாள் வகுப்பில் அழகன் அருகே தான் இருந்தான். ஆசிரியரும் பாடத்தைக் கலகலப்பாகத்தான் கொண்டு சென்றார். இருந்தும், செந்தில் மனம் சோகத்தில் ஆழ்ந்திருந்தது. தன் அப்பாவிற்கு இப்படி ஒரு சோதனை திடீரென்று வந்து விட்டதே...

காலை, அப்பா அலுவலகம் கிளம்பிச் சென்றிருக்கிறார். அதி முக்கியமான அந்த ஃபைல் எங்கே என்று கேட்கப் போகிறார்கள். 'தொலைத்து விட்டேன்!' என்று முழிக்கப் போகிறார். அப்புறம் என்ன நடக்கும்? நினைக்கவே செந்திலுக்கு நெஞ்சு திக் என்றது.

செந்தில் தொடையில் தட்டிய அழகன், "ஏய் செந்தில்! உனக்கு என்னாச்சு? ஏன் ஒரு மாதிரி இருக்கே?" என்று கிசுகிசுப்பாகக் கேட்டான்.

"ஒண்ணுமில்லைடா!"

பதில் சொன்ன செந்தில் பாடம் கவனிப்பது போல் பாசாங்கு செய்தான். 'அழகன் தொழிலகம்' ஃபைல் தொலைந்த விஷயத்தை அழகனிடம் சொல்லலாமா? தோன்றிய அந்த யோசனையை உடனடியாக நிராகரித்தான். சிறிது நேரம் சென்றது.



மறுபடியும் அழகன் செந்திலைத் தொட்டு தொந்தரவு செய்தான்.

"ம்கூம். உன் முகம் சரியில்லைடா. என்ன பிரச்னை? சொல்லு செந்தில்."

இவன் விடமாட்டான் போலிருக்கிறது. செந்தில் பெருமூச்சு விட்டான். பொய் சொல்லத் தயாரானான்.

"ஒண்ணுமில்லைடா அழகா. லேசாத் தலை வலி. அவ்வளவுதான்."

இடைவேளையின்போது அழகனும் செந்திலும் வெளியே வந்தார்கள். பழங்கள், தின்பண்டங்கள், தள்ளு

பத்மா ரவிசங்கர்

வண்டியில் ஐஸ் என்று வகை வகை யாகக் கடை பரப்பி இருந்தார்கள். பாட்டுப் புத்தகம், காமிக்ஸ் புத்தகங் கள்கூட விற்பனைக்கு வைத்திருந்தார் கள்.

மாணவர்கள் வாங்குவதும், தின்பது மாக இருந்தனர். உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்தனர்.

அழகன் வேர்க்கடலை வாங் கினான். இருவரும் ஒரு மர நிழலில் ஒதுங்கி நின்று கடலையைக் கொறித்துக் கொண்டிருந்தனர். சாலையில் சுமாராக டிராஃபிக் இருந்தது. எதிர்ச்சாரி கடை களை அசுவாரசியமாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான் செந்தில்.

திடுமென்று அவனுக்குச் சிலிர்த்தது. அவன் பார்வை உறைந்தது. சற்றுத் தொலைவில் எதிர்ப்புறத்தில் அந்தத் தாடிக்காரன் நின்று கொண்டிருந்தான்!

சந்தேகமில்லை! அவனேதான்! மலை உச்சியில் பார்த்த அதே சதிகாரன்தான்! செந்திலுக்கு எப்படி மறக்கும்? அவன் இப்போதும் ஒட்டுத் தாடி வைத் திருந்தான். அதனால், அவன் எங்கே அல்லது யாரை வேவு பார்க்கிறான் என்று செந்திலால் அனுமானிக்க முடியவில்லை.

பள்ளி மணி ஒலிப்பது கேட்டது.

"கிளாஸுக்கு டயமாச்சு. வாடா செந்தில்!"

"ஆ! மறந்தே போயிட்டேன் அழகா! அவசரமா ஒரு போன் பண்ணணும்! நீ கிளாஸுக்குப் போ. நான் பின்னாலேயே வந்துடறேன்"

அழகனும் 'சரியென்று' அப்பாவித் தனமாகத் தலையாட்டி விட்டுப் புறப்பட்டான்.

செந்தில் பார்த்தும் பார்க்காததும் போல கவனிக்கத் தொடங்கினான். எதிர்ப்புறத்தில் ஒட்டுத் தாடி சிலை போல நின்று கொண்டிருந்தான். பள்ளியை நோக்கி அவன் முகம் இருந் தது. என்ன பார்க்கிறான் என்றுதான் தெரியவில்லை. அவன் வலக்கை பாண்ட் பாக்கெட்டினுள் இருந்தது. அந்த பாக் கெட்டினுள் அந்தக் 'கத்தி' இருக்குமோ?

ஒட்டுத் தாடி நடக்கத் தொடங் கினான். செந்திலும் சாலையைக் கடந் தான். காஷுவலாகப் பின் தொடர்ந் தான்.

ஒட்டுத் தாடி அதிக தூரம் நடக்க வில்லை. ஒரு பலசரக்குக் கடையினுள் நுழைந்தான்.

அங்கிருந்த தொலைபேசியில் அவன் எண்கள் சுழற்றுவதை செந்தில் கவனித் தான். தேவையான அளவு நெருங்கியதும் செந்தில் நின்று கொண்டான். அவன் கண்கள் எங்கோ பராக்குப் பார்த்தன. ஆனால் தீட்டப்பட்ட காதுகளுடன் காத்திருந்தான்.

"ஹலோ நான் 'எஸ்' பேசறேன்! ஆமா... 'அங்கிருந்துதான்..." என்றான் ஒட்டுத்தாடி. தொடர்ந்து சங்கேதமாகவே பேசினான்.

"ஆமா... வலை ரெடி... சூழ்நிலை பக்கா... சரிதான்... பழம் ரெடியா...? நல்லது...உடனே புறப்பட்டு வாங்க..."

போனை வைத்துவிட்டு வெளியே வந்தான் ஒட்டுத்தாடி. சட்டென்று கை காண்பித்து ஆட்டோ ஒன்றில் ஏறிக்கொண்டு பறந்து விட்டான். இனி



பின் தொடர வழி இல்லை.

பலத்த யோசனையுடன் செந்தில் பள்ளிக்குத் திரும்பினான்.

மாலை. தியாகராஜன் முகம் துக்க கரமாக இருந்தது. செந்தில் வந்ததைக் கூடக் கவனிக்காமல் உத்தரத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

செந்தில் நேராகச் சமையலறைக்குச் சென்றான். அம்மாவிடம் தாழ்ந்த குரலில் கேட்டான்.

"என்னம்மா ஆச்சு?"

''அப்பாவை வேலையிலிருந்து சஸ்பெண்ட் பண்ணி இருக்காங்க!''

''ஐயையோ!'' என்றான் அதிர்ச்சியுடன்.

"நிர்வாகத்தைக் குறை சொல்ல முடியாது. ரூல்படி உள்ள தண்டனைதான் தந்திருக்காங்களாம். அது முக்கியமான ஃபைலாம். அஜாக்கிரதையா நடந்துக்கிட்டேனேன்னு அப்பா புலம்பிக்கிட்டிருக்காரு..." என்றார் பூரணி கவலையுடன்.

"இப்ப என்னம்மா செய்றது?''

''அந்த ஃபைலைத் தேடி எடுத்துக்கிட்டு வாங்கன்னு கண்டிப்பாகச் சொல்லி அனுப்பி இருக்காங்க. நேத்து, நான் சமையலறையில் வேலை செய்துகிட்டிருந்ததால, எப்படி காணாமப் போச்சுன்னே புரியலை. ஒரே மர்மமா இருக்கு.''

"அந்தச் சமயம் நானும் குமரனுடன் வெளியே போயிருந்தேன்.''

"நல்லவேளை! பைலை நாய் இழுத்துக்கிட்டுப் போயிருக்கும்னு உங்கப்பா பழி போட்டிருப்பார்!'' என்று பூரணி விரக்தியுடன் சிரித்தார்.

வீட்டில் இண்டு, இடுக்கு விடாமல் மறுபடியும் ஒரு சுற்றுத் தேடினான் செந்தில்.


"என்ன செய்யப் போறேன் பூரணி? எப்படி குடும்பத்தைக் காப்பாத்தப் போறேன்? ஃபைல் போச்சு! லைஃப் போச்சு! எல்லாம் போச்சு! நான் யாருக்கும் எந்தத் தீங்கும் நினைச்சதுகூட இல்லை. எவ்வளவு பெரிய அவமானம்! வேலையிலிருந்து தூக்கும்படி நடந்துக்கிட்டேனே...''

பக்கத்து அறையில் அப்பா, அம்மாவிடம் புலம்புவது செந்திலுக்குக் கேட்டது. கடவுளே! இந்த இக்கட்டிலிருந்து எப்படியாவது என் அப்பாவைக் காப்பாற்று! நெஞ்சுருக வேண்டிக்கொண்டான்.

அடுத்த இரண்டு நாட்களும் தியாகராஜன் வெளியே எங்குமே செல்லவில்லை. வீட்டிலேயே முடங்கிக் கிடந்தார். ஏதோ பெரும் குற்றம் செய்தவர் போல் எப்போதும் தலை குனிந்திருந்தார். எவரிடமும் பேசவில்லை. உள்ளுக்குள் புழுங்கும் வேதனையும் அவமானமும் அவர் முகத்தில் தெரிந்தது.

மாலை அப்பாவின் அறைக்குள் செந்தில் நுழைந்தான். அந்த வேளையில் அதிசயமாக அப்பா கட்டிலில் கண்மூடிப் படுத்திருப்பதைப் பார்த்தான். பாவம்; இரவெல்லாம் தூங்கியிருக்க மாட்டார்.

ஓசைப் படுத்தாமல் கட்டில் அருகே சென்றான். அப்பாவின் அழகிய முகம் தூக்கத்திலும்



வாடியிருந்தது. இமைக்காமல் பார்த்தான். அப்பா வெளியே செல்லும்போது நிமிர்ந்த நெஞ்சுடன் எவ்வளவு கம்பீர மாக இருக்கும்... ஆனால் தற்போது... தற்போது... செந்தில் கண் கலங்கினான். கரகரவென்று சுரந்த கண்ணீர் அவன் கன்னத்தில் வழிந்தது.

"செந்தில்! ஏன் அழறே?" என்று கேட்ட தியாகராஜன் எழுந்து உட்கார்ந்தார்.

"அப்பா!" என்று அவர் கையைப் பற்றிக்கொண்ட செந்தில் மேலும் அழுதான். "உங்களை இப்படி பார்க்கத் தாங் கலைப்பா. உங்க மனசு படற பாடு எனக்குப் புரியுதுப்பா. அவமானம்னா என்னன்னு எனக்குத் தெரியும்பா. தினம் தினம் என்னை எவ்வளவோ பேர்கள் அவமானப்படுத்தி இருக்காங்க" என்றான் உடைந்த குரலில்.

அவருக்குள் எதுவோ புரண்டது. அவனை அலட்சியப்படுத்திய கணங்கள் அவர் நினைவுக்கு வந்தன. அவை எதையும் பொருட்படுத்தாமல் எவ்வளவு பாசம் வைத்திருக்கிறான்! அவர் அகக் கண் திறந்துகொண்டது. "என் மகன் செந்தில் சொக்கத் தங்கம்!" என்று பாசமுடன் முணுமுணுத்தபடி அவனை அணைத்துக்கொண்டார். பிறகு –

"நம்பிக்கையை இழக்காதீங்கப்பா. அந்த ஃபைலை எப்படியும் கண்டு பிடிச்சுடலாம்."

"எப்படி? இனி தேட ஒரு இடமும் பாக்கி இல்லையே!" என்றார் பரிதாபமாக.

"காணாமப் போறதுக்கு முந்தி அந்த ஃபைலைப் பார்த்து முடிச்சுட்டீங்களா?"

"முடிஞ்சுருச்சு செந்தில். இந்த டீப்பாய் மேலதான் ஃபைலை வெச்சிருந்தேன். பெருச்சாளி ஏதும் வந்து இழுத்துக்கிட்டுப் போயிருக்குமோ?"

"இருக்காதுன்னுதான் தோணுதுப்பா! அந்த ஃபைல் வேலை முடியற ஸ்டேஜ்ல நான் வெளியே போயிருந்தேன். அம்மாவும் சமையல் அறையிலிருந்து வெளியே வரலை."

"சரிதான்" என்றார் தியாகராஜன்.

"அந்தச் சமயம் வெளியிலிருந்து வேற யாராவது நம்ம வீட்டுக்கு வந்திருந்தாங்களா?"

"ஓ...! என் ஆபீஸ் நண்பர்கள் ரெண்டு பேர் வந்திருந்தாங்க. முதல்ல வந்தவர் கோதண்டராமன். பக்கத்துல ஏதோ கடைக்கு வந்துட்டு நம்ம வீட்டுக்கும் வந்தார். பத்து நிமிஷத்துல கிளம்பிட்டார். கொஞ்ச நேரத்துல சண்முகம் வந்தார்." தியாகராஜன் சற்றுத் தயங்கி விட்டு, "சண்முகம் கொஞ்சம் பணம் கடன் வாங்கிட்டு உடனே புறப்பட்டுப் போயிட்டார்."

கேட்டுக் கொண்டிருந்த செந்தில் முகம் மலர்ந்தது. நிமிர்ந்து உட்கார்ந்தான்.

"சே! நீ நினைக்கற மாதிரி இல்லைடா செந்தில். அவங்க ரெண்டு பேரும் ரொம்ப நல்லவங்க. டீசண்டான ஃப்ரெண்ட்ஸ்கூட!" என்றார் தியாகராஜன் உறுதியாக.

அடுத்தநாள் மாலை. செந்தில், அந்த ஒட்டுத் தாடியுடன் மேலும் இரண்டு சதிகாரர்களைப் பார்த்தான்! மூவரையும் பின்பற்றத் தொடங்கினான்!

(தொடரும்)

ஓவியப் போட்டி



நாம் வீடுகளில் வளர்க்கும் செல்லப் பிராணியான 'நாய்'தான் இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு. பாமரேனியன், டாபர்மேன் என எந்த விதமான அழகான நாயாகவும் இருக்கலாம். படம் வண்ணத்தில் வரைய வேண்டியது அவசியம். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. உங்கள் முகவரியைத் தெளிவாக எழுதவும். கடைசி தேதி **20.11.2000**

பல வண்ண ஒளி!

பழங்காலத்தில் ஆசியா கண்டத்தில் வசித்து வந்த மக்கள் ஒரு வகை பாறை உப்பை உணவில் சேர்த்து வந்தனர். இந்தப் பாறை உப்பு நெருப்பில் விழும்போது பல ஒளி வண்ணங்களை உருவாக்கின. இதனைப் பார்த்த மக்கள் வியப்பும் மகிழ்வும் அடைத்தனர். இதனால் விசேஷ காலங்களில் இந்தப் பாறை உப்பைத் தீயில் போட்டு வர்ண ஒளியை உண்டாக்கினர். இது தான் பட்டாசு உருவாவதற்கு அடிப்படையாக விளங்கியது. இப்படித்தான் பட்டாசு கண்டுபிடிக்கப்பட்டதென்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இந்தப் பட்டாசுகளை ஆசியா கண்டத்தினரே முதலில் கண்டுபிடித்தனர். சீனர்களே முதலில் இதனை முறையாகத் தயாரித்துப் பயன்படுத்தினர்.

மத்தாப்புகளில் பேரியம் உப்புகள் கலக்கப்பட்டிருந்தால் பச்சை நிறமாகவும், ஸ்ட்ரான்ஷியம் உப்புகள் கலக்கப்பட்டிருந்தால் சிவப்பு நிறமாகவும், சோடியம் உப்புகள் கலக்கப்பட்டிருந்தால் மஞ்சள் நிறமாகவும் எரியும்.

சிவகாசியில் பட்டாசு தயாரிக்கும் தொழில் 1928ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இன்று அங்கு 600க்கும் அதிகமான வாணவெடி தொழில்களும் 700க்கும் அதிகமான வெடி சேமிப்புக் கிடங்குகளும் உள்ளன.

'டபாஸ்' என்ற சமஸ்கிருத சொல்லிலிருந்து பட்டாசு என்ற பெயர் வந்தது.

தீபாவளியன்று நாம் வெடிக்கும் அணுகுண்டு வெடியினால் ஏற்படும் சத்தத்தின் அளவு 120 டெசிபல்.

சிவகாசியில் தயாராகும் பட்டாசுகளில் சுமார் 75 சதவீதம் வட மாநிலங்களில்தான் விற்பனையாகின்றன.

– ஆறுபாதி புகழேந்தி,
மயிலாடுதுறை.





தங்கம் எங்கே கிடைக்கிறது?

இயக்கம்...

கணிப்பொறி பாட வேளை. ஆசிரியர் இயக்க அமைப்புகள் என்ற தலைப்பில் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். ''வன்பொருள், மென்பொருள், காந்தவட்டு போன்ற இயக்கிகள் உள்ளன'' என்று கூறினார். கடைசி வரிசையில் உட்கார்ந்திருந்த மாணவன் பாடத்தைக் கவனிக்காமல் பேசிக் கொண்டிருந்தான். ஆசிரியர் அவனை எழுப்பி ''கணிப் பொறிக்குள் என்னென்ன இயக்க அமைப்புகள் உள்ளன?'' என்று கேட்டார். அவன் திருதிருவென விழித்தான். சிறிது நேரம் கழித்து ''சார், கணிப் பொறிக்குள் கல்லாமை இயக்கம், அறிவொளி இயக்கம், சாரணர் இயக்கம் போன்றவை உள்ளன'' என்றானே பார்க்கலாம்! எங்களுடன் சேர்ந்து ஆசிரியரும் சிரித்து விட்டார்!

– ஆர். கலா,
பத்தாம் வகுப்பு,
அரசு உயர்நிலைப் பள்ளி, தையூர், விழுப்புரம் மாவட்டம்.





பேச்சுப் போட்டி

எங்கள் வகுப்பு ஆசிரியர் வித்தியாசமானவர். வாரத்தில் ஒரு பாட வேளையில் க்விஸ், பாட்டு, பேச்சுப் போட்டி என நடத்துவார்.

அன்று பேச்சுப் போட்டி. நல்லதோர் வீணை செய்வோம்' என்பது தான் தலைப்பு. என் தோழியை முதலில் பேச அழைத்தார் ஆசிரியர். அவள் எங்களுக்கு முன்னால் நின்று வணக்கம் கூறி பேச்சை ஆரம்பித்தாள். ''சங்கீதம் என்பது பணத்தால் வாங்க முடியாதது. மென்மையான, இனிமையான இசைக்குப் புதிய நல்லதோர் வீணை வாங்க வேண்டும். பழையதைப் பயன்படுத்தக் கூடாது'' என்று பேசி முடித்தாள். ஆசிரியருக்கும் எங்களுக்கும் சிரிப்பை அடக்க முடியவில்லை! பிறகு ஆசிரியர் அவளிடம் ''நல்லதோர் வீணை செய்வோம் என்றால் புதிய சமுதாயம் படைப்போம் என்பது பொருள்'' என்றார். அவள் அமைதியாக உட்கார்ந்து விட்டாள்.

– ஏ.எல். பாத்திமா,
காரைக்கால்.

எங்கே கிடைக்கும்?

சமூக அறிவியல் ஆசிரியர் கனிமங்கள் பற்றிப் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். என் பக்கத்தில் அமர்ந்திருந்த மாணவன் எதையோ தேடிக் கொண்டிருந்தான். அவனை எழுப்பிய ஆசிரியர் "தங்கம் எங்கே கிடைக்கிறது?" என்று கேட்டார். சுலபமான கேள்வியை ஆசிரியர் கேட்ட சந்தோஷத்தில் "நகைக் கடையில் கிடைக்கும் சார்" என்றானே பார்க்கலாம்! நாங்கள் சிரித்தோம். உடனே அவன் "ஏன் சார் சிரிக்கிறாங்க? கோலார் தங்க வயலில் எல்லாம் இப்போது அரிதாகத்தான் தங்கம் கிடைக்கிறதாம்! அதனால்தான் நான் அப்படி சொன்னேன்" என்றான். ஆசிரியர் அவனிடம் "பாடம் நடத்தும் போது கவனி" என்று கூறி உட்கார வைத்து விட்டார்.

– ராமகிருஷ்ணன்,
காயக்காடு, அறந்தாங்கி.

கவனித்தாயா?



ஆசிரியர் வரவில்லை. நான் எழுதிக் கொண்டிருந்தேன். என் தோழி வரைந்து கொண்டிருந்தாள். என் பேனாவில் மை இல்லாததால் என் தோழியின் பையில் இருந்து பேனா எடுத்து அவளிடம் கேட்காமல் எழுதிக் கொண்டிருந்தேன். இதைக் கவனித்த இன்னொரு மாணவி என் தோழியிடம் "உன் பேனாவைக் கேட்காமல் எடுத்து எழுதறா, நீ கவனிக்காமல் இருக்கியே!" என்றாள். அதற்கு என் தோழி "நான் உன் பென்சிலை எடுத்து வரைஞ்சிக்கிட்டு இருக்கேன். நீ கவனிச்சியா?" என்று கேட்க அருகில் இருந்த அத்தனை பேரும் சிரித்து விட்டோம். அந்த மாணவியோ திகைத்து விட்டாள்!



– எஸ். ப்ரியா,
பதினோராம் வகுப்பு, அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, ஆண்டிப்பட்டி.

சமூக சீர்திருத்தம்


அன்று பள்ளி திறந்த முதல் நாள். வகுப்பிற்கு வந்த புது ஆசிரியர் ஒவ்வொரு மாணவரிடமும் பெயர், எதிர்கால லட்சியம் ஆகியவற்றைக் கேட்டுக் கொண்டு வந்தார். எல்லோரும் சொல்லிக் கொண்டு வந்தோம். ஒரு மாணவன் மட்டும் வித்தியாசமாக "எனது லட்சியம் சமூக சீர்திருத்தவாதியாவது" என்றான். இதைக் கேட்ட என் குறும்புக்கார நண்பன் "அப்படின்னா நீ தெருவைச் சுத்தப்படுத்தற வேலை செய்யப் போறே?" என்றான். அவனுக்கோ கோபம் வந்து விட்டது. "சமூக சீர்திருத்தம்ங்கிற பேரில் எந்த வேலை என்றாலும் இழிவாக நினைக்காமல் செய்வேன்" என்றான். ஆசிரியர் அவனைப் பாராட்டி உட்கார வைத்தார்.


– எல். சாதிக்,
காரைக்கால்.




கோழி எதைத் தேடுகிறது?

கதை: சக்தி சரவணன், மோகனூர்.
படம்: விண்மணி




ஆஹா! எளிதாகப் பறந்து என் உறவினர்களைக் காணலாம்.
நான் வானுயரப் பறந்து கழுகுப் பார்வையுடன் எலிகளைப் பிடித்துச் சாப்பிடலாம்.
பறவைகளே! நான் சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள். இந்த ஊசியைத் தைத்து முடித்தவுடன் பத்திரமாகத் திரும்பத் தந்து விட வேண்டும்.
கண்டிப்பாகத் தந்து விடுகிறோம். உமக்கு எங்கள் நன்றி.
சில பறவைகளைத் தவிர சிறகு தைக்கப்பட்ட மற்ற பறவைகள் பறக்க ஆரம்பித்தன. கோழியின் முறை வந்தது...
ஐயையோ! ஊசியைக் கீழே போட்டுட்டேனே. என்ன செய்வேன்?
சீக்கிரம் தேடு. இந்தக் குப்பைகளில் எப்படி கண்டுபிடிப்பே?
ஊசியைப் பெற்றுச் செல்ல வனதேவதை வந்தது.
எல்லோரும் தைத்து விட்டீர்களா?
இல்லை. இன்னும் சிலர் தைக்க வேண்டியுள்ளது. ஆனால் மந்திர ஊசி தொலைந்துவிட்டது.
என்ன, தொலைத்து விட்டீர்களா?
ஆமாம்! கோழிதான் தவற விட்டு விட்டது.
வனதேவதை கோபம் அடைந்தது.
கவனமில்லாத கோழியே! மந்திர ஊசியைக் கண்டுபிடிக்கும் வரை உன்னால் பறக்க முடியாது. இறக்கைகளைத் தைக்காத மற்ற பறவைகளுக்கும் இதே கதிதான்!
கோழி செய்த தவறுக்கு நாங்கள் எப்படி பொறுப்பாவோம்? கருணை காட்டுங்கள். நாங்கள் பறக்க வேண்டும்.


வேறு வழியே இல்லை... ஊசி கிடைத்த பின் தான் நீங்கள் பறக்க முடியும். வருகிறேன்.
கோழி உட்பட மயில், வாத்து, ஈமு, பெங்குவின், நெருப்புக் கோழிகளால் பறக்க இயலாமல் போய்விட்டது.
இந்தக் கோழியால் நாமும் பறக்க முடியலை. நினைக்க, நினைக்க அழுகையாக வருகிறது.
அன்றிலிருந்து கோழி குப்பைகளைக் கிளறி ஊசியைத் தேடிக்கொண்டிருக்கிறது.



கோகுலம் க்விஸ்

கீழே கொடுக்கப்பட்டுள்ள பத்து கேள்விகளுக்கும் சரியான விடைகளைத் தேடிக் கண்டுபிடியுங்கள். விடைகளை எழுதி, முகவரிக் கூப்பனை ஒட்டி, உங்கள் முழு முகவரியையும் தெளிவாக எழுதி அனுப்ப வேண்டும். சரியான விடைகளை எழுதிய 20 பேருக்குப் பரிசு வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும். கடைசி தேதி **30.11.2000**

1. உலகிலுள்ள தீவுகளுள் மிகப் பெரியது________

2. பாலூட்டிகளில் மிகப் பெரியது________

3. கவிமணி என்று அன்புடன் அழைக்கப்பட்ட கவிஞர் ________

4. ஆல்ஃபிரட் நோபெல் ________ நாட்டுக்காரர்.

5. தொல்காப்பியர் இயற்றிய நூல் ________


6. மிகுந்த ஒளி வீசும் நட்சத்திரம் ________

7. நட்சத்திர மீன் ________ தொகுதியைச் சேர்ந்தது.

8. இந்தியாவின் இரும்பு மனிதர் என்று போற்றப்பட்டவர்________

9. ஒலிம்பிக்ஸில் பளு தூக்கும் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற இந்தியப் பெண் ________

10. காந்தியடிகள் பிறந்த மாநிலம் ________



உங்கள் நூலகம்



படிக்கும் போதே ஆர்வம் ஏற்படுகிறது!

இளையோருக்கு இனியவை நூறு

ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற ஆசிரியரின் நூறு சிறந்த சிறுவர் பாடல்களின் தொகுப்பு. படிக்கும்போதே தானாகவே பாட வைக்கிறது. குழந்தைக் கவிஞரின் பெருமை மிகு தாக்கம் நன்கு தெரிகிறது. சிறுவர் விரும்பும் வழக்கமான தலைப்புகள் தவிர மற்றவர்களால் அதிகமாகப் பாடப் படாத தர்பூசணிப் பழம், பதியம் போட்டு வளர்க்கப் படும் மரங்கள் என்று சில புதுமைத் தலைப்பு களிலும் பாடல்கள் உள்ளன. சந்தம் சொடக்குப் போட வைக்கிறது.

வெட்டிநட வெட்டிநட துளிர்க்கும் – அவை
வேண்டும்பல நன்மைகளை அளிக்கும்
திட்டமுடன் விளங்கும் பூவரசு – இது
தேக்குமரம் போல் விளங்கும் மவுசு –
(பக் 83)

சிவந்தநிற மாயிருக்கும்
அழகைப் பாருங்கள்!
சிறு துணுக் காய்
எ டு த் து
வாயில்
போட்டுப்
பாருங்கள்!
– (பக் 87)

கி. வேணு கோபால், பக். 130, ரூ. 32. 5– படையாட்சித் தெரு, கோர்க்கோடு அஞ்சல், வில்லியனூர் வழி, புதுவை மாநிலம் - 605 110.

பாப்பா, பாப்பா கதை கேளு!

எல்லாச் சுவைகளும் நிறைந்த 22 சிறுகதைகளின் தொகுப்பு இது.கதை கேட்கும் குழந்தைகளுக்கு எதைச் சொல்வது எப்படி சொல்வது என்று திகைக்கும் பெற்றோர்களுக்கும் ஆசிரியப் பெருமக்களுக்கும் தமிழை எழுத்துக் கூட்டிப் படிக்கத் தெரிந்த குழந்தைகளுக்கும் சுவையான நூல்.

இரண்டாம் தொகுதி, அப்பாஸ் மந்திரி – பக் 96 ரூ. 35 குட்புக்ஸ் பப்ளிகேஷன்ஸ், பிளாக் நம்பர் ஏ.எ 96 (பிள்ளையார் கோவில் எதிரில்) அண்ணாநகர் - சென்னை - 600 040.

வகுப்பறையில் ஆங்கிலம் பேசிப் பழகுங்கள்

அடிப்படை இலக்கணத்திலிருந்து தொடங்கி மிக எளிய நடையில் விளக்கி படிப்படியாகச் சொற்களை இணைக்கும் முறை என்று ஆங்கிலத்தில் பேச வைக்கும் முறையை அழகாகத் தந்துள்ளார் ஆசிரியர். படித்து முடித்ததும் நம்மாலும் ஆங்கிலத்தில் பேச முடியும் என்ற நம்பிக்கையை ஊட்டுகிறது.

சா. எழிலன், பக்.168, ரூ.63, பிளாட் எண்-4698 ஏ.ஏ, 144 - மெயின் ரோடு, அண்ணாநகர், சென்னை - 40.

இன்டர்நெட்

இன்று உலகையே வீட்டுக்குள் கொண்டு வந்து விட்ட இன்டெர் நெட்டின் அருமை பெருமைகள். அவை திறம் படச் செயல்படும் முறை, செயல் படுத்தப் பட வேண்டிய முறை, இதன் விரிந்த பயன்கள் என இன்டெர்நெட்டைப் பற்றிய எல்லாச் செய்திகளையும் இந்த நூல் அருகே இருந்து ஆசிரியரே சொல்லித் தருவதுபோல் எளிய நடையில் கூறுகிறது. படிக்கும்போதே செயல்பட வேண்டும் என்ற ஆர்வத்தையும் ஊட்டுகிறது. ஏராளமான விளக்கப் படங்கள் உதவுகின்றன.

ஸ்ரீனிவாச ஜெகந்நாதன், பக். 104, ரூ.45, மணிமேகலைப் பிரசுரம், 4. தணிகாசலம் சாலை, தியாகராய நகர், சென்னை – 600 017.

- ரோ



முடங்கியாற்றின் கருவாட்டுப் பாறையில் இறங்கி ஆற்றைக் கடந்து ஒற்றையடிப் பாதை வழியாக அவர்கள் நடந்தார்கள்.

விடுமுறை நாளானதால் மலட்டாற்றின் வட்டக்கேணியில் குளித்துவிட்டு வரலாமென்று பள்ளி மாணவர்களான பூங்குன்றன், முருகன், கணேசன், காமராசு, கண்ணன், பூங்கோதை, அகிலா ஆகியோர் முதல் நாளே பேசி, ஆதிவாசிச் சிறுவன் நீலனையும் அங்கு வரச் சொல்லிவிட்டுப் புறப்பட்டார்கள். மயிலோடை பக்கம் செல்லும்போது ஏதோ வாடை அடிக்கவே அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''உளுந்தங்களி வாசனை மூக்கைத் துளைக்குதே, யாரு கொண்டு வந்திருக்கா?'' முருகன் கேட்டான்.

கொ.மா. கோதண்டம்

''ஆமாம்! வறுத்த உளுந்த மாவுல வெல்லப் பாகு விட்டு நெய்யும் ஏலக்காயும் போட்டுக் களி செய்து சாப்பிடற நேரத்துலதான் கம்முனு இந்த மாதிரி வாடையடிக்கும். யாரு வச்சிருக்காங்க?'' என்று கணேசன் கேட்டதும்,

"நான் கொண்டு வரலையே" என்றான் காமராசு.

''ஒருவேளை பூங்கோதை கொண்டு வந்திருப்பாளோ?'' என்றாள் அகிலா. பூங்கோதையும் மறுத்தாள்.

"நான் இல்லே, நீ இல்லேன்னா எப்படி கமகமன்னு வாடை அடிக்கும்?" என்று கேட்டான் முருகன்.

அவர்கள் பேசிக்கொண்டே மயிலோடையைக் கடந்தனர். எதிரே நீலன் வந்து கொண்டிருந்



''அதுக்கு முன்னால ரொம்பத் தூரமா நீங்க ஒன்னாத் தானே சேர்ந்து வந்தீங்க?''

"ஆமாம்" எல்லோரும் கூறினார்கள். "அப்ப முன்னாலே வாடை அடிக்கலே...?"

"அதானே... என்ன இது. புதிரா இருக்கு?"

"வாங்க. உளுந்தங் களியைக் காட்டறேன்'' என்ற நீலன் திரும்பி மயிலோடையில் இறங்கி நின்றான்.

''ஓடைக்கரையைப் பாருங்க."

''என்ன இருக்கு?''

"ரெண்டு

சிறுத்தையும் முள்ளம் பன்றியும்

பக்கமும் புதரா இருக்கு. இதுதான் பூலாஞ் செடி. இதன் கிழங்கு, இலை எல்லாம் மருந்துக்கு ஆகும். அதிகாலையில் இருந்து நல்லா வெயில் வரும் வரைக்கும் இந்தச் செடிகளில் இருந்துதான் இந்த உளுந்தங்களி வாசனை வரும்."

''என்னப்பா இது ஒரு செடியில இருந்து ஒரு நேரத்துல குறிப்பிட்ட ஒரு வகை வாசனை எப்படி வரும்?"

"எப்படியோ சாமி இந்தச் செடிக்கு இயற்கையிலேயே அப்படி ஒரு தன்மை இருக்கு. ஆனா உங்க நாட்டுக்கார ஆளுங்க என்ன சொல்வாங்கன்னா 'நல்ல பாம்பு அசைபோடும்போதுதான் இந்த வாசனை வரும். இந்தச் செடிகளில் நல்ல பாம்பு தங்கியிருக்கும். அப்படின்னு சொல்வாங்க."

தான்.

"வாங்க சாமிகளா"

"நீலா இங்க வாப்பா! எங்களில் யாரோ உளுந்தங்களி கொண்டு வந்து இருக்காங்க. வாடை கமகமன்னு மூக்கைத் துளைக்குது. கேட்டால் யாருமே ஒத்துக்கிட மாட்டேங்கிறாங்க."

"ஆமா, ஆமா எனக்குக் கூடத்தான் வாடை அடிக்குது"

"அப்படி சொல்லு. ஆனா யாரும் ஒத்துக்கிடலயே" என்றாள் அகிலா.

"சாமி இந்த வாடை உங்களுக்கு எப்ப இருந்து தெரிஞ்சுது?"

"கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே தான்" கண்ணன்.



"மேகநாதனைப் பார்த்ததும் இந்த ஆட்டம் ஆடுறானே யாரவன்?"

"'மயில்'வாகனம்!"

— தஞ்சை தாமு

"அதிசயமாத்தான் இருக்கு. வாங்கப்பா வேகமா போயிடலாம்."

"பாம்புகள் இருந்தா எங்களுக்குத் தெரியும் சாமி. அங்கே அதெல்லாம் இல்ல. பயப்படாம வாங்க" என்று நீலன் கூறியதும் அவர்கள் விடுவிடுவென நடந்தனர்.

"நீலா நீயோ காட்டுவாசி. நீ எப்படி மிருகங்களைக் கொல்ல வேண்டாமென்று சொல்றே?"

"சாமி! நம்மள படைச்ச கடவுளுதானே அவற்றையும் படைச்சாரு. பாவம் அதுக, நம்ம சனங்களுக்கு ஒரு கெடுதலும் செய்யாதபோது, நாம எதுக்கு அதைக் கொல்லணும்?"

"உங்க ஆளுக வேட்டையாட மாட்டாங்களா?"

"வேட்டையாட எங்களுக்குத் தெரியாது சாமி. தானா செத்தது, மிருகங்க கொன்னு தின்ன மீதி கெடச்சா எங்க சனம் எடுத்துப்பாங்க."

"நீலன் சொன்னதும் எனக்கு ஒண்ணு நினைவு வருது" என்றாள் பூங்கோதை.

"என்ன சொல்லு பார்ப்போம்?"

"எங்க டீச்சர் ஒருநாள் சொன்ன விசயம் இது, நம்ம மூதாதையர்கள் எப்படி எல்லா உயிர்களையும் ஒண்ணா சமமாக கருதணும்னு சொன்னாங்க."

"விவரமா சொல்லேன்."

"மயில் முருக வாகனம், அன்னப் பறவை சரஸ்வதியின் வாகனம், யானை விநாயகரேதான், அதோடு இந்திரன் வாகனம், காளை மாடு சிவ பெருமான் வாகனம், அவர் கையில் கூட மான்குட்டி இருக்கும். புலி சக்தியின் வாகனம், சிங்கம் காளியின் வாகனம், இப்படி எல்லா உயிரினங்களும் கடவுள் தன்மை கொண்டதால யாரும் அதைக் கொல்லக் கூடாதுன்னு டீச்சர் சொன்னாங்க."

"அட, அருமையான விளக்கமில்லே" இது பூங்குன்றன். மலட்டாறு கேணி வந்ததும் அவர்கள் குளிக்க இறங்கினார்கள். பெரிய ஆற்றில் ஒரு இடத்தில் சுற்றிலும் சமதளமான பெரிய பாறை இடையில் பள்ளம். எப்போதும் அதில் தண்ணீர் நிறைந்து இருக்கும். பள்ளத்தின் வடபகுதி தண்ணீர் வந்து சேரும். தென்பகுதி நிறைந்து கசிந்து ஓடும். அதன் உயரக் கிடங்கில் கிழே மணல்கூட பளிச்செனத் தெரியும். தண்ணீருக்குள் நிற்பவர் கழுத்தளவில் நின்றால் பாதி உயரமாகவே நீருக்குள் தெரிவார்கள். தண்ணீர் இளநீர் போன்றும் பளிச்சென்றும் இருக்கும். அவர்கள் குளித்துவிட்டு எழுந்து தலை துவட்டி, கொண்டு வந்த சிற்றுண்டிகளைச் சாப்பிட்டு முடித்து விட்டு வனத்தைப் பார்த்து வர நீலனுடன் மேலே ஏறி நடந்தனர்.

"அந்தக் குன்று உச்சியில நெல்லி மரங்கள் இருக்கு. நீங்க வர்றதா இருந்தா அங்கே கூட்டிட்டுப் போறேன்" – நீலன்.

"முதல்ல அங்கே நடப்பா. அதுக்குத் தானே நாங்க வந்திருக்கோம். வேகமா வாங்க போகலாம்". அவர்கள் அந்த அடர்வன ஒற்றையடிப் பாதையில் நடந்து சென்றனர்.

மேகமூட்டம் இருந்ததால் வெளிச்சமே இல்லை. அந்த அரையிருட்டுப் போல் உள்ள இடத்தில் அவர்கள் மெல்ல நடந்தனர். உச்சிப் பகுதி வந்ததும் பல பெரு நெல்லி மரங்களில் இலைக்கு ஒரு காயாகக் காய்த்து காய்களின் கனத்துக்குக் கிளைகளே தாங்காமல் தொங்கிக் கொண்டிருந்தன.

பச்சை மரத்தில் வெண் பச்சைக் காய்கள் வானத்து நட்சத்திரங்களாய்த்

தெரிந்தன. அவர்கள் ஆளாளுக்குப் பறித்து பைகளில் நிரப்பிக் கொண்டிருந்தனர்.

''அடடா! புளிப்பே இல்லாமல் எவ்வளவு சுவையா இருக்கு நெல்லிக்கா!'' என்றாள் பூங்கோதை.

"சாமி காய்களை இடிச்சி ஆளுக்கு ஒரு டம்ளர் சாறு எடுத்துச் சாப்பிட்டா உடம்புக்கு நல்லதுங்க" சொல்லிவிட்டு நீலன் ஏதோ நினைப்பில் போய் ஒரு பாறை ஓரத்தில் நின்று கொண்டு கீழே பார்த்தான். பிறகு கையை நீட்டி சத்தமில்லாமல் வருமாறு சைகை செய்தான். அவர்கள் பதட்டத்துடன் மெள்ள அவன் அருகில் சென்றார்கள்.

அவன் காட்டிய இடத்தில் பார்த்தனர். அந்த இடத்தில் ஒரு குட்டிச் சிறுத்தை ஓடியாடி பாய்வதும் பின்வாங்குவதுமாக இருந்தது. எதிரே ஒரு முள்ளம் பன்றி சிறுத்தைக்குப் போக்குக் காட்டிக் கொண்டிருந்தது. சிறுத்தை பாயும்போது உடம்பைச் சிலிர்த்து முட்களை முன் பக்கம் காட்டி பயமுறுத்தியது. அருகில் சென்றால் முள்ளம் பன்றியின் முள் சிறுத்தையின் உடம்பில் பாய்ந்து விடும். பின் முள் எடுக்க முடியாமல் ரணமாகி சிரமப்பட வேண்டியிருக்கும். அதனால் முள் இல்லாத வாய்ப்பகுதியைப் பிடித்து விட்டால் வென்று விடலாம் என்று சமயம் பார்த்துப் பாயத் தயாரானது சிறுத்தை.


முட்களை முன் பக்கம் நீட்டி அருகில் வரும்போது சிறுத்தை பின் நடையில் பதுங்கும். சிலிர்ப்பை நிறுத்தியதும் பாய எத்தனிக்கும். இந்த விளையாட்டு ரொம்ப நேரம் நடந்தது. ஒரு நேரத்தில் சிறுத்தை பாய முயலும்போது முள்ளம் பன்றி சிலிர்த்து ஒரு முள் கழுத்தில் பாய்ந்து விட்டது. உடனே சிறுத்தை ஓலமிட்டவாறே ஓடிவிட்டது. முள்ளம் பன்றியும் ஒரு முட்புதரில் புகுந்து கொண்டது.

"சரி, வாங்க இறங்கி விடலாம், இனி அந்தப் பக்கம் போக வேண்டாம்."

நீலன் இறங்கினான். அவர்களும் சிறுத்தையைக் கண்டதால் அச்சமும் ஒரு அரிய காட்சியைப் பார்த்ததில் மகிழ்ச்சியுமான சூழலில் இறங்கி நடக்கலானார்கள்.

குறுக்கெழுத்துப் புதிர் விடை!

1 ம	னி	2 த	ன்	■	3 க	4 ச	ப்	பு
ஞ்	■	ந்	■	5 அ	■	ப்	■	ப்
6 ச	த்	தி	ய	ம்	■	7 பா	க்	கு
ள்	■	■	■	பு	■	த்	■	8 வ
■	9 ஈ	10 ச	ல்	■	ரை	தி	11 கு	■
12 கோ	■	ந்	■	டி	■	■	■	பூ
13 கு	ந்	தி	■	14 கு	ங்	கு	ம	ம்
ல	■	ர	■	15 ம	■	க்	■	ழ
ம்	ப	ன்	16 து	■	டு	17 நா	ய்	18 தா




கடிதம் எங்கே?


என் தங்கை ரொம்பவும் துறுதுறுவென்று இருப்பாள். எந்த வேலை சொன்னாலும் உடனே செய்து முடித்து விடுவாள். ஒருமுறை உறவினர்களுக்கெல்லாம் கடிதம் எழுத இன்லாண்ட் லெட்டர் நான்கு வாங்கி வந்தார் அம்மா. கடிதங்களைக் காட்டி "நீதான் இதைப் போஸ்ட் செய்ய ணும்" என்றார் அம்மா என்னிடம். நானும் சரியென்று தலையாட்டினேன். அன்று மாலை எழுதுவதற்குக் கடிதத்தைத் தேடினார் அம்மா. எங்கும் கிடைக்க வில்லை. என் தங்கை அம்மாவிடம் வந்து "லெட் டர்களையா தேடறீங்க? எனக்கும் போஸ்ட் பண்ணத் தெரியும். எதிரே உள்ள பெட்டியில் போட்டுட்டேன்" என்றாள் பெருமை பொங்க. எழுதாத கடிதங்களைப் போட்டதற்காக அம்மா கோபப்பட்டார்.

– சி. ஐஸ்வர்யா, தூத்துக்குடி.


மீண்டும் வருக!

கும்பகோணம் செல்வதற்காகப் பேருந்தில் ஏறினோம். நிற்கக் கூட இடமில்லை. நிறைய கூட்டம்.





எனக்கும் போஸ்ட் செய்யத் தெரியும்!



பேருந்து ஆடி, ஆடிப் போனது. பேருந்து கும்பகோணத்தை நெருங்கும்போது தான் நான் அதைக் கவனித்தேன். படிக் கட்டுக்கு மேலே மீண்டும் வருக' என்பதில் 'ம்' அழிந்து போய் 'மீண்டு வருக' என்று இருந்தது. நான் அம்மாவி டம் அதைக் காட்டினேன். உடனே என் அம்மா "இந் தப் பேருந்திலிருந்து மீண்டு வர வேண்டியதுதான்'' என்று சொல்லவும் அருகில் உள்ளவர்கள் சட்டென சிரித்து விட்டனர்.

– கோ. சங்கர்
பிரசாத், ஏழாம் வகுப்பு,
திருமகள்
மேல்நிலைப்பள்ளி,
தஞ்சாவூர்.

அ, ஆ...

என் சித்தப்பா அவர் நண்பரைப் பார்க்க என்னையும் அழைத்துச் சென்றிருந்தார். நண்பர் மகனிடம் சிலேட்டையும் பலப்பத்தையும் கொடுத்து "மாமாவுக்கு ஏ, பி, சி, டி எழுதிக்காட்டு" என்றார். அச்சிறுவனும் ஒவ்வொன்றாக எழுதினான். திடீரென என் சித்தப்பா "அ போடு" என்று கூற 'அ' எழுதினான். அடுத்து "ஆ போடு" என்றார் சித்தப்பா. உடனே அவன் பலபத்தை வாயில் போட்டுக் கொள்ளப் போக சித்தப்பா வேகமாகத் தடுத்தார். எனக்கோ அவன் செயலை நினைத்துச் சிரிப்பு வந்தது.

– ப. சௌந்தர்யா, ஐந்தாம் வகுப்பு,
பிரின்ஸ் மெட்ரிகுலேஷன் மேல் நிலைப்பள்ளி,
மடிப்பாக்கம்,
சென்னை.

ஊசி!

என் அக்காவிற்குப் பூச்சிப் பல்லால் ரொம்பத் தொந் தரவு இருந்தது. பல் டாக்டரிடம் அழைத்துச் சென்றோம். பல்லைப் பிடுங்க வேண்டும் என்ற டாக்டர் வலி தெரி யாமல் இருக்க ஊசி போடுவதற்காக ஊசியைக் கையில் எடுத்தார். ஊசியைப் பார்த்த என் அக்கா பயத்தில் அலறி னாள். "டாக்டர் ஊசி போட்டால் வலிக்கும். வலி தெரி யாமல் இருக்க மயக்க ஊசி போடுங்கள்" என்றதும் டாக்டர் சிரித்து விட்டார். பிறகுதான் அவள் சொன்னது அவளுக்கே புரிந்தது. "பயத்தில் இப்படி சொல்லிட்டேன்" என்றாள் அக்கா.

– கே. அனு,
தூத்துக்குடி.

புண்

அன்று விடுமுறை நாள். என் தம்பியை கேரம் விளை யாட அழைத்தேன். "சுண்டு விரலில் புண் இருக்கிறது" என்று கூறினான். அவன் கையைப் பார்த்தேன். நடுவிரலில் தான் புண் இருந்தது. "சுண்டு விரல் நல்லா இருக்கு; நடு விரலில்தானே புண் இருக்குது" என்றேன் நான். கேரம் விளையாடும்போது காயின்ஸ்களைச் சுண்டுவது நடு விரல் தானே! அதான் சுண்டு விரலில் புண் என்றேன்'' என்று கூறிவிட்டு மருந்து போட எழுந்து போனான். நான் அவ னையே பார்த்துக்கொண்டு அமர்ந்திருந்தேன்.

— சி. ராஜசேகரன், ராஜபாளையம்.

கதை: ஜ.ரா. மாடசாமி, திருக்காட்டுப் பள்ளி.
படம்: சுகன்


கொட்டாவியால்



கிடைத்த லட்டு!


நரியோ–
வயலில் நிறைய நண்டு இருக்கு. வளைக்குள் வாலை விட்டு நண்டைப் பிடித்துச் சாப்பிடலாம்.
தினமும் நண்டுபிடிக்கும் வேலையை மட்டும் செய்த நரி மாலையில்–
நரியண்ணா ஏன் சகதியைப் பூசிக்கறே? என்னைப் போல் குளிச்சிட்டு வா.
இப்படி போனால் தான் வேலை செய்ததாக நம்புவார் பண்ணையார்.
மறுநாள் தோட்டத்திற்கு வந்த பண்ணையார் மானையும் நரியையும் மறைந்திருந்து கவனித்தார்.
நான் நினைச்சது சரிதான். மான் உண்மையாக உழைக்க, நரி இப்படி ஏமாற்றுகிறதே!
பண்ணையார் சற்று நேரத்தில் லட்டு, இரும்புக் குண்டுடன் மரத்தில் ஏறி அமர்ந்தார்.
மான்தம்பி வந்து ஓய்வெடு.
வெயில் அதிகம். இதோ வரேன்.
மானும் நரியும் பண்ணையார் உட்கார்ந்திருந்த மரத்தடியில் படுத்தன. சிறிது நேரத்தில்–
என்ன தம்பி எனக்குத் தெரியாமல் சாப்பிடறே?
கொட்டாவி விட்டேன். லட்டு வாயில் விழுந்தது.
நானும் கொட்டாவி விடறேன். ஆ–
ஐயோ, பல் எல்லாம் போச்சே! இனி இந்த வேலை வேண்டாம். வரேன்!





இயற்கை விரும்பிகளுக்கு ஏற்ற ஊர்!

பெருஞ்சிறப்புடைய நெல்லை மாநகரின் அம்பா சமுத்திரம் வட்டத்தில் அமைந்துள்ளது எங்கள் ஊர் விக்கிரமசிங்கபுரம்.

பொதிகை மலையின் அடிவாரத்தில் தாமிர பரணி நதி பாயும் பூமியில் எழில்மிகு சூழலுடன் எங்கள் ஊர் அமைந்திருக்கிறது. எங்கள் ஊராகிய விக்கிரமசிங்கபுரம் ஒரு பேரூர் ஆகும். இது 'சிங்கை' என்று சுருக்கமாக அழைக்கப்படுகிறது.

விக்கிரமசிங்கபுரம் ஓர் ஊராக இருந்தாலும் நகரத்திற்குரிய சிறப்புகளைப் பெற்ற, வரலாற்றுப் பெருமை வாய்ந்த, சுகாதாரமான பகுதியாக விளங்குகின்றது. எங்கள் ஊரின் பெருமைகள் அளப்பரியன. அகத்திய முனிவர் வாழ்ந்து தமிழ் வளர்த்த பொதிகை மலையின் அடிவாரத்தில் எம்மூர் அமைந்துள்ளது. இம் மலையில்தான் தமிழே பிறந்தது என இலக்கியம் போற்றுகின்றது.

"திங்கள்முடி சூடுமலை;
தென்றல் விளையாடு மலை
தங்குபுயல் சூழுமலை;
தமிழ்முனிவன் வாழுமலை
பொங்கருவி தூங்குமலை;
பொதிய மலை என் மலையே" என்று குறவஞ்சி நூல் இம் மலையின் புகழை எடுத்தியம்புகிறது. பொதிகை மலையினின்று புறப்பட்டு வரும் தென்றல் எங்கள் ஊருக்கே சொந்தமானது. இம் மலையில் இருந்துதான் 'பொருநை' என்று போற்றப்படும் வற்றாத 'தாமிரபரணி' நதி உதித்து ஓடி நெல்லைச் சீமை முழுவதும் வளம் செய்கிறது.

'வற்றாத தாமிரபரணி போல் செழிப்புடன் வாழ்க' என்று வாழ்த்துவர் பெரியோர். அத்தகைய சிறப்புடைய தாமிர பரணியின் தண்ணீர் பருகுவதற்கு மிகவும் இனியது. இந்த நீரின் சுவை போல் வேறு

எங்கள் ஊருக்கு வாருங்கள்!

எங்கும் காண முடியாது. 'பரணி பாயும் தரணி' எனும் புகழுக்குரியது எங்கள் சிங்கையூர். இங்கே நீரில் மின்சாரம் தயாரிக்கப்பட்டு பல பகுதிகளுக்கும் பயன் படுகிறது.

எங்களூர் ஒரு சிறந்த சுற்றுலாத்தலம் ஆகும். இங்கே மலையின் அருகில் முண்டந்துறை சரணாலயம் உள்ளது. மலையிலுள்ள 'சொரிமுத்தையனார்' கோயில் ஆடி அமாவாசைத் திருவிழா திருநெல்வேலி முழுவதும் பிரபலமானது. ஆண்டு முழுவதும் வற்றாது விழுகின்ற அகத்தியர் அருவி இங்கு இருக்கிறது. பாசன வசதி தரும் காரையார் அணை, கீழணை ஆகிய இரண்டு அணைகள் உள்ளன. பரணி நதியின் கரையில் உலகம்மை சமேத பாபநாசப் பெருமான் ஆலயம் உள்ளது. இங்கே பஸ் டிப்போவும் அமைந்துள்ளது.



சிங்கையூரில் 'சித்திரை விசுத் திருவிழா' சிறப்புமிக்கது. இவ்விழா பத்து நாட்கள் விமரிசையாக நடை பெறுகின்றது.

பல சமயமும் பாங்குறத் திகழும் ஊர் எம் விக்கிரம சிங்கபுரம். இந்துமதக் கோயில்கள் போன்று பள்ளி வாசல்களும் தேவாலயங்களும் இங்குள்ளன. 'கெபி' எனப்படும் 'அமலோற்பவ மாதா' கோயில் ஊரின் மேற்கே உள்ளது. இங்கும் சித்திரை விழா போலவே பத்து நாட்கள் திருவிழா சிறப்பாக நடைபெறுகிறது. இஸ்லாமியர் கொண்டாடும் 'கந்தூரி' விழாவும் எங்கள் மலைப் பகுதியில் சிறப்பாக இருக்கும். திருச்செந்தூரில் நடைபெறுவது போல எம் ஊரிலும் கந்தசஷ்டி - சூரசம்ஹார விழா நடை பெற்று வருகின்றது.

நகரில் உள்ள வசதிகள் அனைத்தும் எங்கள் ஊரிலேயே கிடைக்கின்றன. சிறப்புமிக்க மதுரை கோட்ஸ் பஞ்சாலை எங்கள் ஊரில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களைக் கொண்டு இயங்கி வருகிறது. விவசாயம் சிறப்புற்றுத் திகழ்கிறது. தினசரி சந்தையும் வார சந்தையும் உள்ளன. பொது நூலகம் ஒன்றும் உள்ளது.

எங்கள் ஊரில் இயற்கைக் காட்சிகளை ரசிக்கலாம். கொட்டும் நீர்வீழ்ச்சியிலும், குதித்தோடும் நதியிலும் குளிக்கலாம். கோயில்களைத் தரிசிக்கலாம். குதித்தாடும் குரங்குகளைப் பார்க்கலாம். சுத்தமான காற்றை சுவாசிக்கலாம். சுகமான தென்றலை அனுபவிக்கலாம். சுவையான நீரைப் பருகலாம். இத்துணைச் சிறப்புகளை உடையது எங்கள் ஊர். கண்டிப்பாக வந்து கண்டு களிப்பீர்!

'இன்சுவை நீர்ப் பொருநை ஆறெங்கள் ஆறே!
ஈடில்லா சீர்ச் சிங்கை ஊரெங்கள் ஊரே!'


– உ. தங்கவேல் சரவணன்,
புனித மரியன்னை மேல்நிலைப் பள்ளி,
விக்கிரமசிங்கபுரம்.



• அகத்தியர் அருவி

கோவில்பட்டியிலிருந்து (தூத்துக்குடி மாவட்டம்) சுமார் 12கி.மீ. தூரத்தில் உள்ளது குருமலை கிராமம். குருமலை கிராமத்திலிருந்து 1½கி.மீ. தூரத்தில் உள்ளது மலை. அனுமன் சஞ்சீவி மலையைத் தூக்கிக் கொண்டு செல்லும் போது அதிலிருந்து விழுந்த ஒரு சிறு துண்டே குருமலை என்று கூறுகிறார்கள். மலையின் அடிவாரத்தில் வீற்றிருக்கிற பொய்யாளி அய்யனார் கோவில் பிரசித்திபெற்றது. நீங்காத நோய்களை நீக்கும் தன்மை பெற்றது. கோவிலுக்குச் சொந்தமான குளத்தில்

• பாபநாச நாதர் கோயில்



ஊற்றிலிருந்து வரும் நீர் நிரம்புகிறது.

ஊற்றானது கோவிலுக்கு வடகிழக்கில் உள்ளது. கோடை காலத்தில் கூட வற்றாமல் நீர் வந்து கொண்டே இருக்கிறது. நீர் தேன் போன்று இனிமையுடையதாய் உள்ளது. அத்தீர்த்த நீர் பெருகும் குளத்தில் குளித்தால் நோய் அகலும் என்பது ஐதீகம். தாமரை மொட்டுகளுக்கிடையே குளத்தில் குளிப்பது அற்புதமானது. அத்தீர்த்தத்திலிருந்து குளிக்க மற்றும் குடிக்க நீர் கொண்டு செல்வார்கள்.

மலையடிவாரத்தில் கோவிலுக்கு முன்னும், பின்னும் நீண்டு அமைந்திருக்கிறது வனம். மூலிகைச் செடிகளும் புளிய மரங்களும் மாமரங்களும் சிவனுக்கு உரித்தான வில்வ மரங்களும் உள்ளன. அய்யனார் கோவிலுக்கு முன் சிறிது தள்ளி சிவன் கோவிலும், மலைக்குப் பின்னால் முருகன் கோவிலும் பிரசித்தி பெற்ற சிறிய கோவில்கள்.


வனத்திற்குள் கார்முகில் கூட்டத்தைக் கண்டு ஆடும் மயில்களும் குருவிகளும் குயில்களும் பல பறவைகளும் உள்ளன. இயற்கை பிரியர்கள் பறவைகளின் ஓசையைக் கேட்டுக் கொண்டே காட்டுக்குள் நடக்கலாம். சுமார் 20 ஆண்டுகளுக்கு முன் மலையைச் சுற்றி அடர்ந்து இருள் சூழ்ந்து இருந்த வனம், முக்கால் வாசி மரங்கள் வெட்டப்பட்ட போதும் இயற்கை மாறாமல் அப்படியே உள்ளது.

மலைமீது செல்ல ஒற்றையடிப் பாதை உள்ளது. மலைமீது பாம்பு புற்றுகள், சிறுசிறு குகைகள் ஏராளமாக உள்ளன. குரங்குக் கூட்டத்திற்கும் குறைவில்லை. பாறையாய் நிற்கும் மலை உச்சியிலிருந்து சுற்றியுள்ள சுமார் 8 கிராமங்களைப் பார்க்கலாம். மேலே இருந்து நோக்கும் போது ஒரு இனம் புரியாத பயம் ஏற்படும். மற்றபடி இயற்கை ரசிகர்களுக்குப் பிடித்தமான இடம் அது.

தைப் பொங்கலுக்கு அடுத்தநாள் பொங்கல் விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. குருமலையைச் சுற்றியுள்ள பகுதியிலிருந்து ஆயிரக்கணக்கானோர் கூடுகின்றனர். கச்சேரிகளும், ஆடல் பாடல் நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

கோவில்பட்டியிலிருந்து எந்நேரமும் பஸ் வசதி உண்டு. எனவே கோவில்களை வழிபடவும் தீர்த்தத்தில் நீராடவும் இயற்கையை ரசிக்கவும் ஒருமுறை எங்கள் ஊருக்கு வந்து செல்லுங்கள்!

– து. கார்த்திகேயன்
பசுவந்தனை ரோடு,
கோவில்பட்டி.



''பையன் படுவேகமா... எப்படி?''

''தேவாரம் படிக்கக் கொடுத்தேன். அதே'வாரம்' மனப்பாடம் பண்ணிட்டான்!''

– தஞ்சை தாமு



குபேரன் கொடுத்த விருந்து!

அசுரர்களைப் போரில் வென்ற இந்திரன், மீண்டும் அரியணை ஏறித் தமது மந்திரிப் பிரதானிகளை நியமித்தான். 'கருவூலத் தலைவனாகக் குபேரன் நியமிக்கப்பட்டான்.

அப் பதவியில் அமர்ந்ததும், குபேரனிடம் கர்வம் தலைக்கு ஏறி விட்டது. தேவலோகச் செல்வம் அனைத்துக்கும் தானே அதிபதி என்று அவன் இறுமாந்தான். அத்தனை செல்வமும் அரசுக்குச் சொந்தமானது என்பதை அவன் மறந்தே போனான். அதைத் தனது சுயநலத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளலானான்.

அவன் தனது அரண்மனையைத் தங்கத்தால் இழைத்தான். தலைநகர் லங்கா நகரம், தங்க லங்கா நகரம் என்று ஆயிற்று!

எல்லாத் தேவர்களும் தன்னைப் புகழ வேண்டும்; பாராட்ட வேண்டும் என்று அவன் நினைத்தான். தனது கௌரவத்தை உயர்த்திக் கொள்ளத் தேவர்கள் அனைவருக்கும் ஒரு பெரிய விருந்து கொடுக்க முடிவு செய்தான்.

ஆகவே, பகவான் சிவபெருமானிடம் போய் வணங்கிச் சொன்னான் : "பிரபோ....! எல்லாத் தேவர்கள், யக்ஷர்கள், கந்தர்வர்கள் யாவருக்கும் நான் ஒரு மாபெரும் விருந்து கொடுக்க நிச்சயித்துள்ளேன். நம் தேவலோகத்தில், இதற்கு முன், எவரும் கொடுத்திருக்க முடியாத அளவுக்கு மிக உயர்ந்த பல சுவையமுதுகளைக் கொண்ட மாபெரும் விருந்தாக, அது அமைய வேண்டும். அதற்குத் தாங்கள் நல்லாசி வழங்க வேண்டும். மேலும், அதில் தாங்களும் குடும்பத்தினரோடு கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும்..." என்று கேட்டுக் கொண்டான்.

அதைக் கேட்ட சிவபெருமானிடம் உடனே பதில் இல்லை. சற்று நேரம் யோசித்தார். பிறகு, "குபேரனே...! எனக்கு வேறு பல முக்கிய வேலைகள் உள்ளன. என்னால் கலந்து கொள்ள இயலாது. நான் வராமல் பார்வதியாலும் வர முடியாது. சரி... எங்களுக்குப் பதில் எங்கள் மகன் கணேசனைக் கண்டிப்பாக அனுப்புகிறேன்..." என்று வாக்குக் கொடுத்துக் குபேரனை அனுப்பினார். அவனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி!

விருந்தளிக்கப்படும் நாள் வந்தது. சிவபெருமான் கணேசனை அழைத்தார் : "மகனே! குபேரன் வீட்டில் இன்று மாபெரும் விருந்து. தேவலோகத்தில் இது வரையில் எவரும் கொடுத்திராத அளவு

ஜானகி மணாளன்

சிறப்பான விருந்தாக அது அமைய வேண்டும் என்று அவன் பேராசைப்படுகிறான். அது மட்டுமல்ல. தன் சொத்து எது, பிறர் சொத்து எது என்பதெல்லாம் அவனுக்குப் புரியவில்லை. எனவே, நம் குடும்பத்தினர் சார்பில், நீ சென்று கலந்து கொண்டு, சாப்பிட்டு விட்டு வா... கூடவே இன்னொன்றையும் நினைவில் வைத்துக் கொள். அங்கு, குபேரனுக்குப் பாடம் புகட்டும் விதத்தில் நீ நடந்து கொள்ள வேண்டும். மறந்து விடாதே...!" என்று எச்சரித்து அனுப்பி வைத்தார்.

பிள்ளையார் விருந்து மண்டபத்தை அடைந்தார். குபேரன் அவரை வரவேற்று உபசரித்தான். பிறகு பணிவுடன், "தயவு செய்து, சற்று நேரம் காத்திருக்க வேண்டும். அழைக்கப்பட்டுள்ள மற்ற அனைவரும் வந்து விடட்டும். எல்லாருமாகச் சேர்ந்து சாப்பிடலாம்..." என வேண்டினான்.

அதைக் கேட்டதும் பிள்ளையாருக்குக் கடும் கோபம் வந்து விட்டது. "எனக்கு இப்போதே நல்ல பசி. இன்னும் எப்படி காத்திருக்க முடியும்...? உடனே நான் சாப்பிட்டாக வேண்டும். சாப்பாடு போடச் சொல்..." என்று பிடிவாதம் பிடித்தார். உள்ளே சென்று இலையில் அமர்ந்து கொண்டு உரத்த குரலில், "குபேரா...! உணவு எங்கே...? பரிமாறுபவர்கள் எங்கே...? சாதம் போடச் சொல்..." என்றார்.

பிள்ளையாருடைய கோபம் நல்லதல்ல. அதை உணர்ந்த குபேரன், வேறு வழியின்றிப் பரிசாரகர்களுக்கு உத்தரவிட்டான். "கணேசனுக்கு உணவு வழங்கி விடுங்கள்..."

உணவு வழங்கப்படலாயிற்று. பிள்ளையார் சாப்பிடத் தொடங்கினார். உணவுப் பண்டங்கள் போடப் போட இலை காலியாகிக் கொண்டேயிருந்தது. புதிய உணவுகள் இலையில் வந்து விழச் சற்றுக் காலதாமதம் ஆகும்போதெல்லாம், பிள்ளையார் உரத்த குரலில், குபேரனிடம், "பரிமாறுபவர்களிடம் சொல்லி வைக்கக் கூடாதா? காலியாகக் காலியாக இலையில் உணவு வந்து நிறைந்து கொண்டேயிருக்க வேண்டும்" என்றார்.

பணியாளர்கள் போட்டுக் கொண்டே இருந்தனர். பிள்ளையார் சாப்பிட்டுக் கொண்டேயிருந்தார். கடைசியில், சமைத்து வைத்திருந்த அத்தனை உணவு வகைகளும் காலி.

குபேரன் பதறிப் போனான். 'இனி என்ன செய்வது...? கணேசன் என்ன இப்படிச் சாப்பிடுகிறார்...? எல்லா விருந்தினர்களும் இன்னும் சாப்பிட வேண்டியுள்ளதே...? அவர்களுக்கெல்லாம் எதைப் பரிமாறுவது...? எப்படி பரிமாறுவது? எப்படி நிலைமையைச் சமாளிப்பேன்...?' குபேரன் குழம்பிப் போனார்.

பிள்ளையாரைக் கையெடுத்துக் கும்பிட்ட குபேரன், "இன்று நீங்கள் என்ன இத்தனை சாப்பிடுகிறீர்கள்...? சமைக்கப்பட்ட உணவு அத்தனையையும், நீங்கள் ஒருவரே சாப்பிட்டு விட்டீர்களே?" என்றார்.

அதைக் கேட்டதும், பிள்ளையார் கடுங்கோபத்துடன் எழுந்து நின்று, "என் வயிற்றைப் பார்த்தாயா? அது இன்னும் நிரம்பவே இல்லையே...! இந்த அழகில் எல்லாரையும் வேறு அழைத்துள்ளாயே... அரை வயிறு மட்டுமே நிரம்பிய நான், பசியோடு எப்படி திரும்புவேன்...? நானே போய், உன் சமையலறையில் என்ன மிச்சமிருக்கிறது என்று பார்க்கிறேன்..." என்றவாறு அங்கு சென்றார்.

அங்கு மிச்சமின்றி அத்தனையும் தன்னால் சாப்பிடப்பட்டு விட்டதை அறிந்து கொண்டு குபேரனிடம் சென்றார். "தேவலோகத்தின் நிதியமைச்சராக இருந்த போதிலும், உன்னால் என் ஒருவனுக்கு வயிறார உணவு வழங்க முடியவில்லையே...? உனக்கு இப்போது சரியான பாடம் புகட்டுகிறேன் பார்..." என்றவாறு பிள்ளையார் குபேரன் மீது பாய்ந்தார்.

குபேரன் தனது உயிரைக் காத்துக் கொள்ள ஓடினான். பிள்ளையார் துரத்தி



"மன்னர் போருக்குப் போகும்போது தன்னுடன் எதுக்கு ஒரு 'டூப்'பையும் கூட்டிப் போறார்?"
"தான் புறமுதுகிட்டு ஓடி வரும் போது தனக்குப் பதிலாக சண்டை போடத்தான்!"

– கெட்டிச் செவியூர் கே.பி. சாமி

னார். அவன் ஓட... இவர் துரத்த... உயிரைக் காத்துக் கொள்வது குபேரனுக்குப் பெரும்பாடாகி விட்டது.

குபேரன், கயிலாயத்துக்கு விரைந்தான். அங்கு போய்ச் சிவபெருமானின் கால்களைப் பற்றிக் கொண்டு, "பிரபுவே! நீங்கள்தான் என்னைக் கணேசனின் கோபத்திலிருந்து காப்பாற்ற வேண்டும்..." என்று கெஞ்சினான்.



'என்ன குபேரா...? என்ன நடந்தது...?' என்று அவர் கேட்பதற்குள் பிள்ளையார் அங்கு வந்து விட்டார்.

"தந்தையே...! என்ன இப்படி செய்து விட்டீர்கள்...? ஒரு தரித்திரனின் வீட்டுக்கு என்னை விருந்துண்ண அனுப்பி விட்டீர்களே..? என் ஒருவனின் அரை வயிற்றுக்குக் கூடக் குபேரனால் உணவளிக்க முடியவில்லையே?" என்றார்.

சிவனுக்கு எல்லாம் புரிந்து விட்டது. அவருடைய திருவிளையாடல்தானே அது!

"உள்ளே போ கணேசா..." என்றார் சிவன்.

பிள்ளையார் உள்ளே போகக் குபேரனின் உயிர் தப்பிப் பிழைத்தது.


குபேரன் நடுங்கிப் போய் நின்றிருந்தான். அவனிடம் சிவன், "குபேரா...! தேவலோகத்தின் பெரும் செல்வத்துக்கு, நீ வெறும் பாதுகாவலன் மட்டும்தானே தவிர சொந்தக்காரன் இல்லை. இதை நீ நினைவில் வைத்துக் கொள். பதவி மோக வெறியில், மற்றவருடைய சொத்தைக் கண்டபடி வீணடிக்க முயன்றால், இப்படித்தான் அவமானப்பட்டுத் தலையைக் குனிந்து கொண்டு நிற்க வேண்டிவரும்..." என்றார்.

பிள்ளையார் புகட்டிய இப் பாடம், குபேரனுக்கு மட்டுமல்ல... நமக்கும்தான்.

கடுகு, மிளகு கலக்காத ரசம் – அது என்ன ரசம்?

I

1. நிலாவை மூடும் திறக்கும் – அது என்ன?
2. புற்றை வெட்டினால் கருநாகம் தலை தூக்கும். – அது என்ன?
3. இரட்டைப் பிறவிகள்தான் ஒருத்தி உயர்ந்தால் ஒருத்தித் தாழ்வாள். – அது என்ன?
4. கடுகு, மிளகு கலக்காத ரசம், கடித்தால் உரைக்காத ரசம் அது என்ன?



5. அடிக்கடி தவிக்க விடுவான்; அள்ளித் தர ஓடி விடுவான் – அவன் யார்?
6. முள்ளுக்குள்ளே... முந்திரித் தோப்புக்குள்ளே... வைக்கோல் போருக்குள்ளே... கட்டி வைரம்! – அது என்ன?

– அண்ணா அன்பழகன், அந்தணப்பேட்டை.

விடை: 1. கண் இமை, 2. பென்சில், 3. தராசு, 4. அதிரசம், 5. பசி, 6. பலாக்கொட்டை.

II

1. உப்பைத் தின்றவன் உறங்காமல் அலைகிறான் – அவன் யார்?
2. உலகுக்கெல்லாம் ஒரே போர்வை – அது என்ன?
3. பச்சைப் பசேலென்று இருக்கும். பாகற்காயும் அல்ல. பக்கமெல்லாம் முள்ளிருக்கும். பலாக்காயும் அல்ல. உள்ளே வெள்ளை வெளேறென்று இருக்கும் தேங்காயும் அல்ல – அது என்ன?
4. ஓயாமல் வேலை செய்வான். உறங்கினால் எழுப்ப ஆளில்லை – அவன் யார்?
5. தாடி மீசைக்காரன். கோயிலுக்குப் போனால் வெள்ளைக்காரன்– அவன் யார்?
6. உச்சியிலே தொங்கும் இவனை அடித்தால் கலகலவென்று சிரிப்பான்– அவன் யார்?
7. வெள்ளை மாளிகை உள்ளே செல்ல வழியுமில்லை; வாசலும் இல்லை– அது என்ன?
8. வாய் இருக்கும் பேசாது. காது இருக்கும் கேட்காது. வயிறு இருக்கும். உண்ணாது– அது என்ன?

– க. பிரியா, பதினோராம் வகுப்பு, அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளி, ஆண்டிபட்டி.


விடை: 1. கடல் அலைகள், 2. வானம், 3. ஆமணக்கு, 4. இதயம், 5. தேங்காய், 6. மணி, 7. முட்டை, 8. பை

III

1. அடித்தாலும் பிரிய மாட்டான், அணைத்தாலும் ஒட்ட மாட்டான். அவன் யார்?
2. பூவாய் பூத்திருப்பான்; கொண்டையிலே ஏற மாட்டான் – அது என்ன?
3. வீடு கட்டத் தெரியாதவன் பாட்டு அழகாய்ப் பாடுவான் – அவன் யார்?
4. உருவத்தைப் பார்க்க முடியாது, அவனில்லாமல் வாழ முடியாது– அது என்ன?

– டி. பாலகிருஷ்ணன், செம்பனார்கோவில்.

விடை: 1. தண்ணீர், 2. வாழைப்பூ, 3. குயில், 4. காற்று



சார் தபால்!

மகிழ்ச்சிக்கு அளவேயில்லை!

✉ நக்கீரன் கோபால் அவர்களின் குழந்தைப் பருவ அனுபவங்களைப் படித்தேன். ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்து கடும் முயற்சியினாலும் உழைப்பினாலும் சாதனைகள் செய்ய முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைந்திருந்தது. அவரின் குறும்புகள் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தன.

– பி. கண்ணதாசன், ஆறாம் வகுப்பு, குத்தாலம், நாகை மாவட்டம்.

✉ மூளையைப் பற்றிய தகவல்களின் தொகுப்பு கல்லூரியில் படிப்பவர்களுக்கும் கூட பயன்தரவல்லது. என் மூளையிலும் இதைப் பதிவு செய்து கொண்டேன். ரயில் ஓவியங்கள், கறா, கிருஷ்ணர் வேடப் புகைப் படங்கள் கோகுலத்திற்கு அழகு சேர்த்தன. திருஷ்டி சுற்றிப் போடுங்கள்.

– கவிமணி செந்தில், சூசுவாடி, ஒசூர்.

✉ நான் கோகுலம் வாசகி. 100 பேருக்கு ஜாமெட்ரி பாக்ஸ் போட்டியில் பங்கேற்றேன். பரிசு கிடைத்தது. கோகுலம் நடத்திய கிருஷ்ணர் வேடப் போட்டிக்கு என் புகைப்படத்தை அனுப்பி வைத்தேன். புகைப்படம் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளி வந்தது. என் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை!

– ஆர். திவ்யா, வழுவூர் அஞ்சல், நாகை மாவட்டம்.

✉ 'கர்வம்' என்ற படக்கதையில் மானின் கர்வத்தை மற்ற பிராணிகள் அடக்கிய விதம் அருமை. 'கூடு விட்டுக் கூடு பாய்ந்தவன்' கதை ஆரம்பம் முதல் இறுதி வரை விறுவிறுப்பாகச் சென்றது.

– ஆர்.கே. தேவநாராயணன், பத்தாம் வகுப்பு, நாடார் மேல்நிலைப் பள்ளி, வத்திராயிருப்பு, விருதுநகர் மாவட்டம்.

✉ பள்ளி மாணவர்களுக்கிடையே ஆரோக்கியமான, அறிவு பூர்வமான போட்டியை வளர்த்து, அவர்களின் திறமையை உலகிற்கு வெளிகாட்டி, பரிசும் தந்து பெருமைப்படுத்தும் கோகுலத்தை எத்தனைமுறை வேண்டுமென்றாலும் பாராட்டலாம்.

– பாரதி செல்வம், சென்னை.

✉ 'காலுவின் கால்' படக் கதை வழக்கமான கதை போல் ஆரம்பித்து வித்தியாசமாக முடிந்தது. மூளை பற்றிய தகவல்கள் சுவையாக இருந்தன. எங்கள் ஆசிரியரிடம் கோகுலத்தைக் கொடுத்துள்ளேன் படிப்பதற்கு.

– ஆர்.என். மேகலா, எட்டாம் வகுப்பு, அரசு உயர்நிலைப்பள்ளி, மேட்டுப்பாளையம்.

கோகுலம் சுழல்கோப்பை

கோகுலம் இதழ்களில் ஒரு வருடத்தில் எந்தப் பள்ளி மாணவர்களின் படைப்புகள் அதிகம் இடம் பெறுகின்றனவோ அப் பள்ளிக்குச் சுழல் கோப்பை வழங்கப்பட்டு வருகிறது.

. இந்த ஆண்டு செந்துறை, ஆண்டிபட்டி, லால்பேட்டை, சென்னை, பென்னாகரம், பெரியதச்சூர், கூறைநாடு ஆகிய பள்ளிகளில் எந்தப் பள்ளி கோப்பையை வெல்லப் போகிறது? இன்னும் ஒரே மாதம்தான். பாராட்டக் காத்திருங்கள்!

அது வாரத்தின் முதல் நாளான திங்கட்கிழமை. முதல் பாட வேளையே தமிழ்தான். தமிழாசிரியர் பூவலிங்கம் அப்போதுதான் பள்ளிக்கு வந்து கொண்டிருந்தார். மூர்த்தி வகுப்பு துவங்கும் முன்னாலேயே வந்து உட்கார்ந்திருந்தான். அவன் மட்டுமல்ல. அவனது நெருங்கிய நண்பர்களான ரமேஷ், மனோகரனும் கூட.



மற்ற தினங்களிலெல்லாம் முதல் பாட வேளை வேறு பாடங்களில்தான் தொடங்கும். அந்த நாட்களிலெல்லாம் இந்த மூவரும் சரியாக வகுப்பு ஆரம்பிக்கும் நேரத்திற்குத்தான், ஏன் சில சமயங்களில் தாமதமாகக் கூட வருவார்கள்.

இவர்களைப் பார்த்தாலே ஆசிரியர்களுக்குச் சலிப்பு உண்டானது. திட்டு அடி எல்லாம் சகஜமாகிப் போன ஒன்று.

அதற்கெல்லாம் காரணம் என்னவென்றால், இந்த மூவருக்கும் ஒன்றுபோல தமிழைத் தவிர மற்ற பாடங்கள் மண்டையில் ஏறுவதே இல்லை. மற்ற ஆசிரியர்களும் எத்தனையோ முயற்சி எடுத்தும் பயனில்லை. ஆனால், அது குறித்து அவர்கள் ஒரு நாளும் வருத்தப்பட்டதே கிடையாது.

பள்ளிக்கூடம் முடிந்து மாலையில் மூர்த்தி வீட்டில் தமிழ்ப் பாடம் படித்துக் கொண்டிருந்தான்.

“ஏண்டா, எந்நேரம் பார்த்தாலும் தமிழ்தானா. மற்ற பாடங்களைப் படிச்சா என்ன?” என்று கேட்டுக் கொண்டே வந்தார் அவன் அம்மா மரகதம்.

“ஏதோ படிக்கிறேன்ல. ஏன் சும்மா இருக்க மாட்டீங்களா?” என்று பதிலுக்குக் கத்தினான் மூர்த்தி.

தமிழைத் தவிர வேறு எந்தப் பாடத்தைப் பற்றிப் பேசினாலும் அவனுக்குக் கோபம் வந்து விடும்.

“டேய் மூர்த்தி எல்லாப் பாடத்தையும் படிச்சாத்தானேடா உன்னால நல்ல மார்க் வாங்க முடியும்” என்றார் மீண்டும் அம்மா.

“அம்மா: உங்களுக்கு இதெல்லாம் புரியாது. வந்தாத்தானே படிக்க முடியும். ரப்பர்தானேனு எத்தனை தூரம் வேணும்னாலும் இழுக்க முடியுமா? அதன் அளவுக்கு மேல இழுத்துட்டா அறுந்து போயிடும். வராததைப் போட்டு இழுக்காம பேசாமப் போங்க” என்று சொல்லி



விட்டுப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு அவனே இடத்தைக் காலி செய்து விட்டான்.

மறுநாள்... தண்ணீர் எடுத்து வந்து கொண்டிருந்தார் மரகதம். எதிரே தமிழாசிரியர் பூவலிங்கம் வருவதைக் கண்டு நின்றார். மூர்த்தியைப் பற்றி அவரிடம் விரிவாகச் சொன்னார்.

“ஆமாம்மா... நானும் தெரிஞ்சுக்கிட்டேன். அவன் மட்டுமல்ல. அவனோட இன்னும் ரெண்டு பேரும் சேர்ந்து அப்படித்தான் இருக்காங்க. சந்தர்ப்பம்

வரும்போது -நானே அவங்களைச் சொல்லித் திருத்துறேன். நீங்கள் கவலைப் படாமல் போயிட்டு வாங்கம்மா'' என்று ஆறுதலாய்ப் பேசி அனுப்பி வைத்தார் பூவலிங்கம்.

அறுசுவை!

அருப்புக்கோட்டை செல்வம்



ஒவ்வொரு ஆண்டும் மாரியம்மன் கோவிலில் திருவிழா நடைபெறும். அன்று திருவிழாவின் கடைசி நாள்.

எல்லோர் வீட்டிலும் வித விதமாக சமைப்பர். தன் நண்பர்கள் ரமேஷ், மனோகரன் இருவரையும் அழைத்திருந்தான் மூர்த்தி.

அவர்கள் யாருமே எதிர்பார்க்கவில்லை. தமிழாசிரியர் பூவலிங்கம் உள்ளே நுழைந்தார்.


"ஐயா... வணக்கம்... வாங்க. உட்காருங்கள்'' என்று வரவேற்றான் மூர்த்தி.

"வணக்கம்ப்பா... வணக்கம்.. இந்தப் பக்கம் ஒரு வேலையாக வந்தேன். என்னப்பா ரமேஷ், மனோகரன் உங்களுக்கு நான் வந்ததுல ஒண்ணும் சங்கடம் இல்லையே..?'' என்று கேட்டார்.

"என்னங்க சார். இப்படி கேட்கறீங்க. நீங்க வந்ததுல எங்க எல்லாருக்கும் ரொம்ப மகிழ்ச்சி சார்'' என்று மூவருமே கோரஸாகச் சொன்னார்கள்.

அப்போது வீட்டின் உள்ளே இருந்து மூர்த்தியின் அம்மா மரகதம் எட்டிப் பார்த்தார்.

"ஐயா! வாங்கய்யா. நல்ல நேரத்துல வந்திருக்கீங்க. இருங்க, சாப்பிட்டுத்தான் போகணும்.'' என்றார்.



''மூர்த்தி, இன்னைக்கு உங்க வீட்டுல என்ன சாப்பாடு?'' என்று கேட்டார் பூவலிங்கம்.

"எங்க அம்மா இன்னைக்குப் பல விதமான சாதங்கள் செய்றாங்க சார்'' என்றான் பெருமையாக மூர்த்தி.

''அப்படியா.. என்னென்ன சொல்லு பார்ப்போம்?''

"ம்... வெண் பொங்கல், சர்க்கரைப் பொங்கல், புளியோதரை, தயிர் சாதம், பருப்பு சாதம், தக்காளி சாதம் எல்லாமே செய்திருக்காங்க'' மகிழ்ச்சியாகச் சொன்னான் மூர்த்தி.

"நான் சாப்பிடறேன்.

ஆனா, ஒரு நிபந்தனை" என்று நிறுத்தினார் பூவலிங்கம்.

"என்னங்க சார்..?" என்று மூவரும் ஒன்று போலக் கேட்டார்கள்.

"ஒண்ணுமில்ல. இன்னைக்கு நான் என்ன சொல்றேனோ, அதன்படிதான் நீங்கள் சாப்பிடணும்" என்றார்.

அவர்களும் வேறு வழியில்லாமல் ஒத்துக் கொண்டனர்.

மரகதம் முதலில் சர்க்கரைப் பொங்கலை அனைவருக்கும் பரிமாறினார். அடுத்து தக்காளி சாதம் எடுத்து வந்தபோது "கொஞ்சம் இருங்கம்மா. மூர்த்தி, ரமேஷ், மனோகரன் மூவருக்கும் சர்க்கரைப் பொங்கல் மட்டும் பரிமாறுங்கள்" என்றார்.

மரகதமும் அதன்படியே செய்தார். மூன்றாவது தடவை, நான்காவது தடவையென்று சர்க்கரைப் பொங்கல் தொடர்ந்தது. அவர்களால் சாப்பிட முடியவில்லை. இனிப்புத் திகட்டியது. திணறினார்கள்.

"என்ன பசங்களா. சாப்பிடுங்க. என்னைப் பாருங்கள் எவ்வளவு சாப்பிடுறேன்" என்றார் தமிழாசிரியர்.

அவாகள் எழுந்து விட்டனர். ஆசிரியரும் சாப்பிட்டு முடித்து வந்தார்.

"ஏன் நீங்கள் வயிறு நிறையச் சாப்பிடலை?" என்று கேட்டார் ஆசிரியர்.

'திருவிழாவும் பொழுதுமாய் இப்படிச் செய்து பழிவாங்கிவிட்டாரே' என்று அவர்களுக்கு ஆசிரியர் மீது கோபம் கோபமாய் வந்தது. அதை எப்படி வெளிக்காட்டுவது. பேசாமலேயே இருந்து விட்டனர்.

"சொல்லுங்கப்பா. ஏன் யாருமே பதில் சொல்ல விரும்பலையா?" என்று மீண்டும் கேட்டார்.

"என்னங்க சார்! பலவிதமான சாதம் பண்ணி வச்சிருந்தாங்க எங்க அம்மா. நீங்க எல்லா சாதங்களையும் சாப்பிட்டதால அதிகமா சாப்பிட முடிந்தது. எங்களைச் சர்க்கரைப் பொங்கலை மட்டும் தானே சாப்பிடச் சொன்னீங்க. ஒரேவிதமான சுவை. அதுவும் இனிப்பு எவ்வளவுதான் சாப்பிடமுடியும்?" என்று தயங்காமல் கேட்டான் மூர்த்தி.

"நீ இப்போது சொன்னது கேள்வியா? பதிலா?" என்று கேட்டார் தமிழாசிரியர்.

அவர் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் மௌனமாக உட்கார்ந்திருந்தனர்.

"சொல்லுங்கப்பா. படிக்கிறதுல தமிழ்ப்பாடம் மட்டும்தான் உங்களுக்குப் பிடிக்குது. அதை மட்டும் உங்களால அளவுக்கு அதிகமா மனசில பதித்துக் கொள்ள முடியுது. மற்ற பாடங்களை மட்டும் பிடிக்கமாட்டேங்கிறது. இப்ப உங்க அம்மா பண்ணி இருந்தாங்களே பலவிதமான சாப்பாடு. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையான சுவை. அந்தச் சாப்பாட்டிலே ஒரேயொரு சுவையை மட்டும் சாப்பிட உங்களால் முடியலை. ஆனா, படிக்குறதுல மட்டும் தமிழங்கிற ஒரே ஒரு சுவை மட்டும் போதும் என்று நினைக்கிறீங்களே அது மட்டும் ஏன்?" என்று கேட்டார் தமிழாசிரியர்.

அப்போதுதான் அவர்களுக்கு உண்மை புரிந்தது.


"சார். எங்களை மன்னிச்சிடுங்க. எங்களோட தவறுகளைப் புரிஞ்சுக்கிட்டோம். அறுசுவையும் இருக்கும்போது நம்ம நாக்கு ருசிக்குது. அதே மாதிரி பல பாடங்களை இணைத்துப் படிக்கும்போது தான் கல்வியும் அறிவை வளர்க்கும். நாங்க உணர்ந்துக்கிட்டோம்." என்றனர் மூவரும்.

அவர்கள் மூவருக்கும் கல்விச் சுவையை உணர வைத்த திருப்தியில் விடை பெற்றுக் கிளம்பினார் தமிழாசிரியர் பூவலிங்கம்.

"அந்தக் கால் நடை மருத்துவரின் பைக் ரிப்பேர் ஆயிடுச்சா? அப்புறம் எப்படி வீட்டிற்குப் போனார்?"

"கால் நடையாகத்தான்!"

— கெட்டிச் செவியூர் க.பழனிச்சாமி





கோகுலம் நியூஸ்

ஏலம்!

குளோனிங் முறையில் உருவாக்கப்பட்ட பசுக்கள் ஏலத்திற்கு விடப்பட உள்ளன. அமெரிக்காவில் விஸ்கான்சின் மாநிலத்தில் மேடிசன் நகரில் மிகப் பெரிய பண்ணைக் கண்காட்சி நடைபெற்று வருகிறது. இக் கண்காட்சியில் குளோனிங் பசுக்களும் ஏலம் விடப்படுகின்றன. 22 லட்சம் முதல் 44 லட்சம் வரை இவை ஏலம் போகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கழிவிலிருந்து ஓடு!

கழிவுப் பொருட்களை மறு உபயோகம் செய்வது பரவலாக நடந்து வருவது. முன்பு குப்பையிலிருந்து மின்சாரம் உருவாக்கினார்கள். தற்போது சீனர்கள் குப்பையிலிருந்து ஓடுகளை உருவாக்கும் புதிய தொழில் நுட்பத்தைக் கண்டுபிடித்துள்ளனர். வடக்கு சீனாவின் டியான்ஜின் நகரில் இதற்கான இயந்திரத்தை உருவாக்கியுள்ளனர். இந்த இயந்திரத்தில் கொட்டப்படும் குப்பைகள் ஏழே நிமிடங்களில் ஓடுகளாக உருமாறி விடுகின்றன. இந்த ஓடுகளைத் தேவையான வண்ணங்களில் தயாரிக்க முடியும். நடைபாதைகளில் செங்கற்களுக்குப் பதிலாக உபயோகப்படுத்தலாம். மேலும் இந்த ஓடுகளைக் கொண்டு வேலிகள், வெள்ளப் பெருக்கத்தைத் தடுக்கும் கரைகளை அமைக்கலாம். ஒரு டன் குப்பையிலிருந்து 26 சதுர மீட்டர் ஓடுகள் தயாரிக்கலாம். டியான்ஜின் நகரில் தினமும் 300 டன் குப்பைகளை உபயோகித்து ஆண்டுக்கு 20 லட்சம் சதுர மீட்டர் ஓடுகளைத் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளனர்.

பெரிய விமானம்

'ஸ்புருஸ்கூஸ்' என்பது உலகிலேயே மிகப் பெரிய விமானம். மரத்தாலான இந்த ராணுவச் சரக்கு விமானத்தின் இறக்கை மட்டும் 320 அடி நீளம்! அமெரிக்காவின் எவர்கிரீன் விமான நிலையத்தில் இருக்கும் இந்த விமானம் சோதனை ஓட்டமாகச் சிறிது தூரம் பறந்துள்ளது. விரைவில் தனது முழு சேவையையும் தொடங்க உள்ளது.

பேசும் ரோபோ!

கடின வேலைகளுக்கு ரோபோக்களை தற்போது பல நாடுகளில் பயன்படுத்துகின்றனர். ஆனால் ஜப்பானைப் பொறுத்தவரை ரோபோக்களின் ஆதிக்கம் சர்வசாதாரணமாகி விட்டது. அங்கு ரோபோ செல்லப் பிராணிகள் அதிகமாக விற்கப்படுகின்றன. இந்தச் செல்லப் பிராணிகள் நடக்க, ஓட மட்டுமல்லாமல் பேசவும் செய்கின்றன. மூன்று மாதங்களுக்கு முன்பு ரோபோ மீன்கள் உருவாக்கப்பட்டு கண்ணாடி தொட்டிகளில் விற்கப்பட்டன. நிஜ மீனைப் போல் அத்தனை வேலைகளையும் செய்தன ரோபோ மீன்கள். இப்போது பேசும் பொம்மை ரோபோக்களுக்குக் குழந்தைகளிடத்தில் அதிக வரவேற்பு!

விளையாட்டு அரங்கம்

சிட்னியில் கோலாகலமாக ஆரம்பித்து முடிந்து விட்டன ஒலிம்பிக்ஸ் போட்டிகள். 199 நாடுகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் பங்கேற்றனர். 80 நாடுகள் பதக்கப்பட்டியலில் இடம் பெற்றுள்ளன. இதில் பதக்கங்களை அதிகமாக வென்ற அமெரிக்கா முதல் இடத்தையும் ரஷ்யா இரண்டாவது இடத்தையும், சீனா மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளன. அமெரிக்கா பெற்ற 97 பதக்கங்களில் தங்கம் 39, வெள்ளி 25, வெண்கலம் 33. ரஷ்யா தங்கம் 32, வெள்ளி 28, வெண்கலம் 28 மொத்தம் 88 பதக்கங்கள். சீனா பெற்ற 59 பதக்கங்களில் தங்கம் 28, வெள்ளி 16, வெண்கலம் 15. போட்டி நடத்திய ஆஸ்திரேலியா நான்காவது இடத்தில் உள்ளது.



• மரியான் ஜோன்ஸ்

நம்மை விடச் சிறிய நாடுகள்கூட போட்டி போட்டுக் கொண்டு பதக்கங்களைக் குவித்துள்ளன. பளு தூக்கும் போட்டியில் ஒரே ஒரு பதக்கம் வென்ற இந்தியா 70வது இடத்தில் வருகிறது.

இந்த ஒலிம்பிக்ஸில் பதக்கம் கிடைக்கும் என அதிகமாக எதிர்பார்க்கப்பட்ட ஹாக்கி அணி விளையாடிய நான்கு ஆட்டங்களில் இரண்டில் டிரா செய்து அரையிறுதிக்கு நுழையும் வாய்ப்பையே இழந்துவிட்டது. இவ்வளவுக்கும் இந்தியா சில ஒலிம்பிக்ஸ் போட்டிகளுக்கு முன்பு வரை 8 முறை தங்கம் வென்று சாதனை படைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. தற்போது இந்திய ஹாக்கி அணி ஏழாவது இடத்தைப் பிடித்துள்ளது.

அதற்கடுத்து சென்ற ஒலிம்பிக்ஸில் வெண்கலம் வென்ற லியாண்டர் பயஸ் இந்தப் போட்டியில் பெரும் ஏமாற்றத்தை அளித்தார்.


துப்பாக்கிச் சுடும் போட்டியில் அஞ்சலி வேத்பதக் இறுதிப் போட்டி வரை சென்று தோற்றுப் போனார். இந்தியாவிலிருந்து இறுதிப் போட்டிக்குச் சென்ற முதல் வீராங்கனை அஞ்சலி.

இந்த ஒலிம்பிக்ஸ் போட்டிகளில் முதல்முறையாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட விளையாட்டுகள் பெண்கள் மல்யுத்தம் மற்றும் பளு தூக்குதல்.

இதில் பளு தூக்கும் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்று நாட்டிற்குப் பெருமை தேடித் தந்தார் கர்ணம் மல்லேஸ்வரி. ஆந்திர மாநிலம் ஸ்ரீகாகுளம் மாவட்ட ஊசவாணிபலேம் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர் மல்லேஸ்வரி.

சாதாரண ஏழைக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர். கூடப் பிறந்தவர்கள் மூன்று சகோதரிகள் மற்றும் ஒரு சகோதரர். அனைவரும் விளையாட்டுத் துறையிலேயே இருக்கிறார்கள். மல்லேஸ்வரியின் கணவரும் ஒரு பளு தூக்கும் வீரர்தான்!

இதற்கு முன் ஆசியப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றதும் இரு முறை உலகச் சாம்பியன் பட்டம் வென்றதும்தான் இவரை





• ஆண்டிரியா ராடுகன்

சாதனை நாயகி மல்லேஸ்வரி!

ஒலிம்பிக்ஸில் பங்கேற்க வைத்தது.

வெண்கலம் வென்றது மூலம் 75 லட்ச ரூபாய் பரிசாகக் கிடைத்திருக்கிறது மல்லேஸ்வரிக்கு. இது தவிர ஹரியானாவில் இவர் வசிப்பதால் ஹரியானா அரசு .25 லட்ச ரூபாய் வழங்க உள்ளது. "இந்தத் தொகைகளை வைத்து கிராமப்புறங்களில் ஜிம் நிறுவி இளைஞர் இளைஞிகளுக்குப் பளு தூக்குதலில் பயிற்சியளிக்கப் போகிறேன். அடுத்த ஒலிம்பிக்ஸில் பளு தூக்கும் பிரிவில் நம் நாடு தங்கம் வெல்ல வேண்டும் என்பதே என் ஆசை" என்கிறார் மல்லேஸ்வரி.



சிட்னி ஒலிம்பிக்ஸில் தனியொரு மனுஷியாக பதக்கங்களைக் குவித்தவர் மரியான் ஜோன்ஸ். போட்டியில் பங்கேற்கும் முன்பே "ஐந்து தங்கப்பதக்கங்களை வெல்வேன்" என்றார் மிகுந்த நம்பிக்கையுடன். ஆனால் தடகள விளையாட்டுகளில் 3 தங்கப்பதக்கங்களும்

• வீனஸ் வில்லியம்ஸ், செரீனா வில்லியம்ஸ்





• மௌரீஸ் கிரீன்



• கேத்திப்ரீமென்

2 வெண்கலப் பதக்கங்களும் அவர் வென்றார். இவர் பெற்ற மொத்த பதக்கங்கள் 5. மிக அதிவேக வீராங்கனை என்ற பட்டம் பெற்றுள்ள மரியான் ஜோன்ஸ் ஆரம்ப காலத்தில் கூடைப் பந்தாட்ட வீராங்கனையாக இருந்தார்.

'தொட்டதெல்லாம் பொன் ஆகும்' என்று சொல்வதுண்டு. அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ் கை பட்டால் ஜெயம் நிச்சயம் என்று நிரூபித்து இருக்கிறார். சென்ற மாதம் அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியில் முதல் முறையாகப் பட்டத்தைப் பெற்றார். அதைத் தொடர்ந்து ஒலிம்பிக்ஸிலும் அவர் ஆதிக்கம் தொடர்ந்தது.

தனி நபர் டென்னிஸில் முதல் முறையாக தங்கப் பதக்கம் பெற்றார் 20 வயது வீனஸ். இந்தப் போட்டியில் மற்றொரு அமெரிக்க வீராங்கனையான மோனிகா செலஸ் வெண்கலம் வென்றார். அதேபோல் இரட்டையர்கள் போட்டியில் தங்கை செரீனாவுடன் சேர்ந்து விளையாடி அதிலும் தங்கத்தைக் கைப்பற்றிக் கொண்டார் வீனஸ்!

உலகச் சாம்பியன், ஒலிம்பிக் சாம்பியன், அதிவேக வீரா என்ற மூன்று பட்டங்களையும் வென்றவர் மௌரீஸ் கிரீன். 100 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் 9.87 விநாடிகளில் கடந்து இந்தச் சாதனையைப் படைத்துள்ளார். இதற்கு முன் மூன்று பட்டங்களை வென்றவர்கள் அமெரிக்காவின் கார்ல் லூயிஸும், கனடா நாட்டுக்காரரும். தற்போது மௌரீஸ் கிரீன்.

மகளிர் ஹாக்கியில் தொடர்ந்து மூன்று முறை ஆஸ்திரேலியாவும், வாலிபால் போட்டியில் தொடர்ந்து மூன்றாவது முறையாக கியூபாவும் சாம்பியன் பட்டங்களை வென்று ஹாட்ரிக் சாதனை புரிந்துள்ளன.


பெண்களுக்கான 400 மீட்டர் ஓட்டத்தில் ஆஸ்திரேலியாவின் கேத்தி ப்ரீமென் தங்கப்பதக்கம் வென்றார். இவர் பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர். பழங்குடி இனத்தைச் சேர்ந்த ஒருவர் தங்கம் வெல்வது இதுவே முதல் முறை. இந்தப் பிரிவில் 20 ஆண்டுகளுக்குப் பின் ஆஸ்திரேலியாவுக்குத் தங்கம் கிடைத்திருக்கிறது.

ருமேனியாவைச் சேர்ந்தவர் ஆண்டிரியா ராடுகன். இவர் ஜிம்னாஸ்டிக்ஸில் இரண்டு தங்கப் பதககங்கள், ஒரு வெள்ளிப் பதக்கம் வென்றார். 17 வயதாகும் ராடுகன் ஜலதோஷத்திற்காக உண்ட மாத்திரையில் போதை மருந்து கலந்திருந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டதால் ஒரு தங்கப் பதக்கத்தை இழக்க நேரிட்டது.

பதக்கங்களைக் குவித்த நாடுகளும் பதக்கம் பெறாத நாடுகளும் ஒலிம்பிக்ஸில் இன்னும் முனைப்புடன் செயல்பட உறுதி பூண்டு சிட்னியை விட்டுக் கிளம்பின. அடுத்த ஒலிம்பிக்ஸ் ஏதென்ஸில் நடைபெற உள்ளது. ஒலிம்பிக்ஸ் போட்டிகளின் கோலாகலம் அடங்குவதற்குள் ஊனமுற்றவர்களுக்கான ஒலிம்பிக்ஸ் போட்டிகளை நடத்தத் தயாராகி விட்டது சிட்னி.

Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-

ஐந்து வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!



விடை : 1. கப், 2. நாயின் வால்,
3. நாயின் கழுத்துப் பட்டை,
4. சிறுமியின் வளையல்,
5. முன் கரண்டி.




''மாடு வாங்க லோன் கேட்கறிங்களே எப்படி கட்டுவீங்க?''


''கயிறுபோட்டுத் தான்!''

- பீ. சுரேஷ்,
பேராவூர்.

வண்ணம் தீட்டுங்கள்




மொத்தம் எத்தனை வாகனங்கள் உள்ளன?



பிருந்தாவனம்

இங்குள்ள பொருட்களில் ஒன்று மட்டும் தனித்து இருக்கிறது. அது என்ன?



விடை : முக்கோண மானி

விடை : 46

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / Chief PMG-154 / 2000*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 50 * Registered as a Newspaper in Srilanka

